கல்கி

Kalki 18.12.83 ரூ.1.20



PHILIPS

பிலிப்ஸ்

இந்த 60W லாம்ப், 100W பல்பு தரும் ஒளியைத் தருகிறது.





மின் கட்டணத்தில் 24 ரூபாய் மிச்சம்.

பிலிப்ஸ் ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ்.

ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ்-தேவையான இடத்திலே அதிக ஒளியைக் குவித்துப் பாய்ச்சும் வகையிலே பனிப்படலம்போல் பூச்சுள்ள சாரம் கொண்டது. இப்படி குவித்த ஒளிக்கதிர் காரணமாக, 60W ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ், சாதாரண 100W பல்பு தரும் ஒளியினைத் தருகிறது. நீடித்திருக்கும் ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ், உமது மின் கட்டணத்திலே, ஆண்டுக்கு 24 ரூபாய் சேமிக்கிறது. படிக்க, ஓவியம் தீட்ட, வரைய, நிட்டிங் செய்ய மிகச் சிறந்தது இந்த லாம்ப்.

40W மற்றும் 60W வகைகளில் கிடைக்கும்.

**பிலிப்ஸ் ஆர்ஜென்ட்டா ஸூப்பர்லக்ஸ்—
100W பல்பின் ஒளிதரும் 60W லாம்ப்.**

HTB-PEI-9727

பிலிப்ஸ்—ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வீடுதோறும் விளங்கும் நம்பகமான பெயர்

விருதுகள் விவகாரம்

விருதுகள் மழையாகப் பொழியும் சங்கீத சீசனில், சென்னையிலுள்ள இசை ஸ்தாபனங்கள் வழங்கும் முக்கியமான மூன்று பட்டங்களான சங்கீத கலாநிதி, இசைப் பேரறிஞர், சங்கீத கலாசிகாமணி ஆகியவற்றை, எந்த முறையில் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து வழங்குகிறார்கள்?


அதிகப்படியான சர்சைகளுக்கும், விவகாரங்களுக்கும், கிசுகிசுக்களுக்கும் இசைக் கலைஞர்களிடையேயும், ரசிகர்களிடையேயும் பெயர் போன மியூசிக் அகாதமியில் – சங்கீத கலாநிதி விருது வழங்கத் துவங்கிய புதிதில், நிர்வாகக் குழு கூடி, அந்தச் சமயத்தில் யார் சீனியர் வித்துவான், யார் தகுதியானவர் என்று அவர்களுக்குப் படுகிறதோ



என். ராமச்சந்திரன்

அவர்களுக்குக் கொடுத்தார்களாம். சீனியாரிடி, வயது, சங்கீத உலகில் அவருடைய ஸ்தானம் அல்லது சேவை இவற்றை மனத்தில் கொண்டு இந்தத் தேர்வு நடைபெற்றதாம். இதில் தலைவர் தவிர, ஆறு உப தலைவர்கள், நான்கு காரியதரிசிகள், 12 பேர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் எல்லோரும் பங்கு கொண்டு **ஏகமனதாகத்** தேர்வு செய்தார்களாம்.

பத்து வருடங்களுக்கு முன்னால், அறுபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் கொண்ட சங்கீத நிபுணர்கள் குழு (Experts' Committee), தங்களையும் கலந்துகொண்டு தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாம். இதற்குப் பிறகு தான் ஓட்டுப் எடுப்பு முறை வந்தது. ரகசிய ஓட்டெடுப்பு முறையில் 1, 2, 3 என்று அவர்கள் விருப்பப்படி தேர்வு செய்து பெயர் எழுதி அனுப்பச் செய்தார்கள். யாருக்கு அதிக ஓட்டுக் கிடைத்ததோ அவருக்கு விருது வழங்கினார்கள். இதில்



டி. சங்கரன்

கொஞ்சம் 'ஜனநாயக மணம்' வீசினாலும் சம்பந்தப்பட்ட சிலர் தமக்கு ஆதரவாகக் 'கான்வஸ்' செய்ய ஆரம்பித்தார்கள். பிரசாரம் கூடப் பண்ணத் துவங்கினார்கள். இதெல்லாம் ரசாபாசங்களுக்கு இடமளித்ததுடன் தோல்வியுற்ற கலைஞர்கள் மிகவும் மனம் நொந்து போயினர். கலைஞர்கள் மனம் வாடுவதை நிர்வாகிகள் விரும்பவில்லை. மேலும் விருதுக்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது நான்கு மாநிலங்களைச் சேர்ந்த கலைஞர்களின் தகுதியையும் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது. இதையெல்லாம் மனத்தில் கொண்டு, பழையபடி நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கும் 'ஏகமனதான தேர்வு முறை'யே சிலாக்கியமானது என்ற முடிவுக்கு வந்து விட்டார்களாம். (வம்பு இருந்தாலும் வழக்கு இல்லை பாருங்கள்!) இனி வரும் ஆண்டுகளிலும் இந்த முறையே பின்பற்றப்படும் என்று தலைவர் வரையில் முடிவு எடுத்திருப்பதாகத் தெரிவித்தார், செயலர்களில் ஒருவரான இசையறிஞர் திரு. டி. எஸ். பார்த்தசாரதி.

இந்த 'ஏகமனது' விவகாரம் தான் இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸிலும் செல்லுபடியாகிறதுபோலும். தலைவர், செயலர், நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கூடி, இந்த ஆண்டு யாருக்குக் கொடுப்பது என்று சில பெயர்களை வைத்துக் கொண்டு விவாதிக்கிறார்கள். பெரும்பாலும் எல்லோரும் ஒரு கலைஞரின் பெயரையே ஒப்புக் கொண்டு விட்டால் எளிதில் விஷயம் முடிந்துவிடும். ஆனால் சில வேளைகளில் வேறு ஒரு கலைஞரின் பெயரையும் நிர்வாகக் குழு சிபாரிசு செய்யும் பட்சத்தில் என்ன ஆகிறது? நாம் எதிர்பார்க்கிறபடி பெரிய குடுமிப்பிடிச் சண்டை ஏதும் நிகழ்வதில்லை

டி. எஸ். பார்த்தசாரதி



இங்கே, தலைவர் தலையிட்டு இன்னாருக்குத் தான் கொடுக்க வேண்டும் என்று தீர்மானமாகச் சொல்லி விடுவாராம். இதுதான் இறுதியான, உறுதியான முடிவு. இதற்கு மேல் அப்பீல் இல்லை. இதுவரை தகராறுகள் ஏதும் வந்ததில்லையாம். ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகத்தான் வரலாறும். புதிதாக ஒரு விவரமும் தெரிய வந்தது: அதாவது இந்தியா முழுவதிலுமுள்ள ரசிகர்களே ஏராளமாகக் கடிதம் எழுதியும் செயலரை நேரில் சந்தித்தும், தகுதியுள்ள கலைஞர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்வதுண்டாம். நிர்வாகக் குழு இவர்கள் பெயரையும் விவாதிப்பதுண்டாம். இந்த வருடம் கூட, 'ஆந்திர வித்துவான்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களில் ஒருவரைக் கூட நீங்கள் கௌரவிக்கவில்லையே இதுவரை? என்று ஒரு காரசாரமான கடிதம் வந்ததாம். ''ஆந்திராவைச் சேர்ந்த டாக்டர் எஸ். பினாகபாணி அவர்களை விருது கொடுத்துக் கௌரவித்தது

ஒரு நடனம் ஒரு நினைவு

எட்டு நடனக் கலைஞர்களிடம் ஒரே கேள்வி கேட்டோம்.

''ஏதேனும் ஒரு பதத்துக்கு அபிநயம் பிடிக்கும்போது ஓர் அனுபவம் நினைவுக்கு வருவதுண்டா? மறக்க முடியாத அந்த அனுபவம் என்ன?''

விடைகள் இந்த இதழின் பல்வேறு பக்கங்களில் இடம்பெற்று இந்தக் கலை விழா சிறப்பிதழுக்குச் சுவை கூட்டுகின்றன.

நாங்கள் தான் என்பதை இந்த ரசிகர் மறந்து விட்டார் போல் இருக்கிறது!'' என்றார் திரு. என். ராமச்சந்திரன்.

'தமிழிசை'யைப் பொறுத்தவரை, உட்குழுவுக்குத் தான் சகல அதிகாரங்களும் போலும். இந்த உட்குழு வருடா வருடம் அமைக்கப்படுகிறதாம். தலைவரும் செயலருமே இதை அமைக்கிறார்கள். இந்த உட்குழுவில் ஏற்கெனவே 'இசைப் பேரறிஞர்'களான சிலரும் அங்கம் வகிக்கிறார்கள். இசைக்கல்லூரியின் இயக்குனரும் கரஸ்பாண்டெண்டுமான தாமும் ஓர் உறுப்பினர் என்றார் திரு. டி. சங்கரன்.

தமிழிசைக்கு யார் அதிகம் பாடுபட்டிருக்கிறார்கள், உழைத்திருக்கிறார்கள்; அதில் மூத்தவர் யார் என்பதை எல்லாம் கருத்தில் எடுத்துக் கொள்கிறார்கள். செயலர் தயாரிக்கும் பட்டியலில் இவர்கள் பெயர் எல்லாம் இடம் பெற்றிருக்குமாம். இதுதவிர வேறு தகுதியான நபரின் பெயர் சிபாரிசு செய்யப்பட்டாலும் — உதாரணமாக நாட்டிய விற்பன்னர்கள், பாடலாசிரியர்கள், இசையறிஞர்கள், நட்டுவனார்கள் — விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளுவார்களாம். செயலரும், உட்குழு உறுப்பினர்களும் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து, தகுதியான நபர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, ஆட்சிக் குழுவுக்குச் சிபாரிசு செய்யுமாம். அந்தப் பெயரையே ஆமோதித்து, அறிவித்துவிடுமாம் ஆட்சிக்குழு. ஆக, ஆட்சிக் குழுவுக்குப் பெரிய பொறுப்பு ஒன்றும் இல்லை என்று தெரிகிறது.

இந்த விவகாரத்துடன் இணைந்து, இன்னொரு கேள்வியும் எழுகிறது பிற்பகல், மாலை, இரவு நிகழ்ச்சிகளில் இன்னின்ன கலைஞர்கள் (குறிப்பிட்ட நேரத்தில்) பாட வேண்டும் என்று நிகழ்ச்சி தயாரிக்கிறார்களே, இதுகூட இந்த நிறுவனங்களில் உள்ள சில தனிப்பட்ட நபர்களின் விருப்பு வெறுப்புகளைப் பொறுத்தது என்றும் அவர்களை அடிக்கடி நேரில் பார்த்துச் சலாம் செய்ய வேண்டும் என்றும் பேசப்படுகிறது. (ஒரு புகழ்பெற்ற இளம் வீணைக் கலைஞரிடம் 'நீங்கள் ஏன் இந்த வருடம் எங்கேயும் வாசிக்கவில்லை?' என்று கேட்டபோது, 'எல்லாரும் தான் துக்கம் விசாரிக்கிற மாதிரி கேட்கிறார்கள்! விவரம் தெரிந்த நீங்களுமா?' என்று திருப்பிக் கேட்டார். 'நான் நேரில் போய் எனக்கு சான்ஸ் கொடுங்கள் என்று கேட்க முடியுமா?' என்று கேட்டார் மேதையான இந்தப் பேதை).

மூன்று நிறுவனங்களிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான முறைதான் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கக் கையாளப்படுகிறது.

1. முதலில் பிரபலமான வித்துவான்களின் பட்டியல் ஒன்று தயாரித்துவிடுகிறார்கள். இதில் சில பேரை, ரசிகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதற்காக ஒவ்வொரு வருடமும் கட்டாயம் போட வேண்டியதிருக்கிறது.

2. மற்ற சில வித்துவான்கள் போன வருடம் பாடியிருந்தால் அவர்களை விட்டு விட்டு, புதிதாகப் பாடும் சிறந்த கலைஞர்களுக்கு இடம் கொடுக்கிறார்கள்.

3. அடுத்தபடி இளம் கலைஞர்கள், இவர்களுக்குப் பிராபல்யம் கிடைக்கவேண்டும் என்பதற்காக, சில வருடங்களுக்குத் தொடர்ந்து சான்ஸ் கொடுக்கிறார்கள். இவர்கள் சீனியரான பிறகு (வயதிலா, பாட்டிலா?) மாலை நிகழ்ச்சிகள் கொடுக்கிறார்களாம்.

4. கடைசியாக, புதிதாக மேடை காணத் துவங்கியிருக்கும் இளம் கலைஞர்கள். இளம் கலைஞர்களிடமிருந்து நூற்றுக் கணக்கில் விண்ணப்பங்கள் வருகின்றனவாம். இவற்றைத் தீர்மானிக்கும்பொழுது இவர்களது குருவின் சிபாரிசு, குழுவிலுள்ள சிலர் இவர்களது இசையைக் கேட்க நேரிட்டபின் தரும் மதிப்பீடு இவை கருத்தில் கொள்ளப்படுகின்றன.

-நமது நிருபர்



திருமணம் மற்றும் இதர சுபநிகழ்ச்சிகளுக்கு
சாரதா'ஸ் பட்டுப் புடவைகள்
விசேஷ புகழ் பெற்றவை
சாரதா'ஸ்
(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)
தன் பில்டிங்
மவுண்ட் ரோடு
சென்னை-600 002
போன் : 87177
N.S.B. ரோடு
திருச்சி-620 002
போன் : 27077
SARATHA'S
MADRAS & TRICHY

கிருஷ்ண நாதம்

"சுமார் நாற்பது வருடங்களுக்கு முன், நயினார்கோவிலில் நாகநாதசுவாமி ஆலய கும்பாபிஷேகத்தின் போது குருவுடன் வாசித்துக் கொண்டிருந்தேன். மோகன ராகத்தில் ஓர் உருப்படி வாசித்துக் கொண்டிருந்தோம். மந்திரம் சொல்ல வேண்டிய ஒரு கட்டத்தில் நாதசுரத்தை நிறுத்தச் சொன்னார்கள். மந்திரம் முடித்த பின் மறுபடி நாதசுரம் வாசிக்கச் சொன்னபோது என் குருநாதர் என்னை ''வாசிடா!'' என்றார். நான் மறுபடி மோகன ராகத்தையே வாசித்தேன். தமது நாதசுரத்தில் சீவாளியோடு கோத்திருந்த தந்தக் குச்சியால் குருநாதர் என் இடது தோளில் குத்தினார். அது உள்ளே ஆழமாகத் தைத்து ரத்தமாக வந்தது. அதைப்பொருட் படுத்தாமல் அப்படியே மோகனத்தைத் தொடர்ந்து வாசித்தேன். பதற்றத்தைக் காட்டிக் கொள்ளவே இல்லை; பொறுமையாக வாசித்து முடித்தேன். ஏன் அப்படிக் குத்தினார் தெரியுமா? மோகன ராகம் வாசித்தாயிற்று முதலில். அது முடிந்தவுடன் வேறு ராகம் தான் வாசித்திருக்க வேண்டும் நான். ஆனால் அதே மோகனத்தை மறுபடி தொடர்ந்து வாசித்ததற்குத் தான் குருநாதர் . அப்படிக் குத்தினார்!

''என் குருநாதர் அருப்புக்கோட்டை திரு. கணேசன் அவர்களிடம் நான்கு வருடங்கள் கற்றுக் கொண்டேன். குருகுலவாச முறை. ஆறே மாதத்தில், குருவுடன் கூடவே கச்சேரிகளுக்கு வாசிக்கப் போவேன்.

''திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை அவர்களை நான் முதலில் சந்திக்கிற போது எனக்குச் சுமார் 20–22 வயதிருக்கும். நான் ஒரு திருமணத்தில் வாசித்துக் கொண்டிருந்தேன். மாலை வரவேற்புக்குப் பிள்ளைபவர்கள் தான் வாசித்தார்கள். ஆனால் அதற்கு முன்னால் என்னை வாசிக்கச் சொல்லிக் கேட்டார். ஒன்றரை மணி நேரம் வாசித்தேன். கேட்டுவிட்டு, என்னைக் கூப்பிட்டு, திருவாவடுதுறைக்கு வந்து அவருடன் கூட வாசிக்கச் சொன்னார். அப்போது எனக்குத் திருமணமாகி ஒரு குழந்தையும் இருந்தது. அதனால் என்னால் வர இயலாத நிலைமையை எடுத்துச் சொன்னேன்.

''இன்னொரு சந்தர்ப்பத்தில், சேலத்தில் பிள்ளையவர்கள் கச்சேரி. நானும் போயிருந்தேன். பல ரசிக அன்பர்கள் சூழ்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். ''கிருஷ்ணனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று சில அன்பர்கள் அவரைக் கேட்டார்கள். ''அற்புதமான வாசிப்பைக் கேட்டேன். (காருக்குறிச்சி) அருணாசலம் எனக்கு அர்ஜுனன் போல ; கிருஷ்ணன் எனக்கு ஏகலைவன் போல!'' என்றார் அந்த மேதை.

''மனைவி கோமளம் வைக்கும் தூரத்து உறவுதான். என் இசையில் மிகுந்த அக்கறையும் ஆர்வமும் உள்ளவள். நான் வாசிக்கும் போது கேட்டுக் கொண்டேயிருப்பாள். என் குருநாதர் செய்து வைத்ததுதான் எங்கள் திருமணம்.

''காருகுறிச்சி அருணாசலம் அவர்களின் பெண் கல்யாணத்துக்கு, கோவில்பட்டியில் நான்தான் கச்சேரி செய்தேன். அதேபோல் என் பெண் கல்யாணத்திற்கு, காருகுறிச்சி தான் நாதசுரம் வாசித்தார்!''

1973–ல் முதல் முறை உலகச் சுற்றுப் பயணம் செய்து விட்டு, மறுபடி 1983–ல் இந்திய அரசின் வெளியுறவுத் துறை ஆதரவில் அமெரிக்கா, கனடா, பாரீஸ், லண்டன் எல்லாம் நாதசுர இசை ஒலிக்கச் செய்தவர் திரு. கிருஷ்ணன்.

லயன்ஸ் கிளப் அங்கத்தினரான ஒரே நாதசுரக் கலைஞர் திரு. கிருஷ்ணன்தான். நாமக்கல் லயன்ஸ் கிளப் இந்தப் பேற்றைப் பெறுகிறது. கிரிக்கெட்டில் அதிக ஆர்வம் உள்ளவர். ஒருமுறை ஆஸ்திரேலியா போன போது, ஸிட்னியில் நீல் ஹார்வியைச் சந்தித்ததும், அவர் தமது வீட்டுக்கு அழைத்து விருந்து கொடுத்ததும் மறக்கமுடியாதவை என்கிறார்.


ஏற்கெனவே உள்ள பட்டங்களுடன், இப்போது, 'இசைப் பேரறிஞர்' பட்டமும் கிடைக்கிறது திரு. கிருஷ்ணனுக்கு. இது தமிழிசைச் சங்கம் கிருஷ்ணனுக்கும் நாதசுரக் கலைக்கும் வழங்கும் கௌரவம்.

ஐம்பத்திரண்டு வயதான திரு.கிருஷ்ணன், தற்போது நாமக்கல்லிலிருந்து ஏழு மைலில் இருக்கும் சேந்தமங்கலத்தில் வசிக்கிறார். மூன்று பெண்கள், மூன்று பையன்கள். பிளஸ்–டு படிக்கும் கடைசிப் பிள்ளையைத் தவிர, எல்லோருக்கும் திருமணமாகி விட்டது. மூத்த மாப்பிள்ளை – சேலம் வானொலி துணை இயக்குனர் திரு. நடராஜன்.


பேட்டி: சித்தார்த்

மேலட்டை வண்ணப்படம்: யோகா




பாத யாத்திரை
கொஞ்சம் இருங்க..! நடக்க வேணும்.. முள்ளு குத்தும்! பூச்செடிகளை நட்டுடறேன்!
இன வெறி
நல்லுறவு


அவர் எங்கே போனா உனக்கென்னய்யா?
காங்கிரஸ்


புரட்சி மளிகைக் கடை
விலைவாசி ஏறவில்லை!
அமைப்பு
அந்த அறிவிப்பு கண்ணை உறுத்துது! இந்த அலறல் காதைக் குடையுது!.. கடையிலே மலிவா கிடைக்கறது, போராட்டம் ஒண்ணு தான்!
அநியாயம்!.. அக்கிரமம்! விலைவாசிகளைக் குறை!
தி.மு.க. போராட்டம்



கல்கி

1983 டிசம்பர் 18
ருத்ரோத்காரி மார்கழி 3
மலர் : 42 இதழ் : 20



வளர்ந்த தமிழகம் தாழ்ந்தது!

நோபல் பரிசுபெற்ற சந்திரசேகரும் மற்றவர்களும் அமைதியாகத் தத்தம் பணிகளைத் தொடர்கிறார்கள். எலிஸபெத் அரசியிடமிருந்து அண்மையில் மிக உயரிய விருது பெற்ற அன்னை தெரஸா ஆர்ப்பாட்டமேதுமின்றி ஏழைகளின் துயர் துடைக்கத் திரும்பிப் போய்விட்டார். தமிழக முதல்வருக்குச் சென்னைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டம் தந்தது. அவ்வளவுதான், தமிழகமே திமிலோகப்படுகிறது! சென்னையில் நடந்த அமர்க்களத்தை அடுத்து இப்போது சேலத்தில் வேறு பாராட்டு விழாவாம். ஏகத் தடபுடல்! வடபழனியில் ஜெயலலிதா பேச வருகிறார் என்றால் இது பூலோகமா இந்திரலோகமா என்று புரியாத அளவில் ஆடம்பர, அலங்கார ஜோடனைகள்! வெளிநாடு சென்று திரும்பிய தலைவர்களுக்குப் போஸ்டர்கள்! உள்ளூரிலேயே இருக்கும் தலைவர்களுக்குப் பிறந்த நாள் விழாக்கள்! தவிர, பட்டா வழங்கு விழா, வேஷ்டி, புடைவை வழங்க விழா என்றெல்லாம் ஆரவாரக் கோலாகலங்கள்! இவையெல்லாம் பார்க்க ஏதோ தமிழகத்தில் பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடுவதுபோல் தோன்றும். இந்த மாயையை உடைத்தெறிந்து உண்மையை உணர்த்தியிருக்கிறார் குகன்.

ஒரு மாநிலத்தில் உற்பத்தியாகும் செல்வத்தை Per Capita State Domestic Product என்ற அளவுகோலால் கணிக்கிறார்கள். தமிழகத்தில் இந்த SDP 60–61–ல் அனைத்திந்திய சராசரியை விட 7.8 சதம் அதிகம். ஆனால் 78–79–ல் அனைத்திந்திய சராசரியை விட 12.1 சதம் குறைவு! இந்த மகத்தான வீழ்ச்சி நடந்த கால கட்டத்தில் ஜனத்தொகைப் பெருக்கமோ மற்ற மாநிலங்களைக் காட்டிலும் இங்கு மிகவும் குறைவு! அவ்வாறிருந்தும் எஸ். டி. பி. குறைந்து கொண்டே வருவதானது மிகுந்த கவலையளிக்கும் ஒரு நிலையாகும். மாநிலங்களிடையே தொழில், வர்த்தகப் பொருளாதார முன்னேற்றத்தில் நான்காவது இடத்தைப் பெற்றிருந்த தமிழகம் ஏழாவது இடத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது! உணவு உற்பத்தியும் அனைத்திந்திய சராசரியுடன் ஒப்புநோக்கையில் தமிழகத்தில் குறைவுதான். தொழில்களில் முதலீடான தொகையும் இதர மாநிலங்களுடன் ஒப்பிட்டால் மிகவும் குறைவு. இப்படிப் பல புள்ளி விவரங்களை அடுக்கிக் கொண்டே போகிறார் குகன்.

சென்னை, அபிவிருத்தி ஆய்வுக் கழகத்தின் சார்பில் திரு. எஸ். குகன் வெளியிட்டுள்ள இந்த ஆய்வுக்காக அவரிடம் யாரும் கோபப்பட வேண்டியதில்லை. மாறாக, பிரத்யட்ச நிலையை உணர்த்தியதற்காக நன்றி கூறவேண்டும். விழாக்களையும் அலங்கார வளைவுகளையும் பார்த்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளாமல் யதார்த்த நிலை உணர்ந்து நம்மை நாமே திருத்திக் கொள்வது புத்திசாலித்தனம்.

இலவசச் சத்துணவும் பட்டாவும், வேஷ்டி புடைவையும் இவற்றுக்கான படாடோபச் செலவினங்களும் தமிழகத்தின் செல்வத்தை வளர்க்காது; வறுமையை விரட்டாது. நாடு வளம் பெற இவை போதாது. தொழில், விவ்சாய வளர்ச்சியில் கவனம் செலுத்தி வேலை வாய்ப்புக்களைப் பெருக்க வேண்டும். தொழில் வளப்பெருக்கத்துக்கு அடிப்படைத் தேவையான மின்சாரம் அனைத்திந்திய ரீதியில் 93 சதம் உயர்ந்துள்ள பத்தாண்டு கால கட்டத்தில் தமிழகத்தில் 49 சதம்தான் உயர்ந்தது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் குகன்.

ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள ஆண்டுகளில் எந்தக் கட்சி இங்கு ஆட்சியில் இருந்தது என்பது முக்கியமல்ல. மூன்று கட்சிகளுமே பதவியில் இருந்திருக்கின்றன. 79–க்குப் பின் நிலைமை வெகுவாக மாறி விட்டதாகவும் எண்ணுவதற்கில்லை. மத்திய அரசு ஒத்துழைக்கவில்லை என்ற நொண்டிச் சமாதானம் வெகு காலம் செல்லுபடியாகாது.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்



அத்தியாயம் 7

பேரரசு பிறந்தது!

அபிமானவல்லி ஆர்வமுடன் கண்களை அகல விரித்து மன்னரை ஏறிட்டு நோக்க, "நான் பிறந்து வளர்ந்த கதையை மட்டுமின்றி என் தந்தை பற்றியும் கூறப்போகிறேன். கவனமாகக் கேள்" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தான் ஆதித்தன்.

* * *

ஆதித்த சோழன் காலத்துக்குச் சுமார் அறுநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் சோழநாடு மகோந்நத நிலையை அடைந்திருந்தது. கரிகால் வளவன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி போன்ற பேரரசர்கள் மிகப் பரந்த சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்தனர். ஆனால் நாளடைவில் இந்நிலை மாறிச் சோழர்களின் பெருமை குன்றியது. அவர்கள் பல்லவருக்கும் பாண்டியருக்கும் மாறிமாறிக் கப்பம் செலுத்தும் அடிமைகளானார்கள். குறுநில மன்னர்களானார்களே தவிர அவர்களுடைய வீரம் மடிந்து விடவில்லை. அது மனத்துக்குள்ளேயே பரம்பரை பரம்பரையாகக் கனன்று கொண்டிருந்தது. அறுநூறு ஆண்டுகளாக அடக்கி வைக்கப்பட்டிருந்த உள்ளக் குமுறல் ஒருநாள் எரிமலையாகப் பொங்கி வெடித்தது. அப்போது தான் விஜயாலயன் முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றி மீண்டும் சுதந்திர சோழ தேசத்தை நிறுவினான். அறுநூறு ஆண்டுக் கனவு நிறைவேறியபோதிலும் ராஜ்ஜியம் என்னவோ உள்ளங்கை அகலமுள்ளதாகத் தானிருந்தது. ஆனால் ஒரு பேரரசுக்கான வித்து அன்று ஊன்றப்பட்டு விட்டது. வித்தை ஊன்றிய விஜயாலயனே அதற்கு நீர்பாய்ச்சி உரமிட்டு ஆலமரமாக வளர்க்கவும் பாடுபட்டான்.

எப்படி எல்லைகளை விரிவாக்குவது? இருபக்கமும் பல்லவப் பாண்டியப் பேரரசர்கள். அவர்களுடன் மோதுவது சாத்தியமா? வெற்றி பெறத்தான் முடியுமா? எனவே விஜயாலயன் இந்த

அபிமானவல்லி

கி. ராஜேந்திரன்



இரு வல்லரசுகளுக்கிடையேயும் கனன்று வரும் பகை நெருப்பை விசிறிப் பெருந்தீயாக வளர்த்து அவர்களை மோத விட்டுப் பார்த்து அதனூடே சோழ தேசத்துக்கு ஆதாயம் தேட முடிவு செய்தான். இத்தத் திட்டத்தையொட்டித் தந்திரமாக நடந்து கொண்டதில் ஒரு முறையல்ல. மூன்று தடவைகள் பல்லவரும் பாண்டியரும் போரிட்டனர். ஒவ்வொரு தடவையும் விஜயாலயன் பல்லவர் பக்கமே துணை நின்றான். முதல் போர் குடமூக்கில் (கும்பகோணம்) நடந்தது. அப்போது விஜயாலயனின் யுக்தி பலிக்கவில்லை. பல்லவனும் சோழனும் அவர்களுடன் சேர்ந்திருந்த கங்கனும் பாண்டியன் பரச்சக்கர கோலாகலனால் முறியடிக்கப்பட்டனர்.

இருப்பினும் விஜயாலயன் மனமுடைந்து போகவில்லை. தனது ரகசியத் திட்டத்தைத் தொடர்ந்து நடத்தினான். மறுபடியும் இருபேரரசுகளுக்கிடையில் பகை கொழுந்து விட்டெரிய வழி வகுத்தான். எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு அரிசிலாற்றங்கரையில் ஒரு மாபெரும் யுத்தம் நடந்தது. இதில் பல்லவர் பக்கம் விஜயாலயன் தவிர ஈழமன்னனும் சேர்ந்து போரிட்டான். இந்தப் போர் தொடங்கு முன்னரே 'வெற்றி பெற்றால் பாண்டியர் வசம் உள்ள சோணாட்டுப் பகுதிகளைத் தனக்கு விட்டுக் கொடுத்து விடவேண்டும்' என்று பல்லவன் நிருபதுங்கவர்மனிடம் நிபந்தனை விதித்தான் விஜயாலயன். பல்லவனும் சோழனின் ஒத்துழைப்பைப் பெறக் கருதி இதற்குச் சம்மதித்தான்.

இந்தப் போரில் வெற்றி அல்லது வீரமரணம் என்ற நோக்கில் முன்னெப்போதையும் விட அதிவீரம் காட்டிப் போரிட்டான் விஜயாலயன். இனி புதிதாகக் காயம்பட்டு வடு தோன்ற இடமேயில்லை என்னுமளவில் அவன் உடலெங்கும் தொண்ணூறு விழுப்புண்கள் ஏற்கெனவே இருந்தன. ஆயினும் இந்தப் போரில் உயிரைத் துச்சமாக மதித்துப் போரிட்டு மேலும் ஆறு ஆழமான புண்களைப் பெற்றான். இப்படி அவன் துணிந்து யுத்தத்தில் ஈடுபட்டதற்கு முக்கிய காரணம் இருந்தது. அவன் மகன் ஆதித்தன் டநிறை பிராயத்தினனாய் ஆஜானுபாகுவான வாலிபனாகவும் மாவீரனாகவும் ஆணழகனாகவும் வளர்ந்திருந்தான். தான் இறந்தாலும் சோழ தேசத்தைத் தனக்குப்பின் ஆள மகன் போதிய வயது வந்தவனாக இருக்கிறான் என்ற தைரியம் விஜயாலயனின் வீரத்துக்கு மேலும் சக்தியளித்தது. எப்படியாவது இந்த முறை வெற்றி அடைந்து சோழ நாட்டைப் பெருமளவு விரிவுபடுத்திப் பெருமையுற வேண்டும் என்ற ஆவேசத்துடன் போரிட்டான். அவன் முயற்சி வீண் போகவில்லை. பாண்டியன் பரச்சக்கர கோலாகலன் தோற்றோடினான்.

ஆனால் விஜயாலயனுக்குப் பெரிய ஏமாற்றம் காத்திருந்தது. குடமூக்குப் போரில் தோல்வி அளித்த ஏமாற்றத்தையாவது தாங்கிக் கொள்ள முடிந்தது. ஆனால் இப்போதோ, அரிசிலாற்றங்கரைப் போரில் மாபெரும் வெற்றிக்குப் பிறகு கிட்டிய ஏமாற்றம் சகிக்க முடியாததாய் இருந்தது. தொண்ணூற்றாறு விழுப்புண்கள் பெற்ற போது அடைந்த வேதனைகளின் ஒட்டுமொத்தமான துன்பத்தை விடவும் இந்த ஏமாற்றம் பெரிய தாக்குதலாய் விளங்கி அவனைத் தடுமாறச் செய்தது. இத்தகைய பெரிய ஏமாற்றத்தை அளித்தவன் பல்லவன் நிருபதுங்கவர்மன். அவன் தன் சகோதரன் கம்பவர்மனின் பேச்சைக் கேட்டு விஜயாலயனை ஏய்த்து விட்டான். பாண்டியர் வசமிருந்து கைப்பற்றிய சோணாட்டுப்பகுதிகளைத் தான் வாக்களித்தது போல் விஜயாலயனுக்கு விட்டுக் கொடுக்காமல் தானே வைத்துக் கொண்டு தனது ஆதிக்கத்தையே விரிவுபடுத்தினான்.

ஏற்கெனவே பல போர்களில் ஒரு கண்ணையும் காலையும், கையையும் இழந்த நிலையில் இருந்த விஜயாலயன் பெரும்மனச் சோர்வடைந்தான். அதன் காரணமாகவே ஆத்திரமும் பொங்கியது. ஆறுதல் கூற வந்த மகன் ஆதித்தனிடம் கோபாவேசத்

ளுடன் கத்தினான்: ''எனக்கு ஆறுதல் தேவையில்லை ஆதித்தா! பழிக்குப் பழி வாங்க வேண்டும். அதைச் செய்வேன் என்று சத்தியம் பண்ணுவாயா! இன்று நிருபதுங்கவர்மன் என்னை வஞ்சித்து அபகரித்துக் கொண்ட சோணாட்டுப் பகுதிகளைத் திரும்பப் பெறுவேன் என்று சூளுரைப்பாயா? நேற்று வரை பாண்டியர் வசமிருந்து இன்று பல்லவன் கைப்பற்றிக் கொண்ட இந்தச் சோணாட்டு நிலப்பரப்பை மீட்டாலும் போதாது! பல்லவர் வசம் ஏற்கெனவே இருந்து வரும் சோணாட்டுப்பகுதிகளையும் விடுவிக்க வேண்டும்! அதன் பிறகு பல்லவ சாம்ராஜ்யத்தையே நமதாக்கிக் கொள்ள வேண்டும்! காஞ்சி சோழநாட்டின் வடதிசைத் தலைநகராக வேண்டும்! இதையெல்லாம் நிறைவேற்றுவாயா மகனே! நமது காவல் தெய்வம் நிகும்பசூதனி சாட்சியாக ஆணையிடுவாயா?'' என்று தனது ஒற்றைக் காலில் நின்று ஒற்றைக் கண்ணை உருட்டி முடமான கரத்தையும் அசைத்து விஜயாலயன் கேட்டது பயங்கரமாயிருந்தது.

''அப்படியே ஆகட்டும் அப்பா! அமைதியாயிருங்கள்!'' என்று வேண்டினான் மகன் ஆதித்தன்.

''அமைதியா? எனக்கு ஏது அமைதி? இன்று நீ எனக்களித்த வாக்குறுதி முழுமையாக என்று நிறைவேறுகிறதோ அன்றுதான் என் மனம் அமைதியுறும். அதற்கு முன் நான் இறந்து போனாலும் என் ஆவி இந்தத் தஞ்சை நகரிலே தான் வளைய வந்து கொண்டிருக்கும். உனக்குச் சதா உன் கடமையை நினைவூட்டிக் கொண்டே இருக்கும்!...''

தந்தை விஜயாலயனின் ஆவேசப் பேச்சை உணர்ச்சி பூர்வமாகக் கூறி வந்த போது ஆதித்தன் தன்னை மறந்த நிலையில் இருந்தான். விஜயாலயனின் ஆவிதான் இப்போது கூட அவனுக்குள் புகுந்து கொண்டு பேசுகிறதோ என்று எண்ணும்படி அவன் உடல் பதறியது; வியர்த்துக் கொட்டியது.

அபிமானவல்லி நடுங்கினாள். ''பிரபோ! எனக்குப் பயமாயிருக்கிறது! சற்று அமைதியாயிருங்கள்!'' என்று அவன் தோள்களைத் தட்டியும் நெஞ்சைத் தடவியும் கயிற்கட்டிலருக்கு கொணர்ந்தாள். முந்தானையால் அவன்முகத்தில் அரும்பியிருந்த வியர்வையை ஒற்றி அகற்றினாள். பழரசம் கொண்டு வந்து தந்தாள். ''மன்னவா! இதைச் சற்று பருகுங்கள்! நீண்ட நேரம் பேசியதில் தொண்டை வரண்டிருக்கும்'' என்றாள். கோப்பையை வாங்காமல் அவள் கரத்தைப் பற்றிப் பாண்டத்திலிருந்த பழரசத்தை ஒரு மிடறு விழுங்கினான். போதுமென்று சைகை காட்டினான். அவள் கோப்பையை எட்டத்திலிருந்த முக்காலி மீது வைத்துவிட்டு மறுபடி தரையில் அமர்ந்தபோது அவனுக்கு முன்னிலும் நெருங்கி வந்திருந்தாள்— உடலாலும், மனத்தாலும். அவன் கரங்களை இயல்பாகப் பற்றியபடி, ''பிரபோ! நீங்கள் தான் தந்தைக்குக் கொடுத்த வாக்குறுதியை அவர் காலத்திலேயே நிறைவேற்றி விட்டீர்களே! பிறகு ஏன் இந்தப் பதற்றம்?'' என்று வினவினாள்.

அவள் மென்விரல்களைத் தன் அகன்ற உள்ளங்கைகளுக்கிடையில் சிறைப்படுத்திய ஆதித்தன், ''அவர் காலத்தில் வாக்குறுதியை ஓரளவுக்குத்தான் நிறைவேற்றினேன். வல்லி! இன்னும் செய்து முடிக்க வேண்டியவை எவ்வளவோ பாக்கியுள்ளன. ஆனால் அப்படிப் பகுதி அளவு நிறைவேற்றவே நான் பதினெட்டு ஆண்டுகள் பொறுமையுடன் காத்திருக்க நேர்ந்தது...'' என்று கூறியதோடு கதையைத் தொடர்ந்தான்:

பாண்டிய நாட்டில் பரச்சக்கரகோலாகலனுக்குப் பின் அவன் மகன் இரண்டாம் வரகுணன் பட்டத்துக்கு வந்தான். பல்லவப் பேரரசிலும் ஆட்சி மாறியது. நிருபதுங்கனின் மகன் அபராஜிதவர்மன் அரியணை ஏறினான். அரிசிலாற்றங்கரைப் போருக்குப் பின் பதினெட்டாண்டுகளுக்குப் பிறகு வரகுண பாண்டியன் தன் தந்தை பல்லவனிடம் இழந்த சோணாட்டுப் பகுதிகளைத் திரும்பப் பெறக் கருதித் திடீரென்று இடவையைத்

உமா மகேஸ்வரி:
குரு: சுவாமிமலை ராஜரத்தினம்

''கிருஷ்ண கான சபாவில் போன வருஷம் பொங்கலன்று ஒரு பதத்துக்கு அபிநயம் பிடித்தேன். நாயகனைக்கண்டு, நாயகி ''வேண்டாம் என்று சொன்னேனே கேட்டாயா?'' என்று வினவுவது போன்ற பாவம்...

முன்னால் அமர்ந்துகொண்டிருந்த என் பாட்டி (பிருந்தா) என்னைப் பார்த்து நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தார். காரணம் என்னவென்றால் அவர் பேச்சை மீறி மூன்று நாள் ஊட்டி — பெங்களூர் 'எக்ஸ்கர்ஷன்' சென்று ஜலதோஷமும் மூக்கடைப்புமாகத் திரும்பினேன். நிகழ்ச்சியும் முன்னாலேயே ஏற்பாடாகி விட்டதால் கான்சல் பண்ண முடியாத நிலை... குறிப்பிட்ட பதத்துக்கு ஆடும்போது என் பாட்டியார் என்னைக் கண்டே வினவுவது போல் தோன்றியது! இருந்தாலும் அந்த லேசான உடல்நிலை அசௌகரியத்தை மீறி நிகழ்ச்சி நன்றாக அமைந்தது எனக்குத் திருப்தி.



தாக்கினான். அப்போது இளவரசன் ஆதித்தன் பல்லவப் பேரரசன் அபராஜிதனுக்கு அவசரத் தூது அனுப்பிவிட்டு அவன் வரும் வரை காத்திராமல் தன் படைகளுக்குத் தலைமை தாங்கி இடவை சென்றான். வரகுணபாண்டியனைப் போரில் சந்தித்து அவன் முன்னேறுகிற வேகத்தைக் கட்டுப்படுத்தினான். இந்தக் கால தாமதம் பல்லவ வேந்தனுக்குப் பேருதவியாக இருந்தது. அவன் இதற்குள் பெரும்படை திரட்டிக் கொண்டு கங்க மன்னனும் துணை வர விரைந்து வந்தான். திருப்புறம்பயத்தில் மாபெரும் யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தின் பயங்கரம் வர்ணனைக்கு அப்பாற்பட்டது. இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கான தலைகள் உருண்டன. உதிரப்பட்டி என்றே அவ்விடம் பெயர் பெறும் அளவில் ரத்தம் ஆறாக ஓடியது. இந்தப் போரில் கங்க மன்னன் பிருதிவிபதி வீர சொர்க்கம் எய்தினான். அவனுக்கு அங்கேயே ஒரு நடு கற்கோயில் எடுக்கப்பட்டது...

பழைய துயர நினைவுகளில் ஆழ்ந்து நிறுத்தினான் ஆதித்தன்.

"பிரபோ! போரின் விளைவு என்னவாக இருந்தது?" என்று தூண்டினாள் அபிமான வல்லி.

"வல்லி! அதைக் கேட்கவும் வேண்டுமா? அண்மைக்கால வரலாறுதானே? சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் நடந்த யுத்தத்தின் முடிவு பற்றி உனக்கே தெரிந்திருக்குமே?" என்றான் ஆதித்தன்.

"வரகுண பாண்டியன் தோற்றுப் பின் வாங்கி ஓடிப்போனான் என்பது தெரியும். ஆனால் நான் அதைக் கேட்கவில்லை. இந்தப் போரின் விளைவாகச் சோழ நாடு பேரரசாக விரிவடைந்ததல் லவா, அது எப்படி? பல்லவேந்திரர் எப்படி நடந்து கொண்டார்? தம் உரிமைகளை எப்படி விட்டுக் கொடுத்தார்? நீங்கள் வாதாடிப் போராடிப் பெற வேண்டியிருந்ததா?"

"அதுதான் அதிசயம் வல்லி! பல்லவன் அபராஜிதவர்மன் போரின் முடிவில் என்னை அப்படியே கட்டி அணைத்துக் கொண்டான். 'சூரியகுலத் தோன்றலே! ஆதித்தன் என்ற பெயருக்கேற்ப இந்தப் போரில் பிரகாசித்தாய்! உன் வீரம் வாழ்க, வளர்க!' என்று கண்கள் பனிக்க என்னைப் போற்றினான்!"

"இன்னுயிர் நண்பனாகிய கங்கமன்னன் பிருதிவிபதி இறந்ததால் ஏற்பட்ட துயரையும் மீறி உங்களை வாழ்த்த முன் வந்தாரெனில் உங்கள் வீரம் அவரை அந்த அளவுக்குக் கவர்ந்ததாக அர்த்தம்" என்றுபெருமிதம் பொங்கிய குரலில் கூறினாள் அபிமானவல்லி.

"வல்லி! அபராஜிதவர்மனின் பெருந்தன்மை வெறும் வாழ்த்தோடு நிற்கவில்லை. இடவையில் நான் சோணாட்டின் சிறுபடையுடன் வரகுணபாண்டியனைப் பல நாட்கள் தடுத்து நிறுத்தித் தாமதப்படுத்தியிராவிட்டால் இந்தப் போரின் போக்கும் முடிவும் முற்றிலும் வேறு விதமாயிருந்திருக்கும் என்று வாய்விட்டுக் கூறிப் பாராட்டினான். அந்நேரத்தில் எனது வீரர்களும் சோழ

நாட்டு மக்களும் பெருந்துன்பங்களைச் சகித்துக் கொண்டதை நினைவுகூர்ந்து நன்றி சொன்னான். பிறகு, 'இதற்கெல்லாம் பிரதியாக என் வசமிருக்கும் சோணாட்டுப் பகுதிகள் முழுமையையும் உனக்கே விட்டுக் கொடுக்கிறேன்; பல நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த உன் முன்னோர்கள் போல் நீ இனி சோழப் பேரரசை ஆளலாம்'' என்றான்!

''வல்லி! அந்தப் பெருந்தன்மை என்னை உலுக்கி விட்டது. இடவையில் வரகுணனைப் போரில் சந்திக்கச் செல்லுமுன்னர் நான் பல்லவேந்திரரிடம் எவ்வித நிபந்தனையும் விதிக்கவில்லை. அதற்கு அவகாசமும் இருக்கவில்லை. ஆயினும் என்ன? அபராஜிதன் தானாகவே விட்டுக் கொடுத்தான்! அவன் தந்தை நிருபதுங்கன் செய்த அநீதிக்கு இவன் பரிகாரம் செய்தான். நிருபதுங்கன் என் தந்தையை வஞ்சித்து 'எடுத்துக் கொண்ட நிலப்பரப்பை மட்டுமின்றி அதற்கு வெகு காலம் முன்பிருந்தே பல்லவர் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த சோணாட்டுப் பகுதிகளையும் எனக்கே தந்தான். நினைக்க நினைக்க இந்த இரட்டிப்புப் பெருந்தன்மையும் சகை உள்ளமும் என்னை வியப்பில் ஆழ்த்துகின்றன!''

''சோழதேசம் மறுபடி பேரரசாக விளங்கத் திருப்புறம்பயம் போர் உதவியது என்பதால்தான் அங்கு உறையும் பெருமானுக்குச் சிற்பக் கலையில் சிறந்ததான ஒரு கற்றளி எடுப்பித்தீர்களாக்கும்'' என்றாள் வல்லி.

''ஆமாம்! ஆனால் அந்த ஆதித்தேசுவர சிற்பங்களை அமைக்க வந்த இந்தச் சிற்பியை அழகில் வெல்லும் சிற்டம் அங்கே கிடையாது!'' என்ற ஆதித்தன் மெல்ல அவள் கன்னங்களைத் தட்டி நாணப் புன்னகையில் குனியச் செய்தான்.

''அதிருக்கட்டும் பிரபோ! நீங்கள் கூறி வந்த கதையை முடியுங்கள்!'' என்றாள் அபிமானவல்லி. ''திருப்புறம்பயம் போரின் விளைவாகச் சோழப் பேரரசு தோன்றவும் உங்கள் தந்தையார் மனம் குளிர்ந்திருக்குமே!''

''மகிழ்ச்சிதான். ஆனால் பூரண மகிழ்ச்சி என்று கூற முடியாது. நான் அபராஜித வர்மனைப் பற்றிப் புகழ்ந்தது என் தந்தைக்குப் பிடிக்கவேயில்லை. 'எனக்கு நீ அளித்த வாக்குறுதியில் பாதிதான் நிறைவேற்றியிருக்கிறாய். இன்னும் பல்லவ நாட்டின் மீதே நீ படையெடுக்க வேண்டும். காஞ்சியைக் கைப்பற்ற வேண்டும். மறக்காதே! என்று அடிக்கடி நினைவூட்டி வந்தார். இதனால் என் மனம் கசந்துபோயிற்று வல்லி! நீயே யோசித்துப்பார்! எவ்வளவோ பெருந்தன்மையுடன் தன் வசமிருந்த சோணாட்டுப் பகுதிகள் முழுவதையும் என்னிடமே ஒப்படைத்துச் சென்ற அபராஜிதன் மீது நான் எப்படிப் படையெடுப்பேன்? இதற்கு என் மனச்சாட்சி இடம் தராமல் என்னை வதைக்கிறது. இதே நேரத்தில் திருப்புறம்பயம் போர் நடந்த ஓராண்டில் இறந்து போன என் தந்தையின் ஆவி அவ்வப்போது என் முன் தோன்றி 'கடமையைச் செய்; வாக்குறுதியை நிறைவேற்று' என்று என்னைக் குத்திக்காட்டி விரட்டுகிறது!''

''இந்த மனப்போராட்டம் காரணமாகப் படையெடுப்பை ஒத்திப்போட்டு வந்திர்களாக்கும்?''

''அது ஒரு காரணம்; இன்னொன்றும். இன்று வரை ஒரு பேரரசை — வல்லரசைப் போரில் சோழ தேசம் தனியே சந்திக்கவில்லை. அதற்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டாமா? மேலும் போரில் எனக்கு ஏதாவது

நித்யகல்யாணி வைத்தியநாதன்
குரு: அடையாறு கே. லட்சுமணன்

ஒருமுறை கிருஷ்ணகான சபாவில் என் நடன நிகழ்ச்சி நடந்து கொண்டிருந்த போது, அம்புஜம் கிருஷ்ணாவின் பாடல் ஒன்றுக்கு அபிநயம் செய்ய வேண்டியிருந்தது.

சின்னச் சின்ன பாதம்
வைத்துக் கண்ணா நீ வா!
செஞ்சிலம்புக் கழல் கொஞ்ச
என்னை ஆள வா!

என்ற சந்தோஷமயமான பாவங்களைப் பிரதிபலிக்கும் அருமையான பாடல் அது. அதை வழங்கவிருக்கும்போதுதான் மியூசிக் அகாதமியில் என் நிகழ்ச்சியை நடத்த ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் என்ற இனிமையான செய்தியை என்னிடம் வந்து சொன்னார்கள். மியூசிக் அகாதமியில் நிகழ்ச்சி அளிப்பது எல்லோருக்குமே மிகப்பெரிய கௌரவமாக இருக்கிறபொழுது இந்தச் செய்தி எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்தது. சந்தோஷ மயமான அந்தப் பாடலை அன்று ஒரே ஆர்வத்துடன் செய்தேன். அதற்குப் பிறகு இந்தப் பாடலுக்கு அபிநயம் பிடிக்கிற போதெல்லாம் பெருமையாக இருக்கும். உடல் சிலிர்த்துப் போகும்.



நேர்ந்து விட்டால்? சோழநாடு நிர்க்கதி யாகி விடக் கூடாதல்லவா? அதனால் என் மகன் கன்னரதேவன் வளரவும் காத்திருந் தேன்.''

''பிரபோ! போர் படைப் பெருக்கத்துக்குத் தான் யானைகள் நூறுக்கு மேல் வந்து விட்டனவே! கன்னரதேவனும் வளர்ந்து இளைஞனாகிவிட்டானே...!''

''ஆம் வல்லி! இனி எனக்குச் சாக்குப் போக்குச் சொல்ல இடமில்லை. வல்லி! நான் பிறந்த போதே தாயை இழந்தவன். என்னை வளர்த்து வீரக்கதைகள் கூறி ஆளாக்கியவள் செவிலித்தாய் குலவை. அவள் வேறு என்னை நச்சரித்துக் கொண்டே இருக்கிறாள்... எனக்கு என்ன செய்வ தென்றே தோன்றவில்லை... படையெடுத் தாலும் தவறு; படையெடுக்காதிருந்தாலும் குற்றம் என்று என் மனம் கிடந்து தடுமாறு கிறது! இதற்கிடையில் சேர நாட்டிலிருந்து வந்துள்ள நூற்றுக்கு மேற்பட்ட யானை களுக்குத் தீனி போடவே கருவூலம் கரைந்து விடும் போலிருக்கிறது! நேற்று அந்த யானை களுள் ஒன்றுக்கு மதம் பிடித்திருப்பதாக வேறு செய்தி! ஏன்தான் அரசகுலத்தில் பிறந்தோமோ என்றிருக்கிறது. இந்தக் கவலை களையெல்லாம் யாரிடமாவது சொல்லிக் கொண்டாலே பாரம் குறைவது போல் ஓர் உணர்ச்சி. அது காரணமாகத்தான்...'' ஏக்கத்தோடு அவள் முகம் நோக்கினான்.

''...என்னை நாடி வந்தீர்களா பிரபோ! பாக்கியசாலி நான். ஆனாலும் நீங்கள் இங்கு அடிக்கடி வராதிருப்பதே நல்லது!'' என்றாள் முகத்தில் சோகம் படர.

''ஏன் அப்படிச் சொல்கிறாய் வல்லி?'' என்று திடுக்குற்றவனாகக் கேட்டான் ஆதித்தன்.

''நகரில் எல்லோரும் என்ன பேசுகி றார்கள் தெரியுமா? உங்களுக்கு என் மீது காதலாம்! இப்பேர்ப்பட்ட அழகியை விக்கி யண்ணன் முதலில் பார்த்துக் காதல் வயப் பட்டுத் திருமணத்துக்கும் அனுமதி கேட் டானே என்று அவன் மீது கோபமும் பொறுமையுமாம். அதனால்தான் திருமணத் துக்குச் சம்மதம் தராமல் தாமதித்து அவன் மீது கொலைக் குற்றமும் சுமத்திப் பாதாளச் சிறையில் தள்ளி விட்டீர்களாம்! இப்படி அவதூறாக வதந்தி பரப்புகிறார்கள். போதாக் குறைக்கு நீங்கள் அடிக்கடி என் மாளிகைக்கு வந்து போய்க் கொண்டிருந் தால் வெறும் வாயை மெல்லுகிறவர்களுக்கு அவல் கிடைத்தது போலாகாதா?''

''வல்லி! நெருப்பின்றிப் புகையாது என் பார்கள். வெறும் வதந்தி மட்டும்தானா அது? உண்மையுமிருக்குமானால்...?'' என்று ஆதித்தன் கேட்கவும்.

திடுக்கிட்டுப் பதறி எழுந்தாள் அபிமான வல்லி.

(தொடரும்)



எல்லாரும் கச்சேரியை மகிழ்ச்சி யுடன் ரசிக்கும்போது, விமர்சகர்கள் மட்டும் குற்றம் கண்டுபிடிப்பதிலேயே கண்ணாயிருப்பார்கள். திருக்கோடி காவல் கிருஷ்ண அய்யர் ஒரு ராகத்தை விஸ்தாரமாக இசைத்துக் கொண்டிருந்தார். திடீரென்று அபஸ்வரம் தட்டியவுடன், கூட்டத்தில் ஒரு விமர்சகர் ''சபாஷ்!'' என்றார். கிருஷ்ண அய்யர் வயலினைக் கீழே போட்டார். விமர்சகரிடம் ''ஐயா! நீங்கள் வந்த வேலை முடிந்து விட்டது. இன்னொரு முறை இதுபோன்ற தவறு நேரும் என்று தோன்றவில்லை; நீங்கள் போகலாம்!''

பிரியா கோபால்

குரு: ஸ்வாமிமலை ராஜரத்தினம்

''முத்த வதுரா நா ஸாமி'' என்ற சாவேரி ராகத் தெலுங்கு ஜாவளி. நாயகி தன் காதலனைக் கண்டு ''என் னிடம் நெருங்கித் தொடாதே'' என்று சீற்றமுறுவது போன்ற காட்சி. ''கிட்ட வராதே!'' எனக் காண்பிப்பது போலத்தான் ஆரம்பமே அமைந்திருக்கும்.

மைலாப்பூர் ஸ்டைல் ஆட்டில் இதற்கு அபிநயம் பிடிக்கும்போது, ஒருத்தி, ''ஏன் இப்படி ஓடுகிறாள்? மாடு முட்ட வருகிறதா என்ன?'' என்று கேட்டது என் காதில் விழுந்தது. வெளிநாட்டவர் கூட நம் கலையை ரசித்துப் பாராட்டத் தெரிந்து கொள்ளும்போது, உள்ளூர்க்காரி தன் ''சங்கீத ரசனை''யை இவ்வளவு அப்பட்டமாக வெளிக்காட்டி யிருக்க வேண்டாமே என்று நினைத்தேன். இந்த ஜாவளிக்கு எப்போது நாட்டியம் ஆடினாலும், என்னையும் மீறிப் புன்னகை பிறக்கும்.



 நீங்கள் கேட்டவை நீங்கள் கேட்டவை

சல்வார்-கமீஸ் உடையில்


ராஜாஜி

○ டி. எஸ். சுந்தரராஜன், இருகூர்.
? காமன்வெல்த் மாநாட்டின் போது கோவாவில் சல்வார் கமீஸ் உடையில் பிரதமர் தோன்றி வியக்க வைத்தது பற்றி...?
! உலகம் வியக்கும் விதமாக நாட்டை உன்னத நிலைக்கு உயர்த்த முடியாத போது இது போன்ற சின்னச் சின்ன ஆச்சரியங்களையாவது அளிக்கலாமே என்ற நோக்கமாக இருக்கலாம்.

○ ஆர். அரிகோபி, குடியாத்தம்.
? எழுத்தாளன் எப்போது பழிவாங்குகிறான்?
! தன் எழுத்தால் சமுதாயத்தைக் கெடுப்பதற்குப் பதில் உதவும் போது. ஒரு உதாரணம் தேவையென்றால், "குறைவற்ற செல்வம்" என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட லயன்ஸ் கிளப்புக்குப் பல எழுத்தாளர்கள் உதவினார்கள். டாக்டர் வெங்கடராமன் பொறுப்பேற்றுத் தயாரித்த இந்த நூலில் மருத்துவம் சம்பந்தமான கட்டுரைகளைத் தமிழ் எழுத்தாளர்கள் உரியவர்களைக் கலந்தாலோசித்து எழுதினார்கள். இந்த நூலின் விளம்பர, விற்பனை வருவாயில் இஞ்சம்பாக்கம் கிராமத்தில் ஒரு மகப்பேறு மருத்துவமனையே உருவாகியுள்ளது.

○ பத்மா தேசிகன், பெங்களூர்.
? வீணை பாலசந்தர் சுவாதித் திருநாள் கிருதிகள் பற்றி மறுபடி சவால் விட்டிருக்கிறாரே?
! குமுதத்துக்கும் பாலசந்தருக்கும் ஏதாவது கிளறி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். குமுதத்துக்குப் புதுசாக இந்த வாரம் ஒன்றும் அகப்படவில்லையானால் பழைசை


உ. வே. சாமிநாத அய்யர்

யாவது கிளற வேண்டும். ஓய்ந்து போன விவாதத்தை மறுபடி கிளப்பியிருக்கிறார்கள். சுவாதித் திருநாள் வேறு யாரோ இயற்றியதைத் தம்முடையதாக்கிக் கொண்டார் என்பது வாதம். இது உண்மையெனில் இதை அனுமதித்த சுரணையற்ற கலைஞர்கள் பெயரில் இப்பாடல்கள் பிரபலமாவதை விட சுவாதித் திருநாள் பெயரில் பிரபலமாவதே நல்லது. இதற்கு இன்னொரு பக்கமும் உண்டு. முழுசாக ஒருவரது படைப்பை அப்படியே தமதாக்கிக் கொள்வது என்பது வேறு; இணைந்து செயலாற்றியும் அபிவிருத்தி செய்தும் தருவதென்பது வேறு. அமெரிக்க ஜனாதிபதியோ பாரதப் பிரதமரோ தாமே தமது பிரசங்கத்தை எழுதித் தயாரிப்பதில்லை. கருத்துக்களைப் புரிந்து கொண்டு எழுத ஆட்கள் இருக்கிறார்கள். ஆனால் 'ரேகன் கூறினார், இந்திராகாந்தி பேசினார்' என்றுதான் சொல்வோமேயொழிய 'மோசடி' என்று கூச்சலிட மாட்டோம்.

○ இராஜராஜசோழன், பழவந்தாங்கல்.
? நாடகத்திலிருந்து வந்த சிலர் தங்களுடைய பிரபல நாடகங்களையெல்லாம் படமாக்கி விட்டனர். இனி என்ன செய்வது?
! நாடகத்தனமான திரைப்படங்கள் எடுத்தது போதுமென்று இனி சினிமாக்கேற்ற முறையில் திரைப்படம் எடுக்க முயலலாம்.

○ மா. அரங்கசாமி, கோவை.
? இன்றைய தமிழக அரசில் அண்ணா திட்டம் செயல்படுகிறதா?
! அண்ணா திட்டம் என்று அவர் ஏதும் அறிவித்ததாக நினைவில்லை. ரூபாய்க்கு மூன்று படி அரிசி என்பது அவருடைய தேர்தல் வாக்குறுதியாக இருந்தது. அதை நினைவூட்டினால் இன்றைய அ.தி.மு.க. தலைவர்கள் மதிய சத்துணவை இலவசமாகவே வழங்குகிறோமே என்று மடக்கப் பார்ப்பார்கள்!
சத்துணவு இலவசமாக வழங்கப்படுவதாகக் கூறுவதே தவறு. மக்களின் வரிப்பணம்தான் பயனாகிறது இதற்கு. எனவே மக்கள் மறைமுகமாகக் காசு கொடுத்துத்தான் பெறுகிறார்கள் சத்துணவை.

○ எம்.எச். சாதிக்பாட்சா, நீடூர்.
? முதல்வர் நிவாரண நிதிக்குச் சாதாரண மக்களிடம் கூட அதிகாரிகள் கட்டாய வசூல் செய்கின்றனரே? ★
! கருணையும் வசதியும் உள்ளோர் நன்கொடை அளிப்பதில் தவறில்லை. ஆனால் நன்கொடை என்ற சொல்லின் அர்த்தத்தையே மாற்றி அதைக் கட்டாயமாக்குவது கொடுமை. இப்படிக் கட்டாயப்படுத்த சட்டமில்லை என்றாலும் அதிகாரிகளுக்கு இலக்கு

 தராசு... தராசு...

நிர்ணயிக்கப்படும் போது அவர்கள் வேறு வழியின்றி மக்களைக் கசக்கிப் பிழிய ஆரம்பிக்கிறார்கள். சாமானிய மக்களிடம் தான் இவர்கள் கெடுபிடி அதிகாரம் செல்லுபடியாகும் என்பதால் சிறு வியாபாரிகள், விவசாயிகள் போன்றவர்கள் அதிகமான பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

○ என். ராமகிருஷ்ணன், இம்மராஜபுரம்.

? இந்த விஷயத்துக்கு இவ்வளவு விளம்பரம் தேவையில்லை என்று எதைக்கூறுகிறீர்கள்?

! பட்டா வழங்கும் விழாவுக்கு முதல்வர் எதிர்பார்க்கிற அளவுக்கு விளம்பரம் தேவையில்லை. நெகமம் நகரில் 4000 பேர்களுக்கு வேட்டி புடவையும்பட்டாவும் வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. முதல்வர் கலந்து கொண்ட அந்த விழாவில் கூட்டம் குறைவாக இருந்தது என்பதால் கோபமடைந்து ஏராள செலவில் ஏற்பாடாகி இருந்த விழாவை ரத்து செய்து இன்னொரு விழா நடந்து அதற்கு மறுபடியும் மக்கள் வரிப்பணம் ஏராளமாகச் செலவாயிற்று. ஆக இன்றைய தமிழக ஆட்சியாளர்கள் மக்களுக்கு நன்மை செய்வதைவிடவும் அதன் மூலம்ஆட்சி பிரபலமடைய வேண்டும் என்பதையேமுக்கியமாகக் கருதுவதாகத் தோன்றுகிறது.

○ எஸ். எஸ். நாகராஜன், சென்னை 88.

? அபேதவாதம் எழுதிப் பொதுவுடமைப் பிரசாரம் செய்த ராஜாஜி பின்னால் தம் கருத்தை மாற்றிக் கொள்ளும்படி அவருக்கு என்ன நிர்ப்பந்தம் ஏற்பட்டது?

! கருத்தை மாற்றிக் கொள்ளுமாறு அவரை யாரும் நிர்ப்பந்திக்கவில்லை. சோஷலிசம் என்ற பெயரால் நம் நாட்டில் நடக்கும் அக்கிரமங்களைப் பார்த்தார். அதனால் சுதந்திரத் தொழில் வர்த்தகக் கொள்கையே சிறந்தது என்ற முடிவுக்குத் தாமாகவே வந்தார். அனுபவப் பாடங்களும் அறிவு வளர்ச்சியும் காரணமாக ஒருவன் கருத்தை மாற்றிக் கொண்டதில் தவறேதுமில்லை. தவறு என்று தெரிந்தும் கொள்கையை மாற்றிக்கொள்ளாதிருப்பதுதான்மூடத்தனம்.

○ வி. பி. கே. மூர்த்தி பாபநாசம்.

? யார் யாருக்கோ ஸ்டாம்பு வெளியிடுகிறார்கள் உ.வே. சாமிநாத அய்யருக்கு தபால் தலை வெளியிட்டால் என்ன?

! ஸ்டாம்பு வெளியிட்டு அவரை நினைவுபடுத்திச் சொல்ல வேண்டிய நிலையில் இல்லை தமிழன். வெளியிட்டால் தபால்



துறை கௌரவம் அடையும்.

○ வி. கோபிநாத், லெட்சுமாங்குடி.

? "உலகிலேயே பல விதங்களில் என்னைக் கவர்ந்தவர் இந்திராகாந்திதான். அவரின் நிர்வாகத் திறன் என்னை அசர வைக்கிறது" என்று இங்கிலாந்துப் பிரதமர் தாட்சர் கூறியிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது?

! உபசார மொழிகளை அள்ளி விடுவதில் பிரிட்டிஷ் பிரதமர் வேறு யாருக்கும் சளைத்தவர் இல்லை என்று தெரிகிறது.

○ கே. ராஜகோபாலன், சென்னை

? ஜெயலலிதா பேசப்போகிறார் என்பதற்காக வடபழனியில் நடந்த ஆடம்பரச் செலவுகள்... மக்களுக்கு நேர்ந்த இடையூறுகள்....

! இதெல்லாம் கூடாது என்றுதான் ஜெயலலிதாவே அறிக்கை விட்டு விட்டாரே, சில காலம் பொறுத்திருந்து என்ன நடக்கிறது பார்ப்போம்.

○ மேஜர்தாசன், ஈரோடு.

? அரசியல் உலகில் சோவின் எதிர்காலம்எப்படிஇருக்கும்?

! சோவின் எதிர்காலம் அமோகமாய் இருக்கும்; அரசியல் உலகின் எதிர்காலம் எப்படியோ இருக்கும்.

○ கே. ஏ. கிருஷ்ணன், சென்னை 87.

? பிரதமரைக் கவிழ்க்க எதிர்க் கட்சிகள் சதி செய்யும் போது கர்நாடக அரசைக் கவிழ்க்க எங்களுக்கு உரிமை உண்டு என்கிறாரே ஸ்டீபன்?

! நாடாளுமன்றத்தில் பூரணப் பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்தும் பிரதமரையும் மெலிதான சட்டமன்ற மெஜாரிட்டியுடன் கர்நாடகாவில் ஆட்சிநடத்தும் ஹெக்டேயையும் ஒப்பிட்டுப் பேசியபோது ஸ்டீபன் பிரதமரை அவமதித்திருக்கிறார்.

★ ரூ. 10 பரிசு பெறுபவர்: எம். எச். சாதிக்பாட்சா, 3-69, தாஜ் வீதி, நீடூர் 609 203.



பிரதமர் தோன்றினரே?

● இப்பொழுதெல்லாம் மாதாமாதம் நாம் கட்ட வேண்டிய மின்சாரத் தொகையை நம்மிடமுள்ள அட்டையில் குறித்துக் கொடுக்கிறார்கள். எங்களைப் போல்பிளாட்களில் உள்ளவர்களுக்கு, நான்கு வீட்டிற்கு மத்தியில் தான் மீட்டர்பெட்டி உள்ளது. எங்கள் பக்கத்தில் குறிப்பிட்ட தேதியில் ரீடிங் எடுக்க யாரும் வருவதில்லை. இஷ்டப்பட்டபோது வருகிறார்கள். சரியாக இந்தத் தேதியில் வருவார்களென்று தெரிந்தால் நிம்மதியாக இருக்கும்.

சில சமயங்களில் கீழே மீட்டர் பெட்டி அருகில் கணக்கெடுப்பவர்கள் மேலே உள்ள எங்களைக் கூப்பிடுவதே இல்லை. கீழ் வீட்டில் உள்ளவர்கள், மேல் வீட்டுக்கு பில் போட்டால் என்ன, போடாவிட்டால் நமக்கென்ன? என்று பராமுகமாய் இருந்து விடுகிறார்கள்.

பொது மக்களுக்குக் கஷ்டம் அளிக்காமல் மாதாமாதம் ஒழுங்காக அட்டையில் கரண்ட் பில் போட்டுக் கொடுக்கும் நாள் என்று வருமோ?

சென்னை—90. பத்மா பத்மநாபன்.

● கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து ஒரு ஆட்சியைக் கவிழ்க்க நினைக்கிற இ. காங். செயல்முறை இன்று தேசம் முழுவதும் கேவலமாகப் பேசப்படுவதும், கர்நாடக எம். எல். ஏக்கள் பணம் வாங்கிக் கொண்டு கட்சி மாற இனி யோசிப்பார்கள் என்பதும் இந்த டேப் விவகாரத்தால் விளைந்த பெரும் நன்மைகளன்றோ?

கெங்கவல்லி—636105. ராணிமுருகவேள்

● பில் அட்டையை அலங்கரித்த காளஹஸ்தி அம்மனின் வண்ணப்படம் பக்தி மணம் கமழ்வதாக உள்ளது.

கும்பகோணம். பிரசன்னராஜன்.

● போலித்தனங்களும், ஏமாற்று வேஷங்களும் நிறைந்திருக்கும் இந்த வாழ்வில் பதவிக்கும், நடிப்புக்கும்தான் இது காலம் என்பதை 'காண்டக்ட் சர்டிபிகேட்' நிரூபிக்கிறது.

திண்டுக்கல். எஸ். பி. தியாகராஜன்.

● மிருதங்கக் கலைஞரின் வித்தியாசமான அட்டைப்படமும்' ரசமான போட்டியும் கண்களுக்கும், மனத்துக்கும் இதமாய் அமைந்தது.

லெட்சுமாங்குடி வி. கோபிநாத்.

மின்சார பில் போடுவதிலும் ஊழலா?

● ''வரதட்சிணை என்ற அதிகாரப்பிச்சை'' என்ற பரமாச்சாரியரின் தெய்வீக வாக்கு மனுஷ்ய ஸ்வபாவம் உள்ள மனங்களை நிச்சயம் உறுத்த வேண்டும்.

திருக்காட்டுப்பள்ளி எம். ஸ்ரீநிவாஸன்

● புகைப்படக்காரர் மணியின் ''ஆற்றங்கரையில் ஓர் அணங்கு'' வண்ணப்பட ஸ்டில் என் மனத்தைக் கொள்ளை கொண்டது.

பம்மல்வாழ் மக்களின் குறை நீக்க சீலனின் பேட்டி வழிவகுக்குமா?

மதுரை—1. இரா. சேகரன்.

(ஏற்கெனவே வழிவகுத்து விட்டதாக அறிகிறோம். பம்மல்வாழ் மக்களின் சார்பில் முதல்வருக்கு நன்றி —ஆர்.)

● 'தங்க மகன் மனத்தில் தங்கா மகன்' என்ற வரிகளின் மூலம் ஜெயமன்மதன் எங்கள் மனத்தில் தங்கி விட்டார்!

அரவக்குறிச்சிப்பட்டி எம். அசோக்ராஜா.

● '22, 23—ஸி, 27—டி' சிறுகதையில் விறுடியில் தோன்றுகிற காதல் எவ்வளவு விரைவில் வலுவிழந்து தோல்வி அடையும் என்பதனைப் புரிந்துகொள்ள முடிகிறது.

சென்னை—5. எஸ். சம்பத்குமார்.

● 'கொள்ளைச் சிரிப்பு' எங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரையும் 'கொல்'லென்று சிரிக்க வைத்துவிட்டது.


பாண்டிச்சேரி—1 தெ. நாராயணமூர்த்தி.


● ஏஷியாட், நாம், சோகம் என்று பணத்தை வாரி இறைக்கும் காலம் இன்னும் எத்தனை காலம்? வறுமையில் வாடும் நம் நாட்டிற்கு இது தேவையா?

மேலகிருஷ்ணன்புதூர் பி. இராமகிருஷ்ணன்

● ஜெயமன்மதனின் சினிமா விமரிசனங்கள் அனைத்தும் வித்தியாசமான முறையில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது.

சென்னை. கே. எஸ். கலைமணி.




எரிச்சலூட்டும் இருமல்
அதிகாலையில் ஐந்துமணிக்கே
உங்களை எழுப்பிவிடும்.
ஆனால் நீங்கள்
டாக்டரை எழுப்ப முடியுமா?
VOCACIL
வொகாஸில்
உங்கள் அருகிலேயே
ஒரு டாக்டர்.
Trikaya/PPV 1.83 TAM

"12. சாப்பிடறீங்களா, டாக்டர்?"

பாலாஜி மணிக்கட்டைப் பார்த்தார். ஐந்தே முக்கால்.

சாந்தி டீ சாப்பிடுகிறீர்களா என்று கேட்டால் பரிசோதிக்க வேண்டிய நோயாளிகளைப் பா ர்த்தாயிற்று என்று அர்த்தம்.

"அப்பாயிண்ட்மெண்ட்ஸ் அவ்வளவுதானா?"

ஆச்சரியத்துடன் அவர் வினவ, சாந்தி புன்னகைத்தாள்.

"மிஸ்டர் நாராயணன் பிள்ளைக்கு இன்னிக்குக் கல்யாணம். ரிஸப்ஷனுக்கு நீங்க போகணும்னுதான், அதிகமா அப்பாயிண்ட்மெண்ட்ஸ் கொடுக்கலே..."

"ஏழரை மணி வரவேற்புக்கு அஞ்சே முக்கா லுக்கே நிறுத்திட்டியா?"—

"ரிஸப்ஷன் நடக்கறது செங்கல்பட்டுலே... முகம் கழுவ, கால் மணி, போக ஒரு மணி... சரியா இருக்காதா டாக்டர்?"

"ஓ! காட்! இந்த நாராயணனுக்குக் கல்யாணம் பண்ண மெட்ராஸ்லே இடமா கிடைக்கலே!"

சாந்தி மென்மையாய்ச் சிரித்தாள்.

"பாதி செங்கல்பட்டைச் சொந்தமா வைச்சிருக்கறவர், தன் சொந்த ஊர்ல ஒரே பிள்ளையோட கல்யாணத்தை நடத்த விரும்பறது நியாயம்தான்னு எனக்குத்தோணுது டாக்டர்..."

"யாரையும் நீ விட்டுக் கொடுக்க மாட்டியே!" என்ற பாலாஜி கப்பை எடுத்து மெதுவாய் டீயை உறிஞ்சினார்.

"உனக்கும் கண்டிப்பா இன்விடேஷன் கொடுத்திருப்பாரே!"

"ம்."—

"நீ போகலியா?"—

"ம்ஹூம். அத்தனை தூரம் போய் வர்றது கஷ்டம் டாக்டர்."

"தனியாப் போய் வர்றதுதான் பிரச்னைன்னா என் கூட வாயேன். ஒன்பதுக்குள்ள திரும்பிடலாம்..."

பதில் கூறாமல் சாந்தி மௌனிக்க பாலாஜி டீக் கப்பை மேஜை மேல் வைத்து விட்டுக் கண்களை இடுக்கிக் கொண்டு அவளை அழுந்தப் பார்த்தார்.

"இன்னும் கொஞ்சம் டீ இருக்கா?"—

"இருக்கு" என்றபடி பிளாஸ்கில் உள்ளதை கப்பில் ஊற்ற முனைந்தவளைத் தடுத்தார்.



''எனக்கில்லே. இன்னொரு கப்லே உனக்கு எடுத்துக்கோ...''

இது என்ன புதுப் பழக்கம் என்பது போல் சாந்தி பார்க்க, பாலாஜி சின்னதாக முறுவலித்தார்.

''உட்கார் சாந்தி. டீ சாப்பிட்டுகிட்டே உன்கிட்ட கொஞ்சம் பேசணும் போல இருக்கு. அவசர வேலே ஏதாவது இருக்கா?''—

அவள் இல்லே என்று தலே அசைத்ததும், பாலாஜி 'ப்ளீஸ் ஸிட் டவுன்' என்றார் மீண்டும்.

உட்கார்ந்தாள்.

''விக்ரம் பழையபடி நல்லா ஆயிட்டான் சாந்தி... தாங்க்ஸ் டு யூ... வாய் நாத்தம், சரியா சாப்பிடாம இருந்தது, எல்லாம் சரியாயிட்டது. கௌரியைப் பிரிஞ்சதுல அடம் பண்றான்னு நினைச்சிட்டிருந்த எனக்கு 'டீவர்ம்' பண்ணணும்ற ஸிம்பிள் பழக்கம் ஞாபகமில்லே பாரு...''

குற்றம் பண்ணிவிட்ட சின்னப் பையனின் குவிப்புடன் அவர் பேச, சாந்தி அவசரமாய்ச் சமாதானம் செய்தாள்.

''இதெல்லாம் மேடம் ரொம்ப கச்சிதமா கவனிச்சிகிட்டு இருந்ததால, நீங்க தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமே இருக்கலியே டாக்டர்... இரண்டுமாசத்துக் கொருதரம் வயித்துப் பூச்சி மருந்து கொடுக்கலேன்னு சரியா சாப்பிடாது. வாய் நாறும். முடி பளபளப்பு குறைஞ்சிடும்னு அவங்க என்கிட்ட சொன்னது நினைப்பு வந்ததால தான் 'டீவர்ம்' பண்ணலாமேன்று நான் சொன்னேன். இல்லேன்னு எனக்கு மட்டும் என்னதெரியும்?''

—என்ன எழுதிட்டு இருக்கே டார்லிங் அத்தனே ஸ்வாரஸ்யமா?

—டைரி.

—ஹா! டைரியா? அப்ப, திருட்டுத்தனமா படிக்க வேண்டியதுதான். ராத்திரி நடந்ததெல்லாம் எழுதி என் மானத்தை வாங்கி இருக்கியா?

—ஸாரி, இந்த மாதிரி சப்புக் கொட்டிக் கிட்டுப் படிச்சீங்கன்னு நிச்சயம் ஏமாத்தம் தான். திருட்டுத்தனமா படிப்பானேன். இந்தாங்க இப்பவே படிங்க...

—ம்ம்... ஏப்ரல் பதினேழாம் தேதி... விக்ரமுக்கு இன்று ஆறு மாசம் பூர்த்தி ஆகி. ஆண்டி ரேபீஸ் வேக்ஸின் ஆரம்பித்தது. மொத்தம் ஏழு ஊசிகள். இருபத்தி எட்டு... விக்ரம் சரியாகச் சாப்பிடவில்லே. புல் தின்று வாந்தி எடுத்தான்... மே பத்து... விக்ரமுக்கு நாக்குப் பூச்சி மாத்திரைகள் தந்து 'டீவர்ம்' செய்தது... ஹேய்! என்ன இது! எல்லாம் ஒரே விக்ரம் புராணமா இருக்கு!..

—இதெல்லாம் குறிச்சி வைக்கறது நல்லது தானே பாலா? விக்ரம் வாயில்லா ஜீவன்... என்ன உடம்பு எப்ப வந்ததுன்னு அவனுக்குச் சொல்லத் தெரியுமா? நமக்கும் மறந்திடக் கூடாது பாருங்க...

அந்த டைரியை எடுத்துத் தரச் சொல்லி, 'வயிற்றுப் பூச்சிக்கு மருந்து கொடுத்து எத்தனே நாட்களானது' என்பதைக் கணக்கிட்டு, ஒருமாசத்துக்கும் மேலேயே கூடுதலாய் ஆகிவிட்டகாரணத்தாலும் அவன் மந்தமாக இருக்கிறானோ என்று சந்தேகித்து, சாந்தி மாத்திரைகளைக் கொடுத்ததில் பதினைந்து நாட்களில் நல்ல முன்னேற்றம்.

கௌரியை நினைந்து ஏங்கி, அவள் எந்தக் கணமும் வருவாள் என்ற நம்பிக்கையோடு காத்திருந்தாலும், பழைய சுறுசுறுப்பு மீண்டும் அவனிடம் குடிகொண்டு விட்டது நிஜம்தான்.

சிவசங்கரி



ஆனால், வரவர ரங்கனுடன் 'வாக். போக மாட்டேன்' என்று அவள் படுத்துவதற்குத்தான் என்ன செய்வது என்று புரியவில்லை. தேகப் பயிற்சி நாய்களுக்கு ரொம்ப அத்தியாவசியமானது ஆயிற்றே?

—என்ன பாலா இது?

—என்ன டாலிங்?

—தொந்தி! ஸபாரி ஸூட் போட்டா அத்தனை தெரியலே. ஆனா வெறும் உடம் போட இருக்கறப்போ பானையாட்டம் தெரியுது. ஐ மஸ்ட் ஸே ஸம்திங் அபௌட் இட்...

—"தொந்தியா? எனக்கா? நோ சான்ஸ்..." நீ முதல்ல கண் டாக்டர்கிட்ட போயிட்டு வா கௌரி கண்ணு.

—பாலா ப்ளீஸ். விளையாடாதீங்க. நிஜம்மாகத் தொந்தி விழுந்திருக்கு. உடனடியா எக்ஸர்ஸைஸ் பண்ணினா குறைச்சிடலாம்.... காலைல அஞ்சுக்கு எழுப்பி விடறேன். விக்ரமையும் கூட்டிட்டு ஜம்முனு இரண்டு கிலோ 'மீட்டர் விறுவிறுன்னு நடந்திட்டு வாங்க... உங்க தொப்பையும் குறையும். அவனுக்கும் பயிற்சி கொடுத்த மாதிரி இருக்...

—யம்மாடியோவ்? அஞ்சு மணிக்கு? நா? இம்பாஸிபிள்... ஆளை விடும்மா....

—சின்ன பையன் மாதிரி இருக்கணும்னு ஆசை இருக்கு. ஆனா உடம்பு மட்டும் வளையாது... எனக்கென்ன? தாராளமா அறுவது வயசுக்காரர் மாதிரி தொந்தியும், தொப்பையுமா இருங்க... எனக்கென்ன?...

கேலியாகப் பேசி, வயிற்றை முன்னுக்குத் தள்ளி, அசைந்து நடந்து கௌரி அன்று செய்தது நினைவுக்கு வர, பாலாஜி சற்று தெறன்று சிரித்தார்.

"என்ன டாக்டர்? நான் ஏதாவது அசட்டுத்தனமா பேசினேனா?"—

கண்களை விரித்தபடி சாந்தி வினவியதும் பாலாஜி சிரிப்பை அடக்கிக் கொண்டு அவளைப் பார்த்தார்.

"ஸாரி... ஒன்றுமில்லே... ஏதோ பழைய நினைவு."

மேஜைமேல் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு, கண்களில் கனவு படர பேசியவரைக் கலைக்க விருப்பம் இல்லாதது போல சாந்தி ஒரு நிமிஷம் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

பின், "மணி ஆறு டாக்டர்... நீங்க கிளம்ப வேணுமா?" என்றாள் மெல்லிய குரலில்.

"கிளம்பறேன். அதுக்கு முன்னால உன் கிட்ட கொஞ்சம் பேசணும்.

"கிட்டத்தட்ட இரண்டு வருஷமா எனக்கு நீ ரிஸப்ஷனிஸ்ட்டா இருக்கே. கௌரி தவறிட்ட இந்த நாலு மாசங்கள்ல என்னைப் புரிஞ்சிகிட்ட ஸ்நேகிதியா கூட மாறிட்டேன்னு சொல்லலாம். ஆனாலும் உன்னைப் பத்தியோ, உன் குடும்பத்தைப் பத்தியோ எதுவுமே தெரியாதவனா நான் இருக்கேன். நினைச்சுப் பார்த்தா இது வெட்கப்படற விஷயம் இல்லியா, சாந்தி?"

"அ... அது... வந்து..."

விரைவில் பரவும் செய்தி...



''உன் பேர்ல ஒரு தப்பும் இல்லே.... நான் ஏதாவது இன்ட்ரஸ்ட் காட்டியிருந்தா தானே, நீ சொல்ல?''

''.......''

''இப்ப சொல்லு. ஐ வான்ட் டு நோ அபௌட் யுவர் ஃபாமிலி. என்கிட்ட சொல்லறதுல உனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லையே?''

சாந்தி சங்கடத்துடன் எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

''சொல்றாப்ல என்னைப் பத்தி எந்த விவரமும் உசத்தியா இல்லே டாக்டர்.''

''உசத்தியா, தாழ்த்தியான்னு நான் தீர்மானம் பண்ணிக்கறேன்... டெல் மீ.... உன் கூடப் பிறந்தவர் எத்தனை பேர்? எல்லாரும் என்ன பண்றாங்க? வாட் அபௌட் யுவர் பேரண்ட்ஸ்? அப்பா க்ளார்க்கா இருந்து ரிடையர் ஆனவர்னு சொல்லி இருக்கே, ரைட்?''

சாந்தி தலை அசைத்து அவர் கூற்றை ஆமோதித்தாள்.

''அப்பா ரிடையர் ஆகி மூணு வருஷம் ஆறது. இரண்டு அக்கா. ஒருத்தி கல்யாணம் ஆகி புருஷனோட திருச்சியிலே இருக்கான்னு பேரு. பாதி நாள் இங்க தான்.. எனக்கு கீழே ஒரு தம்பி, தங்கை... இரண்டு பேரும் காலேஜிலே படிக்கறாங்க... அப்பா கூடப் பிறந்த அத்தை, புருஷனை இழந்து சின்ன வயதிலேந்து எங்களோட இருக்காங்க. அம்மாவும், வயசான பாட்டி...''

சாந்தி சிரிக்க முயன்றாள்.

''இதான் என் குடும்பம் இதைப் பத்தி இன்னும் விரிவா என்ன சொல்றதுன்னு எனக்குத் தெரியலே.''

''உங்க இரண்டாவது அக்காவுக்குக் கல்யாணம் ஆகலியா?''—

''இல்லே... சின்ன வயசிலே போலியோ அட்டாக் வந்ததால வலது கால் வளர்ந்தி குறைஞ்சி இருக்கு. அந்தக் குறையால யாரும் அவளைக் கட்டிக்க முன் வரமாட்டேங்கறாங்க...''

''என்ன படிச்சிருக்காங்க? எங்கயாவது வேலை பார்க்கறாங்களா?''—

''ம்ஹூம். எட்டாவதுக்கு மேலே படிக்க மாட்டேன்னு சொல்லிட்டா. அம்மாவும், காரியங்களைச் செஞ்சுக்கிட்டு வீட்டோட இருக்கட்டும்னு நிறுத்திட்டாங்க...''

''அம்மாக்கு உதவி பண்ண உங்க அத்தை, பாட்டி இருக்காங்களே?''—

சாந்தி தயங்கினாள். டாக்டரை நிமிர்ந்து பார்க்காமல் பேசினாள்.

''பாட்டிக்கு ரொம்ப வருஷமா கண் தெரியாது... அத்தைக்கு வலிப்பு அடிக்கடி வரும். எங்க, எப்ப விழுவாங்கன்னு சொல்ல முடியாது...''

''கடவுளே! இதையெல்லாம் நீ என்கிட்ட ஏன் சொல்லவேயில்லே சாந்தி? நர்ஸிங் ஹோம்ல சேர்த்து முடிஞ்ச வரைக்கும் வைத்தியம் பார்த்திருக்கலாம், இல்லே?''

''.......''

—இன்னிக்கு சாந்தியோட ரொம்ப நேரத்துக்கு பேசிட்டிருந்தேன் பாலா... தூண்டித் துருவினப்புறம் அவ குடும்பத்தைப் பத்தி

மனசு விட்டுச் சொன்னு... கேட்டதுலேந்து மனசு ரொம்ப கஷ்டப்படறது... எனக்கு உடம்பு சரியானதும் முதல் காரியமா சாந்திக்கு எந்த வகையிலே உதவலாம்னு யோசிக்கப் போறேன். அவ அப்பா சீட்டாட்டப் பிரியராம். கையில எது கிடைச்சாலும் கொண்டு வைச்சி ஆடறதுல மன்னராம்... குடும்பப் பொறுப்பு இருக்கறதா தெரியலே... அவ அம்மா...''

மேலே தொடர்ந்து பேச விடாமல் யாரோ வந்துவிட, அன்றைக்குப் பேச்சு அத்துடன் நின்று போனதும் பிறகு பேச வாய்ப்பில்லாமல் கௌரி மறைந்ததும் இப்போது பாலாஜிக்கு நினைவு வந்தது.

கண்ணாடியைக் கழற்றி வைத்துவிட்டு எதிரில் இருப்பவளைத் தீர்க்கமாகப் பார்க்கையில், அடிமனசில் வலித்தது.

ஸோ, இவள் ஒருத்தி சம்பளத்தில் தான் குடும்பம் நடக்கிறதா?

சாப்பாடு, வைத்திய, கல்லூரிச் செலவுகள் என்று அத்தனைக்கும் நான் கொடுக்கும் பணம் தான் ஈடு கட்டுகிறதா?

எட்டு ஜீவன்களின் தேவைகளை ஓரளவுக்காவது நிறைவேற்ற இந்தப் பணம் போதுமோ?

இதுநாள் வரை வாய் திறந்து குறையுடன் முனகியது இல்லை என்பதோடு, இழுத்துப் போட்டுக் கொண்டு அத்தனை உபரி வேலைகளையும் உண்மையான அக்கறையுடன் சாந்தி செய்து வருவது ஞாபகத்துக்கு வந்தபோது மனசின் வலி அதிகமானது.

கூடவே, யாரைப் பற்றியும், எதைப் பற்றியும் சிந்தனை செய்யாமல் சுயநலவாதியாக வாழ்ந்திருக்கிறோமா என்ற எண்ணம் ஒருவித வருத்தத்தையும் கிளப்பியது.

''மணி ஆறு இருபது டாக்டர்...''

''நாளைக்கு உன் வீட்டுப் பெரியவங்களை நீ இங்க கூட்டிட்டு வாயேன். என்னால எந்த விதத்திலயாவது உதவ முடியுமான்னு பார்க்கறேன்...''

''......''

''இன்பாக்ட், இதை நான் ரொம்ப நாள் முன்னாலயே செஞ்சிருக்கணும். உங்கக்காவையும் அழைச்சிட்டு வா சாந்தி... ஆர்த்தோபேடிக் டாக்டரைக் கேட்டுவிட்டு பிஸியோதெரபி கொடுத்துப் பார்க்கலாம்...''

''எ... எதுக்கு டாக்டர்... வீண் சிரமம்?''—

''ஒரு சிரமமும் இல்லே... கௌரி என்கிட்ட உன் விஷயமா பேசியிருக்கா... நான் தான் மறந்திட்டேன். ப்ளீஸ் பர்கிவ் மீ...''

பாலாஜி எழுந்து நின்றார்.

''அப்ப, நீ ரிஸப்ஷனுக்கு வரலே?''—

''ஸாரி டாக்டர்.''

''பரவாயில்லே... வேலே முடிஞ்சிடுச்சின்னு நீ கிளம்பு...''

''இன்னும் அரை மணி வேலே பாக்கி இருக்கு. அக்கௌண்ட்ஸ் எழுதி வீட்டுக்கு அனுப்பிட்டா, ராத்திரி நீங்க செக் பண்ணச் சரியாயிருக்கும்...''

ஓ!

''ஆல்ரைட்... வேலே முடிஞ்சதும் ரெடியா இரு... நான் குளிச்சு சேன்ஜ் பண்ணிட்டு வரேன். போற வழியிலே உன்னை ட்ராப் பண்ணிடறேன். உன் வீடு சைதாபேட்டைல தானே?''—

''ப்ளீஸ் டோண்ட் பாதர் டாக்டர். நான் பஸ் பிடிச்சுப் போயிடுவேன்.''

அவள் சொன்னதைக் காதில் வாங்காமல்,

''இந்த க்ராஸ்வேர்ட்ல மேலிருந்து கீழ் ஆறாவது குறிப்பு என்னன்னு எனக்குப் புரியலே; உனக்குப் புரிஞ்சதுன்னா, கார்ல போறப்ப என்னன்னு சொல்லிடு; இல்லேன்னா இன்னிக்குத் தூக்கம் அவ்வளவுதான்'' என்றவர், கையில் மடித்து வைத்திருந்த நாளிதழை அவளிடம் தந்து விட்டு, வீட்டுக்குச் செல்லத் திரும்பி நடந்தார்.

(தொடரும்)



ஜெயந்தி சுப்ரமணியம்
குரு: அடையாறு கே. லட்சுமணன்

கலைகளில் வெகு ஆர்வம் கொண்ட என் பாட்டியிடம் எனக்கு ஒட்டுதல் அதிகம். ஒருமுறை ஹைதராபாத்தில் ஒரு நிகழ்ச்சி நடத்தப் போகுமுன் பாட்டி ரொம்பவும் நோய்வாய்ப்பட்டு, படுத்த படுக்கையாயிருந்தாள். மனசேயில்லாமல் தான் நான் ஹைதராபாத் போனேன். அங்கே நிகழ்ச்சி கடைசியில் பாட்டிக்கு மிகவும் பிடித்த ஆதிசங்கரரின் சௌந்தர்ய லஹரி சுலோகத்துக்கு அவள் பார்த்துப் பார்த்து ரசித்த அபிநயம் செய்தேன்.

கங்கையைப் பார்க்கிறபோது சினமும், பிற புருஷரைப் பார்க்கிறபோது வெறுப்பும் சிவனுடைய லீலைகளைக் கேட்கும்போது ஆச்சரியமும் சர்ப்பத்தைப் பார்க்கிற பொழுது பயமும் காட்டும் உன் விழிகளை என் மீதும் சற்றுத் திருப்ப மாட்டாயா என்ற பொருள் வரும் (சிவே சிருங்காரார்த்ரா, தத் இத ரசனே) சுலோகம் அது. நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு நான் தங்கியிருந்த என் பெரியம்மாவின் பெண் வீட்டிற்குள் நுழையும்போது பாட்டி இறந்துவிட்டாள் என்ற செய்தியைக் கேட்டேன்.

என்னுடைய மகிழ்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் எப்போதும் பாட்டியிடம் தான் பகிர்ந்து கொள்வேன். என் அன்பான பாட்டியின் நினைவுதான் சௌந்தர்ய லஹரி சுலோகத்துக்கு அபிநயம் செய்யும் போதெல்லாம் எனக்கு வரும்.

இந்திய கடற்படை



வழங்கும்

உலகின் மிகப்பெரிய

நேவல் பம்பர் ரே:பில்

கடற்படை நலவாழ்வு உதவிக்கென

முதல் பரிசு

ரூ. 2.22 கோடி

இரண்டு கோடியே இருபத்திரண்டு லட்சம் ரூபாய்

2வது பரிசு ரூ. 10 லட்சம்

மொத்த பரிசுத் தொகை ரூ. 3,11,87,000

மொத்தப் பரிசுகள் 4,63,366

(ஏஜண்டுகள், விற்பனையாளர்கள், மற்றும் டிக்கெட்டுகளின் அதிர்ஷ்ட பரிசுகள் உட்பட)

பத்து வரிசைகளில் டிக்கட்டுகள் கிடைக்கின்றன

குலுக்கல்: 14.1.1984

டிக்கட் ரூ. 5/-



ஹர்சந்த் சிங்
(கேப்டன் இந்திய கடற்படை)
ஜாயின்ட் டைரெக்டர் ஆஃப்
பெர்ஸோனல் ஸர்வீஸஸ்
நேவல் ஹெட்குவார்ட்டர்ஸ்
ஸேனாபவன்
புது தில்லி-110001

ஏஜன்சி பற்றிய மற்றும் டிக்கெட்டு உரிமை விவரங்களுக்கு தொடர்பு கொள்க:
ஆர்கனைசிங் ஏஜன்ட்
M/s மார்வல் & கோ.
12, மோஹன் சிங் ப்ளேஸ்
ரிவோலி சினிமா அருகே
கன்னாட் ப்ளேஸ்
புது தில்லி-110001
போன்: அலுவலகம் 312080, 310132
வீடு: 587100

சில பல

மீ. ப. சோமு





டி. கே. சி. யின் மகன் தீபன் (தெ. சி. தீத்தாரப்பன்) எழில் நிரம்பிய பல பாடல்களும், சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளவர். அற்புதமாகப் பாடக்கூடிய இனிய குரலும் ஞானமும் உடையவர்! சென்னை ரேடியோ நிலையத்தின் தொடக்கத்தில் வானொலி இதழ் ஆரம்பித்ததுமே அதன் முதல் ஆசிரியராகப் பதவி ஏற்றவர். மிகச் சிறு வயதிலிருந்தே திருநெல்வேலியில் அவரோடு எனக்கு ஏற்பட்ட நெருங்கிய நட்பு பற்றியும், தமது ஒரே மகனான இந்த அரும்புதல்வனை டி. கே. சி. இழக்க நேரிட்ட சோகம் பற்றியும் கல்கி நேயர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். திருநெல்வேலியில் 1940—ல் நடந்த என் திருமணத்திற்கு ராஜாஜியும், டி. கே. சி. யும் சென்னையிலிருந்து வந்தபோது, உடன் வர இயலாதபடி தீபன் காசநோயினால் அவதிப்பட்டார். அந்த நோயையும் மறந்து 10.2.40—ல் எனக்கு அவர் எழுதியனுப்பிய திருமண வாழ்த்துக் கடிதம், நீண்டதோர் உல்லாசக் கட்டுரையாகத் திகழ்கிறது. எல்லாத் திருமணங்களுக்குமே பொருந்தக் கூடிய அந்தக் கட்டுரைக் கடிதத்திலிருந்து சில பகுதிகளைக் கீழே தருகிறேன்:


''எனக்குக் கல்யாணம் ஆகி வருஷங்கள் ஆகின்றன. குழந்தைகளோ பிறந்து கொண்டே இருக்கின்றன. இவைகள் காரணமாக நான் நாளுக்கு நாள் பெரிய மனுஷன் ஆகிக் கொண்டே வருகிறேன். பெரிய மனுஷன் ஆகிவிட்டால் போதுமா? அந்த ஹோதாவைக் காட்ட வேண்டாமா? ஒரு அரிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. நீ கலியாணம் பண்ணிக் கொள்வதும் அல்லாமல், என்னை ஆசீர்வாதம் பண்ணவும் சொல்லுகிறாய். இந்த க்ஷணமே ஆசீர்வாதம் ஆரம்பமாகப் போகிறது. உஷார் தேகோ!

'தீர்க்க சுமங்கலி பவா'! ஏன் சிரிக்கிறாய்? ஓகோ! இது பெண்களுக்குச் சொல்ல வேண்டியதோ! முன்னே பின்னே ஆசீர்வாதம் பண்ணியிருந்தால் அல்லவோ இந்தச் சம்பிரதாயமெல்லாம் தெரியப் போகிறது! கிடக்கட்டும். அதற்கென்ன? இந்த ஆசீர்வாதத்தை அந்தப்புரத்துக்கு அனுப்பிவிடு! உனக்கு வேறு ஆசீர்வாதம் கொடுக்கிறேன். மனம் முட்ட ஆசீர்வாதமாகத்தான் இருக்கிறது. தீர்க்காயுசு பவா! சர்வமங்களங்களும் உண்டாவதாக! இத்தியாதி, இத்தியாதி!

இனி அறிவுறுத்தல் என்ற அத்தியாயம் தொடங்கப் போகிறது:

மணவடையில் வைத்து நீ நிமிர்ந்துதான் உட்கார வேண்டும். பெண் குனிந்து இருக்கிறதே என்று நீயும் தலையைக் கீழே போட்டுவிடாதே. மாப்பிள்ளைக்கு இருப்பது என்பது ஒரு கலை. அந்தக் கலையில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது ''விறைப்பு''த்தான்! விறைப்பாய் இருந்தால் தான் பெண் வீட்டுக்காரர்களுக்கு உன் அருமை பெருமை எல்லாம் தெரியும்.

மணவடையில் இருக்கும் போது —இல்லை— வீற்றிருக்கும் போது, என்னைப் போல்பெரிய மனிதர்கள் வந்து உன்னை ஆசீர்வதிக்கையில் அவர்கள் உன் நெற்றியில் விபூதியை எடுத்துப் பூசுவார்கள். அப்போது நீ கண்ணை இறுக்கி மூடிக் கொள்ள வேண்டும். மூடாவிட்டால் விபூதி கண்ணில் விழுந்துவிடும். விழுந்தால் என்ன என்று கேட்கிறாயா?







கொஞ்ச நேரத்துக்குக் கண் தெரியாது போய்விடும். அந்தக் கொஞ்ச நேரத்துக்குப் பெண்ணைப் பார்க்க முடியாது போய்விடும்!

கல்யாணம் சிறப்பாக நடந்தேறியதும் நலுங்கு என்று ஒன்று நடக்கும். நலுங்கு பூராவும் ஒரே விளையாட்டுத்தான். முதல் ஆட்டம் பூப்பந்து எறிவது. பொண்ணு பூப் போலத்தான் எறியும். நீ ஓங்கியே எறி. ஏனென்றால் பந்து பூப்போலத்தான் போய் விழும். அடுத்த ஆட்டம் தேங்காய் உருட்டு தல். ஞாபக மறதியாய் வெண்கலத் தேங் காயைப் பூப்பந்து என்று எடுத்து ஓங்கி எறிந்து விடாதே. அடுத்த ஆட்டம் அப்பளம் சுட்டுவது. இரண்டு அப்பளங்களையும் இரண்டு கையிலும் எடுத்துக் கொண்டு தலைக்கு மேலே வைத்துத் தட்டி அப்பள மாரி பொழிவது! ரத்தின கம்பளம் முழு வதும் அப்பளமாகி விடும். தம்பதிகள் தலை யிலும் அப்பளப் பூ வைக்கப்பட்டிருக்கும்!

கடைசி ஆட்டம் பல்லாங்குழி விளை யாடுதல்! இதில் நீ தோற்றுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஒரு வழி சொல்லித் தருகிறேன். எதிரி கை வலுக்கிறது என்று தெரிந்ததும் கள்ள முத்துப் போட்டு (விரல்களுக்கு இடையே கூடி ஒழுகவிட்டு) ஆட்டத்தைக் காணாம் பூளாம் ஆக்கிவிட வேண்டும்! இதற்குப் பிற பாடு பெண் எப்படிக் கூடிக் கெலிக்கும்? கள்ளமுத்துப் போடலாமா, அது சரியா, என்றெல்லாம் யோசிக்காதே! மானத்தைக் காப்பாற்ற மாப்பிள்ளை கள்ளமுத்துப்போட லாம் என்று நலுங்கு நூலில் சொல்லப்பட் டிருக்கிறது!

பாலும் பழமும் கொடுப்பது என்று ஒரு பழக்கம் நம்மவர்களுக்குள் வெகு காலமாக இருந்து வருகிறது! இதில் நம்முடைய ஸ்திரீகளின் கஞ்சத்தனமும் கருமித்தனமும் நன்கு வெளியாகும்! ''இம்புட்டுப்'' போலத் தான் கொடுப்பார்கள். ஒரு பழத்தில் பதி னறில் ஒரு பங்கு கூட இருக்காது. பாலும் இம்புட்டுண்ணு இம்புட்டுப் போலத்தான்! நுனி நாக்குக் கூட நனையாது! ஆனால் அந்த இம்புட்டுப் போலப் பாலும் பழமும் அமிர்தமாகத்தான் இருக்கும். இன்னும் சாப்பிடணும் இன்னும் சாப்பிடணும் என்று தோன்றும். ஆனால் அந்த ஆசையை அடக்கிக் கொண்டு மாடிக்குப்போனதும் ஒரு சீப்புப் பழத்தை உரித்தோ உரியாமலோ உள்ளே தள்ளு! சுமார் அரைப்படிப் பாலை உள்ளே விடு! யார் வேண்டாம் என்கி றார்கள்?

பந்தியில் உனக்கு இரண்டு தலைவாழை இலை போடப்பட்டிருக்கும். அதில் ஏழெட்டு லட்டு, பத்துப் பதினைந்து வடை, ஒரு அண் டாறு சோமாசி, இன்னும் என்னவெல் லாமோ வைக்கப்பட்டிருக்கும். அவ்வளவை யும் ஒரு கை பார்க்க உனக்குச் சக்தி இருக்கலாம். ஆனால் ஒவ்வொன்றின் மேலும் உன் கையை வைத்து எடுத்து விட வேண் டியது! அதுதான் மாப்பிள்ளைக்கு அழகு. இதற்காகப் பாயசத்தையும் விட்டுவிடாதே. ஆண்டியப்பபிள்ளை அவர்களின் ('ஆண்ட வன்' என்று எல்லோராலும் பயபக்தியுடன் அழைக்கப்பெற்ற மூகதிஞர், வட்டத் தொட்டியின் மூத்த உறுப்பினர்) ஆசீர் வாதத்துடன் பாயசத்தில் இறங்கிக் குளி! கொஞ்ச நேரம் முக்குளி நீச்சலும், மூச்சு முட்டியதும் மல்லாக்கு நீச்சலும் அடி! பாயசம் புது மாப்பிள்ளைகளின் உடம்புக்கு நல்லது என்று இன்ப நூல் வல்லார் இயம்பியிருக்கின்றனர். (இதிலிருந்து நான் ஆதாரமில்லாமல் அளப்பவன் அல்ல என்பது அறியக் கிடக்கிறது!)

பட்டணப் பிரவேசம் சம்பந்தமாக ஒரு வார்த்தை. நகர்வலம் கார்வலமாகத் தான் இருக்கும். முன் கூட்டியே காரில் இரண்டு மூன்று 'ஸ்பேர்' தலையணைகளைப் போட்டு வைக்கும்படி ஏற்பாடு செய். அதன்மேல் ''ஜம்'' என்று உட்கார்ந்து கொள். பட்டணப் பிரவேசத்தில் தூங்கி விழுந்து விடாதே! பத்திரம்! பன்னீரால் நனைத்த பூப்பந்தைக் கண்ணில் ஒற்றிக் கொண்டே இரு!

ஏதோ நம்பனையெல்லாம் கவனிக்கக் கூடேன்! ஞாபகம் இருக்குமா? இனிமேல் நேரம் இருக்குமா?

தீபன்.''

இந்த ரசமான கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு, ராஜாஜி இந்தக் கடி தத்தைப் பற்றியே ஒரு கடிதம் எனக்கு எழுதினார். ராஜாஜியின் கடிதத்தையும் அதன் தொடர்பான சில நிகழ்ச்சிகளையும் அடுத்த வாரம் பார்ப்போம்.



ஆரம்ப காலத்தில் பாகவதர்கள் பின்பற்றிய சம்பிரதாயத்தை ஒட்டிப் பாடி வந்தார். கூடிய கூட்டத்தில் பெரும்பாலும் 'சாதாரண ஜனங்க ளாகவே' இருந்தார்கள்; தமிழ்ப் பாட்டு பாடும் போதெல்லாம் அவர்கள் முகம் ஜொலிப்பதைச் சிவன் கவனித்தார்; அதே சமயம் வேற்று மொழியில் பாடுகையில், அத்தனை உற்சாகம் ஜனங்களிடம் இல்லாததைக் கவனித்தார். இனி மேல் தமிழிலேயே கீர்த்தனைகள் இயற்ற வேண்டும் என்று தீர்மானித் தார் அவர்; அதை அவர் எடுத்தது நல்ல முடிவு என்று தான் சொல்ல வேண்டும்; தமிழிசை இயக்கம் வருவ தற்கு முன்பேயே, சிவன் அத னுடைய முக்கியத்துவத்தை உணர்ந் திருந்தார்.

வழங்குவதால் அந்தத் தெய்வீகமான சூழ்நிலையில் எங்கள் நிகழ்ச்சிகளைப் பார்க்கிறது தூய உணர்வே உண்டாகும்....

''என் தொழிலே தெய்வம்; என் நாட்டியப் பள்ளியே எனக்குக் கோயில் மாதிரி!'' என்கிறார் தனஞ்செயன்.

''ஒருமுறை தமிழிசைச் சங்கத்தில் வழங்குவதற்காக, அருணாசலக் கவியின் ராம நாடகக் கீர்த்தனையை நாட்டிய நாடகமாக வடிவமைத்துக் கொண்டிருந்த போது, சேது பந்தனக் காட்சியில் அணிலின் பாத்திரத்தைக் கொண்டு வருவதா வேண்டாமா என்று முடிவாகாமல் குழம்பிக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று ஓர் அணில் குட்டி எங்கள் வகுப்பில் வந்து விழுந்தது. ராமாயணத்தில் அணிலின் பாத்திரத்தை நினைவூட்டுவது மாதிரி இருந்தது அது. தெய்வச் செயல் என்றே எனக்குப்பட்டது. என் மாணவ-மாணவிகள் அந்த அணில் குட்டிக்கு ஆகாரம் கொடுத்து ஆசையுடன் வளர்த்து வந்தார்கள். அப்புறம் தமிழிசைச் சங்கத்தில் ராமநாடகம் முடித்து விட்டு, திரும்பி வரும்பொழுது, தான் வந்த வேலை முடிந்து விட்டது போல, அந்த அணில் குட்டி இறந்து கிடந்தது. அப்போது ஏழு வயதாக ஆகியிருந்த எனது மகன் சஞ்சய் அந்த நிகழ்ச்சியை ஓர் ஆங்கிலக் கவிதையாக மாற்றி வைத்திருக்கிறான்.''



சூடாமணி சூமகிறார்

''சமீபத்தில், தேவகோட்டைக்கு ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடத்த நாங்கள் போயிருந்தபோது, அமைப்பாளர் வந்து, ''இங்கே ரசிகர்கள் சென்னை மாதிரி இருக்க மாட்டார்கள். அவர்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் சத்தம் போடுவார்கள்; விசில் அடிப்பார்கள். அதனால் உங்கள் ஐட்டங்களைக் கொஞ்சம் 'ஜனரஞ்சகமாக' வழங்குங்கள்!'' என்றார். ''எங்கள் நிகழ்ச்சிகள் அப்படி இருக்காது. நீங்கள் பயப்பட வேண்டாம். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்!'' என்றேன். அன்று அவர்கள் கடைசி வரை இருந்து அமைதியாக ரசித்தது மட்டுமல்ல; இதுபோன்ற ஒரு நிகழ்ச்சியைப் பார்த்ததில்லை என்று மகிழ்ச்சியோடு தெரிவித்ததாகப் பரவசப்பட்டார் ஏற்பாடு செய்தவர். நாம் சீரியஸாக இருந்து, நூறு சத நம்பிக்கையுடன் நிகழ்ச்சியை வழங்கினால், ரசிகர்கள் உள்ளத்தை நிச்சயம் வெல்லலாம். அவர்களுக்கு மோசமானதுதான் பிடிக்கும் என்று நாமாகத் தீர்மானித்துக் கொண்டு, அவர்கள் ரசனையைத் தாழ்த்தும் விதத்தில் நிகழ்ச்சிகள் அளித்தால் நமக்குத்தான் தோல்வி!

''எங்கள் பரத கலாஞ்சலி, சிங்கார ரசத்தை விட பக்திரச அடிப்படையிலான நிகழ்ச்சிகளுக்கே முக்கியத்துவம் கொடுத்து

சீனா, ஜப்பான், கலிர், ரஷ்யா உட்பட உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று வெற்றிகரமாக நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தி வந்திருப்பவர் தனஞ்செயன். பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தின் ஓர் அம்சமான செமஸ்டர்-அட்-ஸீ என்ற மிதக்கும் கப்பல் கல்லூரியில், தொடர்ந்து மூன்று முறை இந்தியக் கலை, கலாச்சாரம், நடனம் ஆகியவற்றை எடுத்துரைத்து நிகழ்ச்சிகளும் வழங்கியிருக்கிறார். 'கண் சிவந்தால்



வகுப்பில் பயிற்சி

டாக்டர் கலைஞர்



இந்த டாக்டர் கலைஞருக்கும் அரசியலுக்கும் சம்பந்தம் கிடையாது!

இசையுலகில் சாதாரணமாக, சங்கீதம் கற்றுக் கொண்டு அதில் டாக்டர் பட்டம் வாங்குகிறவர்களைத்தான் பார்த்திருப்போம். ஆனால் டாக்டருக்குப் படித்துவிட்டு எம். டி. பட்டமும் பெற்ற ஒரு மருத்துவ நிபுணர், இசையிலும் அறிஞராக விளங்குவார் என்று யார் நினைத்துப் பார்க்க முடியும்!

டாக்டர் ஸ்ரீபாத பினாகபாணி கர்நூல் மருத்துவக் கல்லூரியில் மருத்துவப் பேராசிரியர். மருத்துவ ஆலோசகராகக் கர்நூல் சீனிவாசநகரில் தனியே பிராக்டிஸ் செய்து வருகிறார்.

பதினொன்றாவது வயதிலேயே இசைப்பயிற்சியை ஆரம்பித்து விட்டாராம். மைசூர் லட்சுமணராவ், வயலின் மேதை த்வாரம் வெங்கடசாமி நாயுடு, ஆர். ராமானுஜ ஐயங்கார் ஆகியோரிடம் பயின்றவர் டாக்டர் பினாகபாணி.

தமது இருபத்தாறாவது வயதில் —1939 செப்டம்பரில் — முதல் மேடைக்கச்சேரி செய்யத் துவங்கியவர். தென்னிந்தியாவில் பாடாத இடங்கள் வெகுசில.

ஆந்திர சங்கீத நாடக அகாதமி, மத்திய சங்கீத நாடக அகாதமி விருதுகள் தவிர அரை டஜனுக்கும் அதிகமான பட்டங்கள், மரியாதைகள் பெற்றவர் டாக்டர் பினாகபாணி. திருமலை — திருப்பதி தேவஸ்தான ஆஸ்தான வித்துவான் என்ற கௌரவமும் இவருக்கு உண்டு.

நேதநூரி, வோலெட்டி, நூகல சின்ன சத்யநாராயணா, ஸ்ரீரங்கம் கோபாலரத்னம், ஸ்ரீமதி வசுந்தரா, புல்லாங்குழல் சுபாஷ் பத்ரி — என்று புகழ்பெற்ற இவரது சீடர்கள் பெயரைச் சொன்னாலே இந்தக் குருவின் பெருமையைத் துல்லியமாகத் தெரிந்து கொள்ளலாம்.

சென்னை மியூசிக் அகாதமியினர், சங்கீத கலாநிதி விருதை யாருக்கு வழங்கப் போகிறார்கள் என்ற ஆவலையும் எதிர்பார்ப்பையும் ரசிகர்களிடையே ஒவ்வொரு வருடமும் தூண்டிவிட்டு, பெயர் அறிவித்தவுடன், 'அப்பாடா! சரியான நபரைத்தான் பிடித்திருக்கிறார்கள்!' என்று ஆறுதல் அடையும்படி செய்வார்கள். இந்த வருடமும் அதற்கு விலக்கல்ல.

—எஸ். விசுவநாதன்

◆◆

மண் சிவக்கும்' படத்தில் கோபாலகிருஷ்ண பாரதியின் நந்தன் சரித்திரத்தை'ப் பதினைந்து நிமிடங்களுக்கு நடன நிகழ்ச்சியாக அளித்திருக்கிறார். (திரையில் மூன்று நிமிடங்களே காண்பித்தார்களாம்!)

தனஞ்செயனுக்கு வெளிநாட்டு, வட இந்திய மாணவிகள் நிறைய இருக்கின்றார்கள். இப்போது நிறைய ஆண் பிள்ளைகள் நடனம் கற்றுக் கொள்ள வருவதாகக் குறிப்பிட்டார். பரத நாட்டியத்துக்கு, துறையூர் ராஜகோபால சர்மா தமிழிலும் தெலுங்கிலும் இயற்றி அளித்துள்ள கீர்த்தனைகளுக்கு நாட்டிய உலகம் என்றென்றும் கடமைப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார் தனஞ்செயன்.

காலையில் மூன்று மணி நேரம், மாலையில் மூன்று மணி நேரம் — மாணவ-மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்கிறார். மனைவி சாந்தா துணையுடன். தங்கள் நிகழ்ச்சிகளுக்கான உருப்படிகளைத் தயார் செய்தல், கடிதப் போக்குவரத்து, நிர்வாகம் எல்லாம் இருவருமே கவனித்துக் கொள்கிறார்கள்.

தனஞ்செயன் தமது குழுவைத் தாமே உருவாக்கியிருக்கிறார் — பாட்டுக்கு அரவிந்தாட்சன்; வயலினுக்கு பத்மநாபன்; மிருதங்கத்துக்கு கண்ணன் என்று. மூத்த மகன் சஞ்சய் ரிஷிவாலி பள்ளியில் ப்ளஸ்-டூ மாணவர்; அங்கேயே எம். எஸ். வி. யிடம் கர்நாடக இசையும் பயிலுகிறான். இரண்டாவது மகன் சத்யஜித் இங்கேயே நாலாவது படிக்கிறான்; நாடகங்களில் நடிக்கிறான்; வயலின், பரதநாட்டியம் இரண்டும் கற்றுக் கொள்கிறான்.

கலாக்ஷேத்திரா கண்டெடுத்து உருவாக்கிய கலைஞர், சென்னை கிருஷ்ண கான சபா 'நிருத்ய சூடாமணி' விருதை, தகுதியான நபருக்குத்தான் வழங்குகிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

—சாருகேசி





எரிச்சல்

ஆர். கோபாலன்,
ஸ்ரீரங்கம்,

பல நாட்கள் அலுவலக வேலையாக முகாம்களுக்குச் சென்றுவிட்டு மனைவி கைச்சாப்பாட்டுக்கு ஏங்கிக் கொண்டு குஷியுடன் வீடு வந்து சேரும்போது அவள் அந்த மூன்று நாட்கள் ரஜாவில் இருப்பதைக் கண்டு திடுக்கிட்டு. எள்ளும் கொள்ளும் வெடிக்க நானே கரண்டியைப் பிடிக்கும் பொழுது...

என். சித்ரா, தஞ்சாவூர்.

திரைப்படம் முடியும் தருவாயில் பார்க்கப் பொறுமையில்லாமல் எழுந்து நின்று மறைத்துக் கொண்டும் போய்க் கொண்டும் இருக்கும் ஜனங்களைப் பார்க்கும்போது...

கே. பாலாஜி, பெங்களூர்.

தோளில் ஆறு மாதக் குழந்தையுடன் கையில் குழந்தைக்கான பால் புட்டியுடன் தியேட்டர் வாசலில் வெய்யிலில் கூட்டத்தில் இடிபடும் ஒரு தந்தையைக் கண்ட போது எனக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்தது. இப்படியாவது 'முந்தானை முடிச்சைக்' காண வேண்டுமா?

எந்தல் ஆர். இளங்கோ
திருச்சி.

தேர்வுக்கு மும்முரமாகப் படித்துக் கொண்டிருக்கும் போது 'ஒலி' நோட்ஸ் கேட்டு நண்பன் வந்து நிற்கும்போது....

எஸ். ஆர். ரங்கநாதன்
சென்னை-5.

நிலையத்தில் முன்னதாக நிற்கும் பஸ்ஸில் ஏறி உட்கார இடம் பிடித்ததும் ஓட்டுநர் வந்து. ''இது போகாது. [illegible] வண்டிக்குப் போங்கள்'' என்பார். அடித்துப் பிடித்து ஓடி அதில் ஏறுவதற்குள் அது நம்மை விட்டுவிட்டுப் புறப்பட்டு விடும்போது.....

வி. பாலகிருஷ்ணன்,
கோமியா, பீஹார்.

தேய்ந்து போன சோப், இதை வைத்துக்கொண்டு இன்றைக்குச் சமாளித்து விடலாம் என்று குளிக்கச் செல்லும்போது அந்தச் சோப்பும் கைநழுவிச் சாக்கடையில் விழும்போது..

வி. சிவகலா, புதுப்பட்டிணம்,

அவசரமாகச் சமையல் செய்யும் போது மாடியில் இருக்கும் கணவர் அழைத்து, அதே அறையில் உள்ள அலமாரியில் இருக்கும் புத்தகத்தை எடுத்துத் தரச் சொல்லும்போது, ஏற்படுவது எரிச்சல் அல்ல, எர்ர்ரிச்சல்.

கோ. பாஸ்கர்,
இளங்கார்குடி.

முன்னால் நிற்கும் வாகனம் ஓரிரு நிமிஷங்களில் புறப்பட்டு விடும் என்று தெரிந்தும் விடாப்பிடியாக ஏர் ஹாரன் அடிக்கும் டிரைவர்கள் மீது எரிச்சல்.

மொ. ப. குமாரதாசன்
கோம்பை.

திருக்குறளை மனப்பாடமாக ஒப்பிக்காத மாணவன் மாணவர் மன்றத்தில் 'நேற்று இராத்திரியம்மா' பாடலை அடிபிறழாமல் இராகத்தோடு பாடும்போது....

எம். பன்னீர்செல்வம்
நியூஸ்பிரிண்ட் நகர்.

கல்கியில் ஏகப்பட்ட போட்டி அறிவிப்புகள் பார்த்துத் தொடர்ந்து எழுதியும் எனக்குப் பரிசுக்கான சத்தே. இல்லாதபோது திரும்பவும் அடுத்த அறிவிப்பைக் கல்கியில் பார்க்கும் போது...

வசந்தாசாரி காகிநாடா.

நாம் ரசித்துக் கேட்டுக் கொண்டிருக்கும் திரைப் பாடலை 'லபக்' என்று குரல்வளையைப் பிடித்து நிறுத்திவிட்டு, பிறகு நேரத்தைச் சரிக்கட்ட... வாத்திய இசை ரேடியோவில் போடும்போது...

அநுராதா ஜெகன்னாதன்:
குரு: சுவாமிமலை கே. ராஜரத்தினம்

ஒருசமயம் திருவனந்தபுரத்தில் சுவாதித் திருநாள் இயற்றிய வர்ணத்துக்கு அபிநயம் செய்யவிருப்பதாகக் கா[illegible]யில் நான் சபா காரியதரிசியிடம் சொன்னபோது மங்களம் பாடும்போதும் சுவாதித்திருநாள் கிருதிக்கே அபிநயம் பிடிக்கும்படி அவர் கேட்டுக் கொண்டார். எனக்கு வியப்பும் தயக்கமுமாக இருந்தது. அவர்களுக்கு ஏமாற்றம் தரக் கூடாது என்று என் குரு அன்றே அங்கேயே 'புஜக சாயினம் — நாம மங்களம்' என்ற பாடலுக்கு நடன அமைப்புச் செய்து கொடுத்து என்னை அன்று மாலை ஆடச் செய்தார். என் நடன நிகழ்ச்சிகளில் மங்களம் பாடும்போதெல்லாம் இது நினைவுக்கு வரும்.



சிகாமணி சோமு



அறுபத்தைந்து வயது எட்டியபிறகும் தம் மதுரை சோமு குருகுல வாசத்தைத் (குரு:- சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை) தமக்குக் கிடைத்த பெரிய பேருகக் கருதுகிருர். "14 வருடம் குருகுலவாசம் பயின்றேன். துணி தோய்ப்பது, கடைச் சாமான்கள் வாங்கிக் கொடுப்பது போன்ற எளிய பணி விடைகள் செய்ய வேண்டும்; பாட்டு கற்றுக் கொள்வதற்கு அதெல்லாம் தான் முதற்படி! தப்பாகப் பாடிருல் அடி விழும்!" என்று பழைய நாட்களை நினைவுகூர்கிருர்.

இண்டியன் ஃபைன்ஆர்ட்ஸ் சொஸைட்டி இந்த ஆண்டு மதுரை சோமுவுக்கு 'சங்கீத கலா சிகாமணி' பட்டம் வழங்கவிருக்கிறது.

எல்லாப் பாடகர்களையும் (சிறப்பாக அரியக்குடி, ஜி.என்.பி., முசிறி) சோமுவுக்குப் பிடித்திருந்தாலும், ஜி. என். பி. சற்று அதிகமாகவே கவர்ந்திருக்கிருர் போலத் தெரிகிறது. "ஒரு ராகத்தைக் கற்பனை வளத்துடனும், அதேசமயம் ஜனரஞ்சகத்துடனும் பாடுவதில் ஜி. என். பி. சாருக்கு இணை யாருமில்லை!"

ஜனரஞ்சகம் முக்கியம் என்பது சோமுவின் தீவிரமான கருத்து மட்டுமல்ல; செயலிலும் கடைப்பிடித்து வருகிருர். "நவம்பர் 21-ம் தேதியன்று டெல்லியில் டிரேட் ஃபேர்; ஒன்றரை மணி நேரம் கச்சேரி. இந்த மாதிரி குறுகிய கால அவகாசத்தில் பாடுவது எனக்கு ஏற்காது. இருந்தாலும் பாடினேன். கச்சேரி முடிகிற சமயம் வந்து விட்டது என்று தலைப்பாகை அணிந்த பஞ்சாபிக்காரர் ஜாடை காட்டினுர். சட்டென்று எனக்குத் தெரிந்த கபீர்தாஸ் பஜன் பாடினேன். நிலைமை இலகுவாகி கூட கொஞ்ச நேரம் கிடைத்தது!" என்று சொல்லிச் சிரிக்கிருர். இதுபோல கோட்டாம், திருவேற்காடு போன்ற இடங்களில் பாடுவதற்கு ஏற்ற சில உருப்படிகளைத் தெரிந்து வைத்துள்ளார்.

கோயில்களில் பாடுவதென்ருல் மதுரை சோமுவுக்குத் தனி உற்சாகம். இரவு 9.30க்கு துவங்கி, விடிகாலை இரண்டு இரண்டரை மணி வரை கூடப் பாடுவாராம்! "என் மாதிரி மதுரை மணி ஐயருக்கும் கோயிலில் பாடுவதென்ருல் குஷி."


பிற பாடகர்களின் கச்சேரியைக் கேட்டு ரசித்துப் பாராட்டுவது ஒரு நல்ல குணம். அதில் 'செம்பைக்கு இணை செம்பைதான்' என்று மகிழ்ச்சியுடன் சொன்ஞர். முன் வரிசையில் அமர்ந்து, "பலே!" "பேஷ்!" என்று ஆஹாகாரம் போட்டு உற்சாகப் படுத்துவாராம். "இப்போது அந்த வழக்கம் வெகுவாகக் குறைந்து விட்டது" என்று வருத்தப்படுகிருர் சோமு.

அண்ணுமலை சர்வகலா சாலையில், 'பைன் ஆர்ட்ஸ்' பகுதிக்கு முதல்வராகப் பணியாற்றி வரும் மதுரை சோமுவுக்கு சினிமா பார்ப்பதிலும் (குறிப்பாக பக்திப் படங்கள்) கிரிக்கெட் மாட்சிலும் தீவிர ஆர்வம். "கவாஸ்கர் பெரிய ப்ளேயர்; பம்பாய் ஆட்டத்தில் சரியாக ரன் எடுக்கவில்லை. காரணம் 'பிட்ச்' அப்படி! அதே மாதிரிதான் பாடகர்களுக்கும்; சில இடங்களில் சரியாக அமையாது!"

ஐ. வி. எஃபில் ஆபீசராகப் பணி புரியும் மூத்த மகனுக்கும், பி. காம் படிக்கும் இரண்டாமவனுக்கும் சங்கீத ஆர்வம் உண்டு. மூத்த மகன் மிருதங்கம் வாசிப்பார்.

பேட்டி: தமயந்தி

படம்: நாமு



'சரி' கமபதநிஸ!
ஒவ்வொரு கீர்த்தனை முடிஞ்சவுடன் அந்த மாமி வெளியே ஓடிப்போய்ப் புடவை மாத்திண்டு வராங்களே பாத்தியா?
ஆமா! தீட்சதர் கிருதியின் போது பனாரஸ் சில்க், தியாகய்யர் கீர்த்தனைக்கு பொச்சம்பள்ளி, தமிழ் பாட்டுக்கு காஞ்சிபுரம் மாட்சாக இருக்கட்டு மேன்னு.....
சங்கீதம் கேட்டா பயிர் அமோகமாக விளையுமாமே. அங்கு அந்த வயல்லே விளைஞ்ச மாதிரி இதிலே விளையலையே!
பாட வந்த பாகவதர் அந்த வயலுக்கு எதிரே கீர்த்தனைகளையும், இந்த வயலுக்கு எதிரே துக்கடாக்களையும் பாடிருராம்.
வாசிக்க ஆரம்பிச்ச ஒரு நிமிஷத்துக்குள்ளேயே கடவித்துவான் மோசம்னு குப்புடு எப்படிச் சொன்னார்?
ஜுகல் பந்தி கச்சேரி பண்ணிவிட்டு வந்த பாகவதர் ஏன் கடு கடுன்னு இருக்கார்.
அவர் பையன் வடநாட்டுப் பெண்ணை லவ் பண்றானாம். கல்யாண ஜுகல் பந்திக்கு அப்பா சம்மதிக்கணும்னு சொல்றானாம்.
அட! ஒவ்வொரு கச்சேரியிலேயும் எண்ணிப் பத்துப் பாட்டு பாடுவாராமே, ஏன்?
இவர் சங்கீத வித்துவான் ஆகிறதுக்கு முன்னே தமிழ் வித்துவானாக இருந்தவர் அச்சே.



எதுக்குடா அவர் தன் பையன்களை உச்சஸ்தாயி, கீழ்ஸ்தாயின்னு கூப்பிடறார்?
ஒருத்தன் விமானக் கம்பெனியிலே வேலையா இருக்கான், மத்தவன் கோலார் தங்க சுரங்கத்திலே....
பாகவதர் எதுக்கு டேப் ரிகார்டரோட மேடை ஏறுகிறார்?
ஒவ்வொரு பாட்டு முடிஞ்சவுடன் அதை 'ஆன்' பண்ணி விளம்பரங்களை ஒலிபரப்புவாராம்!
அந்தப் பாட்டு வாத்தியாரோட குரலிலே இருக்கிற 'கார்வை'யிலே மயங்கிப் பாட்டு சொல்லிக்கப் போனியே, ஏன் நின்னுட்டே?
'கார்வை' சரியாகத்தான் இருந்தது. ஆனா போகப்போக, 'பார்வை'தான் சரியா இல்லே!
டீ.வியிலே கிரிக்கெட் காட்டற மாதிரி நம்ம இசை அரங்கத்தையும் காட்டணும்னு சொன்னேளே, எப்படி?
கஷ்டப்பட்டு மேல் பஞ்சமத்தைப் பிடிச்சதை 'ஆக்ஷன் ரீப்ளே'யா மறுபடியும் காட்டி ஜ கொறஞ்சா. போயிடுவாங்க!
தேசீய மயமாக்கப்பட்ட பாங்க் அதிகாரிகளெல்லாம் அவர் கச்சேரிக்குத் தவறாம வராங்களே, ஏன்?
ஒவ்வொரு பாங்கிலேயும் ஒவ்வொரு ராகத்தை அடமானம் வெச்சிருக்காராம். அதையெல்லாம் பாடாம இருக்காரான்னு செக் பண்ண!....
ஜம்புநாத்

ஜங்ஷனிலே ஒரு மேம்பாலம்

8

மேம்பாலத்தின் படிகளை ஏறிக்கடந்து தெற்கு கோடிக்குப் போகத் திரும்பினான் காசி. தூரத்தில் எதிரே பாலத்தின் மறு கோடியில் ஜரிகை எம்ப்ராய்டரி செய்த ஆகாய வண்ணச் சேலை தெரிந்தது. இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடியைப் பார்த்தால் முகம் தெரியாது. அதுவும் இந்த நாலரை மணி சாயங்காலத்தில் திடீரென்று இருட்டிக் கொண்டது. ஏதோ ராத்திரி ஏழு மணியான இருட்டு. அந்த இருளை அவ்வப் போது பிளந்து கொண்டு மழை வரப் போகிறது என்று இரண்டு மூன்று மின்னல்கள் எச்சரித்து விட்டுப் போயின.


அந்த முகம் தெரியாத வேளையிலும் ஆகாய வண்ணச் சேலையைப் பார்த்ததும் காசிக்கு அது எஸ்தர் என்று தோன்றியது. மேலே நடக்க நடக்க அவள் எஸ்தர்தான் என்பது நிச்சயமாயிற்று.

அவர்கள் இருவர் மத்தியில் நான்கு சந்திப்புகள் நடந்து விட்டன. இரவு ஜங்ஷனில் அவள் ரயிலிறங்கியது. அப்புறம் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து திரும்பும்போது. மறுநாள் காலையில் சைக்கிள் விடும்போது. அடுத்து ஹரியைப் பார்க்க அவள் நேற்று மாலை ஆஸ்பத்திரிக்கு வந்தபோது.

இது ஐந்தாவது சந்திப்பு. அவளை மீண்டும் சந்திக்க வேண்டும் என்று தனக்குள் விருப்பம் ஏற்படுவதைக்காசி உணர்ந்தான். தன்னைப் பற்றித் தனக்குள் நேர்ந்த இந்தப் புது மாறுதலைப் பற்றி அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது.

பாலத்தின் வடப்புறப் பாதியை மெதுவாக அவள் வந்து கடந்து கொள்வதற்குத் தோதாகக் காசி மெல்லக் கடந்தான்.

முசிறி சுப்பிரமணிய ஐயருக்குச் சொந்த ஊர் முசிறி இல்லே; பொம்மபாளையம். இதை அவரே ஒரு முறை சொன்னார். ''ஒரு கர்நாடக சங்கீத வித்வான் இவ்வளவு பெரிய கிராமத்தை எப்படிப் பெயருக்கு முன்னால் வைத்துக் கொள்ள முடியும்!'' என்று [illegible] சொன்னார்.



எஸ்தர் தனியாகத்தான் வந்து கொண்டிருந்தாள். நிமிர்ந்து சற்றே மோவாயை உயர்த்திக் கொண்டு அவள் நடந்து வருவது கம்பீரமாக இருந்தது. கையை லேசாக விசிவீசி ஆட்டிக் கொண்டு பாலத்தின் இருபுறமும் நிற்பவர்கள் பார்வையை அநாயாசமாகக் கடந்து அவள் வந்தாள். அவளிடம் தன்னை ஈர்க்கிற ஓர் அதிசயக் கவர்ச்சி அந்த நடையில் வெளிப்படுவது போல் காசி நினைத்தான்.

ஒரு தன்னம்பிக்கை. ஒரு புத்தி சாதுர்யம். என்னைப் பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும் என்று தோன்ற வைக்கிற ஒரு நிதானம்.

எஸ்தரும் காசியும் பாலத்தின் மத்தியிலிருந்த டிக்கெட் கவுண்டருக்கு இரண்டு இரும்புத் தூண்கள் தள்ளிச் சந்தித்தனர். அந்நேரத்தில் தான் மழை ஆரம்பித்தது.

சில்லென்று ஒரு காற்று வந்தது. திடீரென்று படபடவென்று சீறலோடு ஒரு பெரிய மழைச் சாரல்.

மழை வேகம் எதிர்பாராத அளவு துரிதமாயிற்று. பாலத்தில் வடக்காகவோ தெற்காகவோ எப்படி ஓடிக் கடந்தாலும் நனைய வேண்டியதுதான்.

''நின்னுடலாம்'' என்று அவள் சிரித்துக் கொண்டே சொன்னாள். அவள் நெற்றியில் ஒரு பொட்டுச் சாந்து வைக்கப்பட்டிருந்தது. சாதாரணமாகக் கிறிஸ்தவப் பெண்கள் பொட்டு வைப்பதில்லை. இந்த மாற்றம் அவள் முகத்துக்கு ரொம்ப இயற்கையாகப் பொருந்தியிருந்தது.

''ஆமா... நிக்க வேண்டியது தான். எப்படிப் போகணும்னாலும் நனையணும்... இப்படி ஓரமா வந்துடுங்க.'' அவன் சாரல் பக்கமாகக் கொஞ்சம் தோள் பட்டையை நகர்த்தி அவள் தன்னருகில் மேலே படாமல் ஒதுங்கி நிற்க இடம் கொடுத்தான்.

''எனக்காக நீங்க மழையிலே நனைய வேணும்'' என்று தனக்கருகே அவன் விட்டிருந்த காலியிடத்தைக் குறித்துச் சொன்னாள்.

காசி மழையில் நனைந்த தன் தோள் பட்டையை நகர்த்திக் கொண்டான். இப்போது அவர்கள் இருவரும் ஒருவர் தோளை ஒருவர் தொட்டுக் கொள்ளும் நெருக்கத்தில் இருந்தனர்.

''எங்க திடீர்னு மழையிலே கௌம்பிட்டீங்க?'' என்று கேட்டான் காசி.

''ஹாஸ்பிடலுக்குப் போய் ஹரியைப் பாக்கலாம்னுதான் வந்தேன். வர்றப்போ மழை வர்ற மாதிரியே இல்லே...''

அவளிடமிருந்து சந்தனப் பௌடரின் வாசனை வந்தது. அதற்கு மேல் லேசான நறுமணம். ஒரு விலையுயர்ந்த சென்டின் நறுமணம்.

''ஆமா... நான் ஹரி வீட்டிலே பொரு வுங்களுக்கு எரை போடச் சொன்னுன். அதுக்காகக் கௌம்பினேன்.''

''சைக்கிள்ளே வந்திருக்கலாமே.''

''எனக்கு நடக்கறது தான் ரொம்பப் பிடிக்கும். அவசரமா இருந்தா தான் சைக் கின் எடுப்பேன்!''

அவள் கன்னங்குழியப் புன்னகை செய் தாள். பாலத்தின் வடக்கும் தெற்குமாக மழைக்குப் பயந்து ஜனங்கள் ஓடிக் கொண் டிருந்தார்கள். போகிற ஒவ்வொருவனும், ஒவ்வொருத்தியும் இவர்கள் இருவரையும் அரைப் பார்வையாகவாவது பார்த்து விட்டுத்தான் போனுர்கள்.

முந்தாநாள் இவனோடு சைக்கிளில் போவ தற்குத்தான் சங்கடப்பட்டோமே என்று



நினைத்தான். இப்போது குளிர்விட்டுப் போனது போல் ஒரு சுதந்திர உணர்வு.

சட்டைப் பைய்ல் கையை விட்டு மவுண்டிவிருந்து கிழிந்து எடுக்கப்பட்ட ஒரு நிறம் பழுத்த சற்று மங்கிப் போன போட்டோ ஒன்றை எடுத்துக் காட்டினான் காசி.

''என்னது இது?''

''பாருங்க... நான் மாத்யூ சார்கிட்டே படிக்கறப்போ எடுத்த போட்டோ.''

அவள் வாங்கிப் பார்த்தாள். ஐந்தாம் வகுப்பு—ஏ என்று ஒரு ஸ்லேட்டுப் பலகையில் எழுதிப் பிடித்துக் கொண்டு ஒரு பையன் கீழே உட்கார்ந்திருந்தான். இரண்டு முன் பெஞ்சுகளில் வரிசையாக ஆசிரியர்கள். இரண்டு பெண் டீச்சர்கள். நடுவில் நாற்காலியில் அவனது தந்தை 'மாத்யூ சார்' கழுத்தில் ஒரு மாலையுடன் உட்கார்ந்திருந்தார். பின்னால் இரண்டு வரிசை மாணவர்கள். ஒரு வரிசை தரையில். அதற்கு அடுத்த வரிசை பெஞ்சின் மேல். கடைசி வரிசையில் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு இரண்டு கைகளையும் மார்பின் மீது கட்டியவாறு போட்டோவுக்கு நடுநாயகமாக நின்றிருந்தான் காசி.

போட்டோவை வாங்கியதும் அந்த இரண்டு முகங்கள் தான் கண்ணைக் கவர்ந்தன. கெய்சர் மீசையும் நீலக் கோட்டும் பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியுமாக மாத்யூ சார். மார்பில் கைகட்டி விறைத்து நிற்கும் காசி.

''ஏன் இப்படி நின்னுக்கிட்டிருக்கீங்க?''

''என்னை வளர்த்தவரு, அதான் கேசவ நயினு. அவரு ஒரு விவேகானந்தர் பக்தர். பக்கத்திலே நாட்ரும்பள்ளின்னு ஒரு ஊர்ல ராமகிருஷ்ண மடம் இருக்கு. அங்கல்லாம் போய்ட்டு வருவாரு. அவர்கிட்டே ஒரு விவேகானந்தர் போட்டோ இருக்கும். அதிலே மகாராஜா மாதிரி மார்மேலே கைகட்டி நிக்கறு மாதிரி விவேகானந்தர் போஸ் குடுப்பாரு. அது எனக்கு ரொம்பப் புடிக்கும்...''

''அதனாலே அதே மாதிரி நின்னுட்டீங்களா?''

''ஆமாம்'' என்று தலையசைத்தான் காசி. மேலே கூரையிலிருந்து அவர்கள் கால்களுக்கு நேராக மழை சொட்டிற்று.

''பாத்து... நனைஞ்சுடப் போவுது'' என்று எச்சரித்தான் காசி.

''அவ்வளவு பத்திரமாப் பாதுகாக்கறீங்களா?'' அதை அவள் அவனிடம் மறைபடாதவாறு கவிழ்த்தவாறே நீட்டினாள். விரல்களில் காப்பி கலரில் நகச்சாயம் பூசியிருந்தாள். மாநிறத்திற்கு அந்த நகச்சாயம் பளிச்சென்று மாறுபாடாகத் தெரிந்தது.

''அழகா இருக்கு'' என்றான் காசி.

''எது?''

''நகச்சாயம்.''

அவள் தன் விரல்களை ஒருதரம் பார்த்துக் கொண்டாள்.

''தாங்க்ஸ்'' என்றாள். அவன் அவளிடம் முதன் முறையாகத் தன் படிப்பின், பண்பாட்டின் அடையாளத்தை வெளியிடுவது போன்று அந்த வார்த்தையைச் சொன்னதும் தான் அவனுக்கும் தனக்கும் மத்தியில் உள்ள பெரிய இடைவெளி காசிக்குச் சட்டென்று புலப்பட்டது. இவள் மாத்யூசாரின்

சின்ன தம்புரா!

கும்பகோணம் சகோதரர்கள் சங்கரன்-விசுவநாதன் வடிவமைத்து, தற்போது இரண்டு வருடங்களாகப் பிரபலமாகி வருகிறது ஒரு தம்புரா. சாதாரண தஞ்சாவூர், திருவனந்தபுரம் தம்புராக்களின் நாதத்திற்கு ஈடாக இருப்பதாக, இதை வாங்கியிருக்கும் இசைக் கலைஞர்கள் பலரும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்களாம். விலையும் முந்நூற்றைம்பது ரூபாய்க்குத்தான் ஆகிறது. தொடர் ஒலி அல்லது வைப்ரேஷன் சுத்தமாகக் கேட்க வேண்டும் என்பதற்காக, நான்கு அடி நீளத்தைக் குறைக்காமல் செய்திருக்கிறார் திரு. விசுவநாதன். பழக்கத்திலிருக்கும் தம்புராவின் குடம் போன்ற பகுதியை மாற்றிக் கனமில்லாமல் அமைத்திருக்கிறார்.

பிளேனில் எடுத்துக் கொண்டு போகும்போது சீட்டிலே சௌகரியமாக வைத்துக் கொள்ள முடிகிறது. 'கார்கோ'வில் போட்டு, போய்ச் சேரும் இடத்தில் உடைந்து போகிற கவலை இல்லை. எடையும் குறைவு. இதனாலேயே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கர்நாடக இசை ஆர்வமுள்ளவர்கள் இதை வாங்கிப் போகிறார்களாம். எந்த நகரங்களிலுமுள்ள மாறுபட்ட சீதோஷ்ண நிலைக்கும் இந்த மரம் பொருத்தமாயிருக்கிறது. நாலு தந்திகள் உள்ள இந்த வழக்கமான தம்புரா தவிர, தேவைப்பட்டவர்களுக்கு 5 தந்திகளிலும் 7 தந்திகளிலும் செய்து கொடுக்கிறார் திரு. திரு. விசுவநாதன்.


—எஸ். வி.

படம்: தூரு

திரு விசுவநாதன் - திரு சங்கரனின் மகளுடன்



பற்குழிகளைக் கண்டான் என் மகன் ஒரு நாள்!



போர்ஹென்ஸ் ஃப்ளோரைடு

ருசியானதும் நுரைதருவதுமான டூத்பேஸ்ட்
உங்கள் பற்கள் மற்றும் ஈறுகள் இரண்டையுமே
பாதுகாக்கிறது.



331F/72 TAM

மகள். என்ஜினியர் பீட்டரின் அக்கா மகள்.

மனசிற்குள் மூடுபனி போன்று கவிழ்ந்த ஒரு கனவு பட்டென்று கலைந்து சூரிய வெளிச்சமானது போல் காசி உணர்ந்தான். அடடா... ஒரு பெண்ணின் நெருக்கத்துக்கு என்ன சக்தி இருக்கிறது!

''அந்த தாங்ஸுக்கு என்ன பதில் சொல்றதுன்னு தெரியல்லெ... நோ... என்னவோ நோன்னு சொல்வாங்களே!'' என்று உண்மையிலேயே குழம்பினான் காசி.

''நோ மென்ஷன்'' என்று எடுத்துக் கொடுத்தாள்.

''நோ மென்சன்'' என்று கொச்சையாகச் சொன்னான்.

''மென்சன் இல்லே... மென்... ஷன்... ஷ சொல்லுங்கோ...''

''நோ மென்ஷன்.''

''ஆங்... இப்பத்தான் கரெக்ட்.''

அந்நேரத்தில் வாரியடிக்கும் அந்த மழையின் உக்ரத்தைப் பொருட்படுத்தாமல் பனிச்சென்று ஹெட்லைட்டுடன் ஒரு ரயில் தொடர் சீறிக் கொண்டு ஜங்ஷனுக்குள் நுழைந்தது. காசி அதன் சீற்றத்தையே திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''நீங்க ஏன் படிக்கலே காசி?''

அவளைத் திரும்பிப் பார்க்காமல் ஒவ்வொரு பெட்டியாகக் கடந்து கொண்டு நீளமாக நிற்காமல் ஓடிய அந்த ரயிலைப் பார்த்துக் கொண்டே காசி பதிலளித்தான்.

''என்ன காரணத்தாலேயோ எனக்கு ரயிலுங்களை ரொம்பப் புடிக்குதுங்க. கேசவனைறு எவ்வளவோ சொல்லிப் பார்த்தாரு. நான் பள்ளிக்கூடம் போறதா சொல்லிட்டு இங்கே வந்து நின்னுக்குவேன். போற வர்ற ரயிலுங்களை வேடிக்கை பார்த்துக்கிட்டே நிப்பேன். ரயில்லே எத்தனையோ ரகம் இருக்குதுங்க. நீங்க கவனமா நோட் பண்ணீங்கன்னு கண்டுக்கலாம்.''

அவன் குரலில் ஒரு தொலைதூரத்தைக் குறித்த ஆழமான சோகம் இருந்தது.

''என்னென்ன ரகம் இருக்கு சொல்லுங்க!''

''சில ரயிலுங்க ஜிகுஜிகுன்னு புதுக் கல்யாணப் பொண்ணு மாதிரி இருக்கும். சில ரயிலுங்க அப்பாடான்னு ஆடிக ஒடுங்க ரிட்டையரான கெழவனுங்க மாதிரி இருக்கும். சில ரயிலுங்க போக்கிரிப் பொடியனுங்க மாதிரி கட்டுத்தலைமா இருக்கும். சிலது அலாட்டா நெஞ்சை நிமிர்த்திகினு போற பயில்வான் மாதிரி இருக்கும்.''

அவன் சிரிக்காமல் தான் சொன்னான். என்றாலும் அந்த வர்ணனை எஸ்தருக்குச் சிரிப்பு வரவழைத்தது. அவள் கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள்.

''எதுக்கு சிரிக்கறீங்க. நெஜம்மா தாங்க சொல்றேன்.''

''யூ மீன்... அதாவது நீங்க என்ஜினைச் சொல்றீங்களா... ரயிலைச் சொல்றீங்களா?''

''என்ஜினு... ரயிலு எல்லாத்தையும் சேர்த்துத்தான் சொல்றேன்.''

''நீங்க எத்தனை ரயிலைப் பார்த்திருக்கீங்க?''

''எண்ணிச் சொல்ல முடியாதுங்க. ஆயிரக் கணக்கான ரயிலைப் பார்த்திருப்பேன்... ரயிலு ரயிலு... இப்படி இந்த மேம்பாலத்திலே வேடிக்கை பாத்துட்டு நின்னே காலம் பூடுச்சு...''

காசி இன்னமும் ரயிலே வேடிக்கை பார்த்துக் கொண்டே தான் பேசினான். மழைச்சாரல் இன்னும் வேகமாகச் சீறியடித்தது. காடுமுரடான தோற்றமுள்ள, ஒரு கொடுமையைச் சகிக்க முடியாத, வன்முறையில் நம்பிக்கையுள்ள இந்தக் காசியிடம் ஒரு மென்மையான காசி ஒளிந்திருப்பதை எஸ்தர் ரசித்தாள். (தொடரும்)



மீனாட்சி (சபாநாயகம்) சித்தரஞ்சன்

குரு: பந்தநல்லூர் சுப்பராய பிள்ளை

''இருஷ்ணா நீ பேகனே பாரோ'வும், பாபநாசம் சிவன் அவர்களின் 'தேவி நீயே துணை' பாடலும் சாதாரணமாக நடன நிகழ்ச்சிகளில் இடம் பெறும். 'தேவி நீயே துணை' பாடலின் சரணத்தில், திருமணத்திற்கு முன்பாக மீனாட்சி எப்படியெல்லாம் சுந்தரேஸ்வரர் சித்தத்தைக் கவர்ந்தாள் என்ற பொருள் வரும்

தேவாதி தேவன் சுந்தரேசன்
சித்தம் கவர் புவனசுந்தரி

என்னும் வரிகள் வரும்பொழுது, எனக்கு அம்மாவின் கவலையான முகம் தான் நினைவுக்கு வரும். ''உன் (மீனாட்சி) கல்யாணம் நடந்து நான் பார்க்க வேண்டுமே! எப்போது நான் அந்த சுபகாரியம் நிகழுமோ?'' என்று ஒவ்வொரு முறையும் வருத்தப்பட்டுக் கொள்ளுவாள். அதே போல், 'இருஷ்ணா நீ பேகனே'யில் குழந்தையைக் கொஞ்சும் இடம் வரும்பொழுதும் 'உன் குழந்தையையும் இதுபோல நீ சீராட்டும் காட்சியைப் பார்ப்பேனா!' என்று ஏங்குவாள்.

திருமணமாகி, இப்போது ஒரு குழந்தைக்குத் தாயாகிக் கொஞ்சுகிறநிலையில், இந்த இரண்டு பாடல்களுக்கும் அபிநயம் செய்யும்போது, எனக்குச் சட்டென்று அம்மாவின் முகம் தான் நினைவுக்கு வரும்!

"காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி என் குடும்பத்துக்கு ...திட்டமிட்ட பரிபூரண உணவு."



"பல வேளைகள் சாப்பிடத் தவறி விடும் என் கணவருக்கு"



"சாப்பிடும்போது சண்டித்தனம் செய்யும் என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும் என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான் எவருக்கும் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களால் முழுமை பெற்றது.



"அசதியினால் சரிவர சாப்பிட முடியாத எனக்கு"

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போ-ஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள், எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.

திட்டமிட்ட பரிபூரண உணவு

காம்ப்ளான்®

GLC. 10-2015 TM



6

திருமதி ஆப்பில்பீ சொன்ன விஷயத்தைக் கிரகித்துக் கொள்ள எங்களுக்குச் சில விநாடிகள் பிடித்தன.

திரு சந்துவின் முகம் ஏமாற்றத்தில் இறங்கிப் போயிற்று. இது என்ன ஒரு அசம்பாவிதமான திருப்பம் என்று எனக்குச் சங்கடமேற்பட்டது. ஃப்ரான்ஸின் தெற்குப் பகுதியைச் சேர்ந்த NICE–ஸில் நடக்கவிருக்கும் எழுத்தாளர் கூட்டத்தைப் பற்றி பாரீஸிலிருக்கும் இந்திய தூதரகம் அறிந்து அதைப்பற்றி இந்திய அரசாங்கத்துக்கு தெரிவித்து Indo French Cultural Exchange Programmeமில் ஏற்கெனவே தீர்மானித்திருந்தபடி திரு ஸந்துவும் நானும் பாரீஸிற்கு செல்லவிருந்தபடியால், அந்த சந்தர்ப்பத்தில் நடைபெறும் எழுத்தாளர் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொள்ளலாம் என்று யோசனை தெரிவித்திருந்தது. இந்த விஷயமாக நானும் சந்துவும் மிக உற்சாகமாக எங்கள் NICE பயணத்தை எதிர்நோக்கியிருந்தோம். ஃப்ரெஞ்ச் External Relations Ministry யில் உயர் பதவி வகிக்கும் திருமதி ஆப்பில்பீ அந்த மகாநாட்டைப் பற்றி எந்த விவரமும் தங்கள் அரசுக்குத் தெரியாது எனச் சொல்வதை நம்புவதா கூடாதா என்று நான் திகைத்தேன்.

மிஸஸ் ஆப்பில்பீ கொஞ்சங்கூடப் பதற்றமில்லாமல் முகத்தில் புன்னகை மாறாமல் சொன்னார்:

''எங்களுக்கு அதைப் பற்றிய விவரமே தெரியாததால் உங்களை அங்கு அனுப்புவதைப் பற்றி நாங்கள் இன்னும் முடிவெடுக்கவில்லை.''

திரு. ஸந்துவின் கோபம் லேசாக வெளிப்பட்டது.

''எங்கள் தூதரகத்துக்குத் தெரிந்திருக்கிறது. அதெப்படி உங்களுக்குத் தெரியவில்லை?''

மிஸஸ் ஆப்பில்பீயின் முகத்தில் மாற்றமில்லை.

''அதுதான் இதில் வியப்பைத் தரும் விஷயம். நாங்கள் விசாரிக்கிறோம். எங்களுடைய கவலை என்னவென்றால், தீர விசாரியாமல், ஒரு கூட்டத்திற்கு முக்கிய விருந்தாளிகளை அனுப்பலாமா என்பதுதான். நல்ல பெரிய எழுத்தாளர்கள் வருகிறார்களா அல்லது ஏதோ ஒருதான்தோன்றிக் கூட்டமா என்று பார்க்க வேண்டும். விசாரித்து உசிதப்படி செய்வோம். கவலைப்படாதீர்கள்.''

திரு. ஸந்துவிற்குச் சமாதானமில்லையென்று நன்றாகத் தெரிந்தது. மிஸஸ் ஆப்பில்பீ பேச்சை மாற்றினார்.

''பாரீஸ்ஸில் சுற்றிப் பார்க்க வேண்டிய இடங்களையெல்லாம் ஆன் காட்டுவார்.'' ஃப்ரெஞ்ச் நாடகங்களைப் பார்க்க எனக்கிருந்த ஆர்வத்தை நான் முன்பே தெரிவித்திருந்தேன்.

அதைப் பற்றி நான் மறுபடி ஞாபகப்படுத்தினேன்.

''நல்ல நாடகம் இருந்தால் கண்டிப்பாக ஏற்பாடு செய்கிறோம்'' என்று புன்னகைத்தார் திருமதி ஆப்பில்பீ. ''புதுமை என்கிற பெயரில் வரவர மேடையை ரொம்ப அசிங்கம் செய்கிறார்கள். அத்தகைய நாடகங்களை நீங்கள் பார்க்காமல் இருப்பது நல்லது. அவையெல்லாம் நிலையானதில்லை. அது

பாரீஸ் விஜயம்

வாஸந்தி

எங்கள் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாகவும் இல்லை.''

நான் பிற ஃப்ரெஞ்சுக்காரர்களுடன் பேசிப் பழக நேரிட்டபோது தங்களது புராதனக் கலாச்சாரத்தைப் பற்றிப் பெருமைப்படுவதிலும் அதைக் காப்பதிலும் அவர்களுக்கு இருக்க தீவிர பிடிமானத்தைக் கண்டு அசந்துபோனேன்.

அதே தீவிரத்துடன் தான் திருமதி ஆப்பிலபி, LIDO போன்ற இரவு நிகழ்ச்சிகளுக்குப் போக இயலுமா என்று திரு ஸந்து கேட்ட போது, அந்தக் கேள்வி ஏற்படுத்திய திகைப்பை மறைத்துக் கொண்டு சொன்னார்.

''எங்கள் விருந்தாளிகளுக்கு அத்தகைய நிகழ்ச்சிகளைக் காட்ட நாங்கள் விரும்பமாட்டோம். எங்கள் கலாச்சாரத்துடன் ஒட்டாதது அது.''

நாகுக்கான மறுப்பு – சிரிப்பு மாறாமல்.

அங்கிருந்து நாங்கள் விடைபெற்றுக் கொண்ட போது திரு. ஸந்து வெளியில் காட்ட முடியாத ஏமாற்றத்தில் படபடப்புடன் காணப்பட்டார்.

காரில் செல்கையில் என்னுடன் ஸரிந்தியில் முணுமுணுத்துக் கொண்டே இருந்தார்.

''இவர்கள் நம்மை அந்த மகாநாட்டுக்கு அனுப்புகிற வரை நான் விடப் போவதில்லை. நம்மை ஏதோ கண்டைக்காய் எழுத்தாளர்கள் என்று இவர்கள் நினைக்கிறார்கள் போலிருக்கிறது'' என்று அவர் தொடர்ந்த போது இவர் அநீதமாக உணர்ச்சிவசப்படுகிறாரோ என்று எனக்கு யோசனையாக இருந்தது.

''நம்மைக் காரில் உட்கார்த்தி ஊர் சுற்றிக் காட்டி அனுப்பிவிடும் உத்தேசம் போலிருக்கிறது. நமக்குப் பிறமொழி எழுத்தாளர்களைப் பார்த்துப் பேசுவதுதான் முக்கியமே தவிர ஊர் சுற்றிப் பார்ப்பது முக்கியமில்லை...''

நான் பேசாமலிருந்தேன். அவர் சொல்வதில் நியாயம் இருந்தாலும் ஆன் எதிரில் இதையெல்லாம் விவாதிப்பது உசிதமில்லை என்று தோன்றிற்று.

''இவர்களது பேச்சிற்கு ஏதாவது பின் காரணம் இருக்க வேண்டும். மேற்கொண்டு என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். நீங்கள் இப்பொழுது நிதானப்படுத்திக் கொள்ளுங்கள்'' என்றேன் மெள்ள.

''இப்பொழுது எங்கே போகலாம்?'' என்று கேட்டார் ஆன்.

''ஐஃபில் டவர் பார்க்கிறீர்களா, அல்லது லூவ்ர் மியூஸியமா அல்லது நாத்ர தாம் கத்திட்ரலா?'' என்று அடுக்கினார்.

சட்டென்று என்னை உற்சாகம் தொத்திக் கொண்டது.

''இதெல்லாம் வாஸந்தியிடம் விட்டுவிடுகிறேன்'' என்றார் ஸந்து ஆயாஸத்துடன்.


ஐஃபில் டவர் பார்த்து விடலாம் என்று நான் சொன்னபடி கிளம்பினோம்.

பாரிஸ் நகரத்தின் அமைப்பு மிகக் கலையழகு கொண்டது. கிட்டத்தட்ட ஆறு நூற்றாண்டு காலக் கட்டட வடிவங்களிலிருந்து தற்காலம் வரை வளர்ந்திருக்கும் பாரிஸ் நகரம் புராதன அழகு மாறாமல், நவீன பாணி வித்தியாசமாக உறுத்தாமல் ஒரு தனித்தன்மையுடன் நிற்பதற்குக் காரணம் ஃப்ரெஞ்ச் மக்களுக்கு சுவபாவிகமாக இருக்கும் ரஸனைதான் என்று எனக்குப் பட்டது.

எத்தனையெத்தனை மக்கள் புரட்சிகளைப் பாரிஸ் நகர வீதிகள் பார்த்திருக்கின்றன! ரணகளமாய்ப் போயிருக்கும் வீதிகள்! கான்கார்ட் என்கிற இடத்தில் பிரசித்தி பெற்ற 'செப்டம்பர் படுகொலை'யின்போது அரச குலத்து ரத்தம் ஆறாக ஓடி பாரிஸின் நடுவே ஓடும் அழகிய ஸீன் நதியைச் சிவப்பாக்கியதாக ஆன் சொன்னார். நட்ட நடுச் சதுக்கத்தில் மாமன்னரின் தலை வெட்டப்பட்டது. பஸ்டீல் சிறை திறக்கப்பட்டு பாரிஸ் முழுவதையும் கொலை வெறியாக்கியது. ஒரு நூற்றாண்டுக் காலம் முழுவதும் மக்கள் அமைதியைச் சேர்ந்தாற்போல் பார்க்கவில்லை.

இத்தனை பயங்கர சித்திரத்தையும் மீறி பாரிஸ்ஸின் கலைத்துறையிலும் எழுத்துத் துறையிலும் ஒரு குலையாத கட்டுக்கோப்புத் தென்பட வேண்டுமானால் அதற்கு அந்த மக்களின் விசேஷமான இயல்புதான் காரணம் என்று எனக்குத் தோன்றிற்று. எந்தக் கொலை வெறியிலும் அழகிய அரண்மனைகளையும் சர்ச்சுகளையும் சிதைக்கவில்லை. விளுகிப் போன தோட்டங்களையும், வர்ஸை (Versailles) போன்ற இடங்களையும் கொஞ்சம் அமைதி ஏற்பட்ட காலத்தில் உடனடியாகச் செப்பனிட்டிருக்கிறார்கள்.





நெப்போலியன் போனபார்ட் தன்னுடைய வெற்றியை நிலை நாட்ட ஆர்க் டி ட்ரியோம்ஃப் (Arc de Triomphe) என்ற பிரும்மாண்டமான வளைவை நிர்மாணித்தான். 164 அடி உயரமும், 148 அடி அகலமும் கொண்ட இந்த வளைவில் அற்புத சிற்பங்களை நான்கு சிற்பிகள் வடித்திருக்கிறார்கள்.

ஆர்க் டி ட்ரியோம்ஃப் பாரீஸ் நகரத்தின் ஒரு முக்கியமான நடுப்பகுதி. இந்த வளைவிலிருந்து பன்னிரண்டு விசாலமான பிரத்யேக சாலைகள் (அவென்யூ என்கிறார்கள்) பிரிகின்றன. எங்கு செல்வதானாலும் இவற்றுள் ஒன்றில் நுழைய வேண்டி வரும். இதில் மிகப் பிரசித்தமான சாலை ஷாம்ஃப் எலிஜே (The Champs–Elysees) என்பது. மிக அழகிய சாலை — ஃபௌண்டன்களும் கட்டிடங்களும், கடைகளும் பூச்செடிகளுமாய், வர்ணனைக்கு அப்பாற்பட்ட அழகு! இங்கு நிச்சிந்தையாக பாரீஸ்காரர்கள் நள்ளிரவைத் தாண்டியும் நடந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இரவில் பாரீஸ் நகரத்து வீதிகளில் நடப்பது மிக ஆனந்தமான அனுபவம் என்று நான் பிறகு தெரிந்து கொண்டேன்.

பாரீஸ் நகரம் ஒரு திறந்தவெளி மியூஸியம் என்று யாரோ சொன்னார்கள். அப்படித்தான் ஒவ்வொரு வீதி மூலையிலும் சதுக்கத்திலும், தோட்டத்திலும் ஏதாவது ஒரு புராதன சிலையோ, கட்டிடமோ, தோட்டமோ கண்ணைக் கவர்ந்து நெஞ்சை அள்ளுகிறது. இந்த அதிசயங்களையெல்லாம் மேலோட்டமாகக் காரில் உட்கார்ந்தபடியே பார்த்து ஆச்சரியப்பட்டு ஒரு பெரிய சாலையே பெரிய தோட்டமாக மாற்றப்பட்டிருக்கும் ஷாம்ஃப் டி மார்ஸுக்குச் சென்றோம். அத்தோட்டத்தைப் பார்த்தபடி அச்சூழலுடன் கொஞ்சமும் ஒட்டாமல் தனியானதொரு கம்பீரத்துடன் ஐஃபில் டவர் உயர்ந்து நின்றது.

ஃப்ரெஞ்சுக்காரர்கள் சுபாவத்தில் ரொம்ப கன்ஸர்வேடிவ்காரர்கள் என்றார் ஆன்.







ஆஸ்திக அன்பர்களுக்கு...

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் ஒவ்வொரு அனுஷ்டானத்தைக் கைக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறது.

ஒவ்வொரு மனிதனும் காலையில் எழுந்திருந்து பல் துலக்கி, கிழக்கு முகமாக உட்கார்ந்து கொண்டு கையில் ஜலத்தைச் சிறிது எடுத்துக்கொண்டு கங்கையை மனத்தில் நினைத்துக்கொண்டு அந்த ஜலத்தைத் தன் உடம்பின் மேல் ப்ரோக்ஷித்துக்கொள்ள வேண்டும். பிறகு 108 தடவை ஸ்ரீராமா என்னும் நாமத்தை ஜபிக்க வேண்டும். பிறகு சூரியனைப் பார்த்து நமஸ்கரிக்க வேண்டும். இதுபோல மாலையில் விளக்கு வைக்கும் நேரத்தில் கை, கால்களை அலம்பிக் கொண்டு மேற்கு முகமாக உட்கார்ந்து கொண்டு, கொஞ்சம் ஜலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, அந்த ஜலத்தைத் தன் உடம்பில் ப்ரோக்ஷித்துக் கொண்டு சிவநாமத்தையோ அல்லது ராமநாமத்தையோ 108 முறை ஜபிக்க வேண்டும். இப்படி இந்த அனுஷ்டானத்தை தொடங்குவதற்கு சமீபத்தில் உள்ள கோவிலுக்குச் சென்று சுவாமியின் முன் முதல்நாள் தொடங்க வேண்டும். பிறகு இந்த அனுஷ்டானத்தை ஒவ்வொருவரும் தன் வாழ்நாள் முழுவதும் செய்ய வேண்டும். இப்படிச் செய்ய ஆரம்பித்தவர்கள் ஆரம்பித்து நடத்தும் காரியத்தைக் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தங்கள் முழு விலாசத்துடன் தெரிவித்தால், அவர்கள் பெயரில் ஸ்ரீமடத்தில் செய்யப்படும் பூஜையில் ஒரு புஷ்பம் போட்டுப் பிரசாதம் அனுப்பி வைக்கப்படும் என்று ஸ்ரீகாஞ்சி காமகோடி பீட சங்கராசாரிய சுவாமிகளின் அபிப்பிராயம்.

மானேஜர்,
ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடம்.
காஞ்சிபுரம்

புராதன கட்டிட வடிவங்களுக்கே பழகிப் போயிருந்த அவர்களது கண்களும் மனங்களும் ஐஃபில் டவர் கட்டப்பட்டபோது வேசிம் ஒப்பவில்லை என்றார். ட்யூமா, மாப்பஸான் போன்ற எழுத்தாளர்கள் பெரிய கண்டனக் குரல்கள் எழுப்பினார்களாம்.

இப்பொழுது பாரிஸ் என்றதுமே எல்லோருக்கும் ஐஃபில் டவர் மட்டுமே ஞாபகம் வருமளவுக்கு அது பாரீஸின் முக்கியமான அங்கமாகப் போய் விட்ட பிறகும் சில பேர்கள் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்களாம். தங்கள் நகரத்துக்கு இது ஒரு திருஷ்டி பரிகாரம் என்று.

1889—ஆம் ஆண்டில் ஐஃபில் இந்த எஃகு கோபுரத்தை எழுப்பியபோது இது தான் உலகத்திலேயே உயர்ந்த கோபுரமாக இருந்தது. (984 அடி). ஆணிகளின் உதவி இல்லாமலே revets எனப்படும் அச்சிறும் (2,500,000 ரிவிட்டுகள்!) 12,000 ஸ்டீல் கர்டர்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மூன்று நிலைகள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் போக வெவ்வேறு கட்டணம். ஒவ்வொன்றிலும் உணவு விடுதி இருக்கிறது. கண்ணாடிக் கதவுகள் கொண்ட லிஃப்டில் ஏறும்போது பாரிஸ் நகரத்தைப் பார்த்துக் கொண்டே மேலே போவது நூதனமான அனுபவம். நான் பள்ளிச் சிறுமி போல் ஆர்ப்பரித்தேன்.

"அதோ ஆர்க் டி ட்ரியோம்ஃப்! அது லூவ்ர மியூஸியம். அது இன்வலீத். அதோ யுனஸ்கோ கட்டிடம்!

"இதெல்லாம் ஒரு அதிசயமா?" என்றார் திரு. ஸந்து. "நீங்கள் எம்பயர் ஸ்டேட் பில்டிங்கைப் பார்த்தால் இன்னும் எப்படிக் குதிப்பீர்களோ?"

திருமதி ஆப்பில்பீயைப் பார்த்த பிறகு இவருக்கு எதுவுமே ரசிக்கவில்லை என்று நினைத்து எனக்குச் சிரிப்பு வந்தது. எந்த விதப் பாதிப்பும் இல்லாமல் நான் என் சுற்றுப் புறத்தை ரசிப்பதில் தீவிரமாக இருந்தேன். காரில் பயணிக்கையில் ஆனும் நானும் பாஸ்கலேயும் ஸார்த்ரேயையும் அலசினோம். இம்ப்ரஷனிஸ்ட் சைத்ரிகர்களையும் பிக்காஸோவையும் ஆராய்ந்தோம். வால்டேரையும் ரூஸோவையும் அன்புடன் நினைவு கூர்ந்தோம். எப்பேர்ப்பட்ட மகா புருஷர்கள், எண்ணச் சிற்பிகள் இருந்த இடம் இது என்று எனக்கு மெய்சிலிர்த்துப் போயிற்று. எப்படிப் பட்ட எழுத்தாளர்கள், கலைஞர்கள் பிறந்த இடம் இது! அவர்களது பெயர்ப் பட்டியலும் எழுத்தின் வார்த்தைகளும் எனது நினைவுப் பெட்டகத்தைப் பிளந்து கொண்டு வெளிப்பட்டன. நானும் ஆனும் எங்களது எண்ணங்களில் அதிசயிக்கும் வகையில் சங்கமித்துப் போனோம்.

ஷோம்ஸ் எலிஸே சாலையில் ஒரு இடத்தில், "அதோ பாருங்கள் அந்த காஃபி ஹவுஸை" என்றார் ஆன். "மாக்ஸிம் என்ற இந்த கஃபேயில் தான் பல பெரிய எழுத்தாளர்கள், விக்டர் ஹ்யூகோ, ஸிமான் டி பாவர், ஸார்த்ரே, மாப்பஸான் போன்றவர்கள் வந்து உட்காருவார்கள்."



ராதிகா—காயத்ரி—சோபனா

குரு: தனஞ்செயன்,
சாந்தா தனஞ்செயன்

மறுநாள் நிகழ்ச்சி ஒன்று அளிப்பதற்காக, ஒரு முறை மூவரும் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தோம். சுப்பய்யா கூறப் பாடலில், பரசுராமன் அவதாரக் காட்சியில், ஸ்வரத்திற்கு அடவு செய்யும்பொழுது, பரசுராமர் வெட்டுவது மாதிரி குதித்து அபிநயித்த போது, காயத்ரி தவறுக ஒரு ஸ்டெப் வைத்துக் கால் வழுக்கி, கணுக்கால் பிசகிச் சுளுக்கிக் கொண்டு விட்டது. மறுநாள் நிகழ்ச்சி இருக்கும் போது இப்படி சீரியஸாகி விட்டதே என்று கவலையுடன் இருந்தோம். அன்றிரவு பன்னிரண்டு மணிக்குச் சென்னை வந்து சேர்ந்த எங்கள் குரு ஸ்ரீ தனஞ்சயனும் ஸ்ரீமதி சாந்தா தனஞ்சயனும் விமான நிலையத்தில் இதைக் கேள்விப்பட்டுப் பதைப்புடன் அந்த நடுநிசி வேளையிலும் பிரயாணக் களைப்பைப் பொருட்படுத்தாது வீட்டுக்கு ஓடோடி வந்து காயத்ரியைப் பார்த்து ஆறுதல் சொன்னார்கள். எங்களை நெகிழ வைத்துவிட்ட இந்த நிகழ்ச்சி, இப்போது தசாவதாரம் வழங்கினாலும் நினைவுக்கு வரும்.

இன்னொன்று: சின்னி கிருஷ்ணுடு. ராரா என்ற பிரபலமான வர்ணத்துக்கு முதல் முறையாக குருவின் வீட்டில் அபிநயம் கற்றுக் கொண்டபோது,

சின்னி கிருஷ்ணுடு
ரா...ரா

என்று பாடிக் கொண்டிருக்கும்போது மாஸ்டரின் நாய்க்குட்டி துள்ளிக் கொண்டு எங்களிடம் வந்துவிட்டது!

ஆனை ஒரு பக்கமாக வண்டியை நிறுத்தச் சொன்னேன்.

'மாக்ஸிம்'முக்கு நடந்து அதன் கண்ணாடி ஜன்னல்களைத் தொட்டு, கதவைத் தாண்டி உள்நோக்கி நடந்து நாற்காலிகளைத் தடவி விட்டுத் திரும்பியபோது,

"வானந்தி, யூ மஸ்ட் பீ க்ரேஸி!" என்று திரு. ஸந்து சொன்னதை,

நான் புன்னகையுடன் ஏற்றுக் கொண்டேன்.

(தொடரும்)

விரல்



ராம்ஜியின் அப்பாவுக்கு ஆறு விரல்கள். இரண்டு கைகளிலும், இரண்டு கால்களிலும் ஆறாவது விரல் அதிர்ஷ்டம். அப்பா ரிடையர் ஆகும் போது அவர் சம்பளம் நானூறு ரூபாய். பென்ஷன் கிடையாது. மூவாயிரம் ரூபாய்க்கு இன்ஷூரன்ஸ் பண்ணியிருக்கிறார். இன்னும் ஏழெட்டு வருஷங்கள் பிரிமியம் கட்ட வேண்டும்.

ராம்ஜியின் அம்மா நன்கு பாடக் கூடியவள். 'கௌரி கல்யாணம் வைபோகமே' பாட்டை அதன் வழக்கமான ராகத்தில் மட்டுமின்றி வேறு நான்கு விதமாய்ப் பாடக் கூடியவள். நான்கும் நன்றாகவும் இருக்கும். அவளுடைய பாட்டில் பிரமிப்பூட்டும் உத்திகளோ, ஜோடனைகளோ கிடையாது. சாதாரணக் குரலில் பாடுவதே கூட அசாதாரண விளைவுகளை ஏற்படுத்தக் கூடியதாய்இருக்கும். அம்மா பாடி, அதை அப்பா ரசித்து ஒருநாளும் ராம்ஜி பார்த்ததில்லை.

மகாராஜா விசாகம் திருநாள் ஆட்சியிலிருக்கும் போது வீணை தனம்மாள் ஆஸ்தான வித்துவானாக இருந்தார்; கல்யாண கிருஷ்ண பாகவதர் வீட்டில் தங்கிக் கொண்டிருந்தார். தனத்திடம் சொல்லிக் கொண்டு, பாகவதர் காலையில் பத்மநாபஸ்வாமி கோவிலுக்குப் புறப்பட்டார். தனம் தனியே அமர்ந்து சங்கராபரணத்தில் ''தட்சயுங்க விபோ'' பாட ஆரம்பித்தார். பாகவதர் வராந்தாவில் நின்று கொண்டு, பாட்டில் ஒன்றிப் போனார். கோயிலுக்குப் போகவில்லை. தனம் பாட்டை முடித்த பிறகு திரும்ப உள்ளே வந்தார் பாகவதர். தனம் வியப்புடன் ''ஸ்வாமி! இவ்வளவு சீக்கிரம் கோயிலிலிருந்து வந்து விட்டீர்களா?'' என்று தனம் கேட்டபோது, அவர் சொன்னார். ''நான் கோயிலுக்குப் போகவில்லை. உங்கள் பாட்டை மெய்ம்மறந்து ரசித்தேன். இன்றைக்கு அதுதான் என் வழிபாடு.''

புதுடில்லி ராமகிருஷ்ணபுரத்தில் நான்கும் தமிழ்க்காரர்களாய் அமைந்து விட்ட பிளாக்கில் சாவித்திரி குடியிருக்கிறாள். கடைசி வரைக்கும் தீர்மானமாய்த் தன் மகளுக்குச் சாவித்திரி சங்கீதமே கற்றுக் கொடுக்கவில்லை. இத்தனைக்கும் மாடியிலேயே ஒரு பாட்டு வாத்தியார் ரொம்ப நாள் இருந்தார்.

ராம்ஜி, புதுடில்லி சாவித்திரியின் பெண்ணை, பெண் பார்க்கப் போனான். அவன் அம்மா கேட்டாள்:

''ஏண்டி, பொண்ணுக்கு என்னவெல்லாம் தெரியும்?''

''நன்னா சமைப்பா. கோலமெல்லாம் போடுவா.''

''உம்.''

''பெரியவா கிட்டே மரியாதையா இருப்பா.''

''அப்புறம்?''

''அவ்வளவுதான்.''

''பாட்டு ஒண்ணும் கத்துக் கரல்லியா?''

''இல்லே.''

''என்ன அதிசயம்டி? உங்கப்பா தினம் கார்த்தாலே ரெண்டு கீர்த்தனையாவது பாடுவார். நானே கேட்டிருக்கேன். நல்ல சங்கீதம்னா பைத்தியம் அவருக்கு. வண்டியைக் கட்டிண்டு மைல் கணக்காப் போய்க் கேட்பார். அதுவும் உனக்கு ஒத்தைப்பொண்ணு. நாள் கிழமையிலே பாடினா நல்லாயிருக்கும். கொஞ்சமாவது சங்கீதம் பழக்கி வெச்சிருக்கப்படாதோ.''

''தோணவே இல்லே.''

''இடக்கு போ. ஏதாவது பாடச் சொல்லு.''

''அபிராமி அந்தாதி பாடுவா.''

முதல் வரி காதில் விழவில்லை. இரண்டாவதில் பிசிறடித்தது. மூன்றாவது வரியில் தாயும் சேர்ந்து கொண்டாள். நான்காவது வரியின் போது பெண்ணுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

பாட்டு தெரியாமல் போனதற்கு வரதட்சிணைப் பணத்தில் ஆயிரம் ரூபாய் அதிகம் போட்டுக் கொடுத்தார்கள். கல்யாணம் நன்கு நடந்தேறியது. ராம்ஜியின் நண்பர்களுக்காக மெட்ராசில் தனியாக ரிசப்ஷன் வைத்தார்கள்.

கல்யாணமான மூன்றும் நாள், ராம்ஜி, பெண்டாட்டியைப் பாடச் சொல்லிக் கேட்...



ம.வே.சிவகுமார்



டான். வீட்டில் இருவரும் தனியாய் இருந்தார்கள். அப்பாவும், அம்மாவும் திருச்செந்தூர், பழனி போயிருந்தார்கள்.

''எனக்குத் தெரியாதே.''

''தெரிஞ்சதைப் பாடு. சினிமாப் பாட்டானாலும் பாடு.''

''சினிமா பாட்டுக் கேட்டா அம்மா கொன்னுடுவா.''

''சரி, வேறே ஏதாவது பாடு.''

''எனக்குத் தெரியாதே.''

''ஜன கண மன?''

அவள் பாடவில்லை. பதினேழு நிமிஷங்களுக்கு மேல் ஒரு பெண்ணிடம் கெஞ்சுவது ராம்ஜிக்கு அவமானமாகவும், ஆத்திர மூட்டுவதாகவும் இருந்தது. பாடக் கூடிய மனைவியாய் இருந்திருந்தால் தேவலாம் போல இருந்தது. ராம்ஜிக்கு அவன் அம்மா பாடுவது ரொம்பப் பிடிக்கும். 'ராம பக்தி சாம்ராஜ்ய' என்று பூஜை நாட்களில் அம்மா பாடும் போது மனம் லேசாகிற மாதிரி உணர்வான். இவள் பாடமாட்டேன் என்று அழுத்தமாய் இருக்கிறாள். பதினேழு நிமிஷம் கெஞ்சியதற்கப்புறமும். ராம்ஜி. அந்த ராத்திரியில் வீட்டை விட்டு வெளியே வந்தான். வெளிப் பக்கமாய்க் கதவைப் பூட்டினான். மூன்று மணி நேரம் இருட்டில் சுற்றினான். ஆத்திரம் அடங்கினாற் போல இருந்தது. அவன் திரும்பிய போது, அவள் ஜன்னல் அருகிலேயே நின்றிருந்தாள். நிறைய அழுதிருந்தாள்.

''ஏண்டி அழுதியா?''என்று வெளிப்பக்கம் பூட்டைத் திறக்கும்போதே ராம்ஜி கேட்டான்.

''பின்னே?''

''ஏன்?''

''மூணு மணி நேரம் தனியா இந்தக் காட்டுலே விட்டுட்டுப் போனா அழுகை வராதாக்கும்''சொல்லும் போதே பொத்துக் கொண்டு வந்தது. ராம்ஜி ஜன்னல் வழியாகப் பார்த்தான். வெளியே அந்தப் புற நகர் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. மூர்க்கன். மூடன். பாடவில்லையென்று மூன்றே நாள் புதியதான பெண்டாட்டியை வெளிப்பக்கம் பூட்டிக் கொண்டு போன மடையன். அப்பாவை விடத் தான் எந்த விதத்திலும் உசத்தியில்லை என்று தோன்றியது ராம்ஜிக்கு.

அன்று வெள்ளிக்கிழமை. அம்மா. பூஜை செய்து கொண்டிருந்தாள். பூஜை முடிந்ததா ...ன் ... பார்த்தான். இன்ன



மும் அவளால் நன்றாகவே பாட முடிந்தது. லயித்து விட்டான்.

''ஏய் சனியன், என்ன இழவுடி கத்திண்டிருக்கே. காப்பி கொண்டு வா.''

காப்பி கொண்டு வரும்போது ஒரு சொட்டு நீர் அம்மா கண்ணிலிருந்து டம்ளரில் விழுந்தது. அப்பா பார்த்து விட்டார். சுவரில் ஆப்பிரிக்கா படம் மாதிரி காப்பிக் கறை இன்னமும் இருக்கிறது.

ஊரிலிருந்து அம்மாவும், அப்பாவும் திரும்பி வந்தார்கள். பஞ்சாமிர்தமும், பழனி விபூதியும் அமோகமாய் சர்க்குலேஷனில் இருந்த இரண்டாம் நாள். பஜனை பாடத் தெரியாதவள் என்பது தவிர கோலம் போடக் கூடியவளும் கூட என்று ராம்ஜிக்குத் தெரிய வந்தது.

''ஏண்டா, பெண்டாட்டியை மூன்று மணி நேரம் ஜெயில்லே வெச்சியாமே.''

''எதுக்குன்னு சொன்னளா?''

''பாடச் சொன்னியாம்.. 'பாடத் தெரியாதுன்னு தெரிஞ்சுண்டுதானே கல்யாணம் பண்ணிண்டே?''

''என்னம்மா இது? ஒரு பாட்டுக் கூடவா தெரியாது. எனக்கே 'வரவீணா' பாட வரும்.''

''சரிடா, அப்பாவைக் கொண்டுண்டு நீ வேற மாதிரி வக்கிரம். நீ வாடி கண்ணு.''

அவள் என்னமோ தன் நிஜ அம்மா என்கிற மாதிரி 'அம்மா' என்று அலறி ராம்ஜியின் அம்மாவைக் கட்டிக் கொண்டாள். அம்மாவுக்கும் அழுகை வந்து விட்டது.

''அழாதேடீம்மா, நான் எவ்வளவு கஷ்டப்பட்டுண்டேன்? என் அக்கா, தங்கைகள் எல்லாரும் நல்லா பாடுவா. யாருக்கும் ரசிக்கிற ஆம்படையான் வாய்க்கலே. சரஸ்வதி அத்துக்காரர் வீணையை உடைச்சே போட்டார். கௌரியாத்துலே பரண் மேலே வயலின் தூங்கறது. அது என்ன தெரியுமோ?'' என்றபடி சுவரில் இருந்த ஆப்பிரிக்கா படத்தைக் காட்டினாள். எல்லாம் தோன்றியது என்று சொன்னாள். வாழ்க்கை நிதானமாய் இருக்கிற போது சங்கீதம் அழகுணர்ச்சியை ஊட்டுமாம். ஆனால் இப்போது யாருக்கு வாழ்க்கை நிதானமாய் இருக்கிறது?

''அப்பா ஒரு நாள் கூட உன்னைப் பாடச் சொல்லிக் கேட்கவே இல்லையாம்மா?''

''போறுமே. ஆபீஸ்லே சண்டைன்னு வா, வீட்டிலே ஈஸிசேர்ல உட்கார்ந்துண்டு, கும்பகோணம் வெத்தலே போட்டுண்டு, பெண்டாட்டியை ரெண்டு கீர்த்தனை பாடச் சொல்லிக் கேட்டா மனசு சாந்தமடையும். இவா மனசு சாந்திக்குத்தான் புதுசுபுதுசா கண்டுபிடிச்சுருக்காளே. உன் அப்பாவுக்கு சிகரெட். இன்னொருத்தருக்கு இன்னொன்று''

''நீங்க நல்லா பாடுவேள்னு அவருக்குத் தெரியாதோ என்னவோ'' என்றாள் ராம்ஜியின் மனைவி.

''தெரியாம என்ன? 'என்ன பெரிய பாட்டு, எனக்குக் கை, கால்லே ஆறுவிரல் இருக்கிற மாதிரி உனக்குப் பாட வர்றது. ஏதோ தையல் மாதிரி பிரயோஜனமா ஏதாவது தெரிஞ்சாலும் காசு மிஞ்சும். உன் சங்கீதத்தை வெச்சுண்டு நாக்கு வழிச்சுக்கச் சொல்றியா'ம்பார்.''

''ஆறு விரல் இருக்கிறது அப்பாவுக்கு அசிங்கமான்னு இருக்கு?''

''அதை நீ சொல்லலாம்டா, தோளுக்கு உசந்துட்டே... பொம்மனாட்டி நான் பேச முடியுமா? எத்தனை சர்வீஸ் ஆனாலும்? நாலு வருஷம் சர்வீஸ் போட்டதுக்கே உன் ஆபீஸ்லே துள்ளறே. முப்பத்திரெண்டு வருஷம் ஆச்சு எனக்கு.''

சுஜாதா சீனிவாசன்
குரு: எஸ். கே. ராஜரத்தினம்

'பரதத்தில் பாரதி' என்ற நாட்டிய நிகழ்ச்சியை, பாரதி நூற்றாண்டு நிகழ்ச்சியாக பம்பாய் சண்முகானந்தா சபாவில் நடத்துவதற்காக, குருவின் முன்னால் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தோம். கண்ணை நுனைவு எனக்கு. என் ஆருயிர் சிநேகிதி ஷோபா நடராஜன்தான் தோழியாக நடித்துக் கொண்டிருந்தாள். 'தீராத விளையாட்டுப் பிள்ளை' பாடலில், அழகுள்ள மலர்கொண்டு வந்தே-என்னை அழஅழச் செய்தபின் கண்ணை மூடிக்கொண்டு குழலிலே சூட்டுவேன் என்பான். என்ற வரிகளுக்கு அபிநயம் பிடிக்கும் போது, தோழி பூவைத் தருமாறு கேட்கும்போது, நான் கொடுக்கக் கூடாது; கொடுக்காமல் மக்கர் பண்ணுகிற மாதிரி அபிநயிக்க வேண்டும். ஆனால் நான் அதை அந்த நேரத்தில் உணராமல், ஆருயிர்த் தோழி கேட்கிறாளே என்பதற்காகச் சட்டென்று பூவைக் கொடுத்து விட்டேன்! மாஸ்டர் உட்பட, கூடியிருந்த அத்தனை பேரும் கொல்லென்று சிரித்துவிட்டார்கள். 'தீராத விளையாட்டுப் பிள்ளை'க்கு எப்போது அபிநயம் பிடித்தாலும் இந்த நிகழ்ச்சி நினைவுக்கு வரும்!



நாங்கள் சொந்தமாக வீடுகட்டி சுகமாக
வாழ்ந்து வருகிறோமே, எப்படி!
கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம் தந்த
கடன் வசதியால்தான்!



எங்கும் எதிலும் கூட்டுறவு
வளம் பொங்கப் பொலிவதும் கூட்டுறவு.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்
சென்னை

''இப்பத்தான் சொல்லேன்.''

''போதும் தொண்டை போயாச்சு. எல்லாம் இடக்கு இழவியைத் தூக்கி மடி யிலே வையின்னா மாதிரி, இனிமே பாடி என்ன புண்ணியம்? எனக்கு நல்ல தொண்டை அமைஞ்சது தண்டம். அதை என் அம்மா கண்டுபிடிச்சது தண்டம்.''

அப்புறம் ஒருநாள் ராம்ஜி வீட்டில் டேப் ரிக்கார்டர் வாங்கினார்கள். அவன் அண்ணன் குழந்தை பாபா பிளாக்ஷீப் பாடுவதையும், மூக்கை அடைத்துக்கொண்டு அண்ணாதுரை மாதிரி பேசுவதாய் நினைத்துக் கொண்டு ராம்ஜி பேசுவதையும் ரெக்கார்ட் செய்தார்கள். அம்மாவின் தூண்டுதலின் பெயரிலும், குரலைக் கேட்கும் ஆசையிலும் ராம்ஜியின் மனைவி ஒரு ஹிந்திப் பாட்டைப் பதிவு செய்திருந்தாள். அப்பா ஷேக்ஸ்பியர் நாடகத்தில் ஒரு பகுதியை ஒப்பித்ததும் பதிவானது. இன்னும் நிறைய இடம் இருந்தது.

''உங்கம்மாவைக் கூப்பிடுறா'' என்றார் அப்பா. அவள் அப்போது தான் உள்ளே போயிருந்தாள்.

ராம்ஜி சமையலறைக்குப் போனான். அம்மா கொடியில் துணி உலர்த்திக்கொண் டிருந்தாள்.

''அம்மா, அப்பா கூப்பிடுறா''

''எதுக்குடா?'' சுருக்கமாக துணியைப் படரவிட்டுக் கொண்டு கேட்டாள்.

''தெரியல்லே. ரெக்கார்ட் பண்ணின் டிருந்தோமே, அதைக் கேட்கறதுக்குக் கூப் பிடுறாரோ என்னமோ. அவருக்குத் தெரிஞ்ச டிராமாவையும் ஒப்பிச்சுட்டார். உன்னைக் கூப்பிடச் சொன்னார்.''

''வர்றேன் இரு. ஒரு வாய் காப்பி சாப் பிடறியா?''

''சீக்கிரம் வாம்மா. அவருக்குக் கோபம் வந்துடப் போறது.''

''இதுக்கெல்லாம் ஒண்ணும் அவருக்குக் கோபம் வராது'' என்றபடி அம்மா வந்தாள்.

''என்ன, கூப்பிட்டேளாமே.''

''ஒரு பாட்டுப் பாடுடி.''

அம்மா, அவ்வளவு வெட்கப்பட்டு ராம்ஜி பார்த்ததேயில்லை.

''பாடுடி.''

''வேண்டாம்.''

''பாடுடின்னா'' குரல் சுவர் மூலையில் மோதித் திரும்பிய 'னொய்'யின் நடுவே 'வெங்கடேசா நின்னு' என்று கம்பீரமாய் அம்மா பாட ஆரம்பித்தாள். வேலையின் ராசி போலும்: அப்பா தாளம் போட்டார். பாடி முடிக்கும் போது அம்மாவும், மாட்டுப் பெண்களும் அழுது கொண்டிருந்தார்கள்.

''அந்த காஸெட்டை பத்திரமா வைச்சுக் கோங்கடா'' என்றார் அப்பா.

''பெண்டாட்டி குரல்லே அவ்வளோ ஆசையா?'' என்றான் ராம்ஜியின் அண்ணன்.

''என் குரலும் அதிலே இருக்குதுடா. எங்களுக்கும் வயசாறது. நாளைக்கு ஏதாவது ஆனாலும். நீங்க எங்க குரலையாவது போட்டுக் கேக்கலாமோன்னோ'' என்றார் அப்பா.

''பெண்டாட்டி போனப்புறமாவது ரசிக்கக் கேப்பேளோ, என்னவோ?'' என்று சூழ்நிலை தந்த தைரியத்தில் அம்மா சொன்னாள். அப்பாவுக்கு அசடு தட்டியது. எல்லோரும் மௌனமாய் இருந்தார்கள்.

''உங்கம்மா பாட்டு சொல்லித் தரல் லியா?'' என்று அப்பா, ராம்ஜியின் மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

''இல்லே.''

''ஏன்?''

''எங்கப்பாவுக்கும் கையிலே ஆறுவிரல்'' என்றாள் அவள்.



3-வது அட்டைப்படம்

அற்புதம் நிகழ்த்தியவர்!

ஒடிஸி நடனம் பயின்று அதில் நல்ல சிறந்த கலைஞர் என்று உலகப் புகழ் பெற்றவர் **சோனல் மானசிங்**. அவர் வாழ்க்கையில் விதி விளையாடியது.

மேல்நாட்டில் பயணம் செய்கையில் கார் விபத்துக்குள்ளாகி அவர் உடலில் பல இடங்களில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டன. அவர் இனி நடக்கவே முடியாது சக்கர நாற்காலியில் தான் வளைய வர வேண்டியிருக்கும் என்று கருதப்பட்டது.

ஆயினும் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. ஸோனல் தமது விடா முயற்சியாலும் மன உறுதியாலும் டாக்டர்களின் உதவி யோடு குணமடைந்து நடக்க ஆரம் பித்தது மட்டுமல்ல, மறுபடி நடனமே ஆடினார்! முன்போலவே சிறப்பாக ஆட முடிந்ததா என்றால்... 'இல்லை, அதைவிடவும் நன்றாக ஆடுகிறார்' என்பது விருப்பு வெறுப்பற்ற விமர் சகர்கள் தீர்ப்பாக இருந்தது!

சோனல் மான்சிங்கின் வாழ்க்கை கலைஞர்களுக்கு மட்டுமல்ல, மனித குலத்துக்கே முன் உதாரணம்.

வண்ணப்படம்: **வித்யாஷ்ரநா**

அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளுக்குச் சென்று அங்கு பல இடங்களில் கதா காலட்சேபம் செய்துவிட்டு வந்திருக்கிறார் டி. எஸ். பால கிருஷ்ண சாஸ்திரிகள். ரேகன் ஆளும் அமெரிக்காவில் ராமகதைக்கு வரவேற்பு எப்படி என்று கேட்டதற்குக் கூறினார்:

''வெளிநாட்டில் வாழும் நம்மவருக்குக் குழந்தைகளின் எதிர்காலம் பற்றிய கவலை இருக்கிறது. வெளி நாட்டில் நாம் எப்படி வாழ்வது? நமது குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும். இவைகளை என் கதையின் இடையில் சிறுசிறு போதனைகளாக எடுத்துக் கூறினேன். வெளிநாட்டிலிருக்கும் ஓர் இந்து, சடங்குகளை ஒன்றுவிடாமல் செய்யத் தேவை இல்லை. குடிக்கக் கூடாது. மாமிசம் சாப்பிடக் கூடாது. அமெரிக்கர்களுடன் அன்பாக இருங்கள். ஆனால் அவர்கள் பழக்கவழக்கங்கள் வேண்டாம். பக்தி அவசியம். என்றெல்லாம் உபகதைகளுடன் நாசூக்காக எடுத்துச் சொன்னேன். இதனால் ரொம்பக் குடும்பங்கள் ஆறுதலும் மனச்சாந்தியும் அடைந்தன. அந்தத் திருப்தியே எனக்குப் போதும்.

அறுபது நாட்களில் இரு நாடுகளிலும் சுமார் 35 நிகழ்ச்சிகளைத் தந்தேன். சபாக்கள் அல்லது சங்கங்கள், சிறு கூட்டங்கள், தனிப்பட்ட நபர்களின் வீடுகளில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி என்ற மூன்று வகையும் இதில் அடங்கும். நான் அமெரிக்கா செல்வதற்குக் காரணமாக இருந்த நிறுவனம் மாகனின் ஆஃப் இந்தியா ஃபைனுர்ட்ஸ் போரம்.

நமது கலைஞர்கள் யார் நிகழ்ச்சி நடத்தினாலும். அங்கு அதைக் கேட்க இந்தியர்கள் தான் அதிகம் கூடுகிறார்கள். ஏற்பாடு செய்பவர்களும் நம்மவர்கள்தான். ஆனால் அந்நாட்டவரும் பலர் அழைக்கப்பட்டோ அல்லது புதிதான ஒன்றை அறிந்து கொள்ளும் ஆர்வத்திலோ வருவார்கள்.

இங்கிருந்து அங்கு நான் சென்றதே முக்கியமாக தியாகராஜசுவாமிகளின் கீர்த்தனைகளை விளக்கிச் சொல்வதற்காகத்தான். தமிழில்தான் எனது நிகழ்ச்சியை நடத்தினேன். மூன்று அல்லது நான்கு இடங்களில் மட்டும் ஆங்கிலத்தில் கதாகாலட்சேபம் செய்தேன். இரண்டையுமே ரசித்தார்கள்.

ஓரிடத்தில் 'நந்தனார்' சரித்திரம் சொல்லிக் கொண்டிருந்தேன். இம்மாதிரி தெய்வீக நிகழ்ச்சிகள் எல்லாவற்றையுமே அங்குள்ள சர்ச்சுக்குச் சொந்தமான பெரிய ஹாலில் தான் நடத்துவார்களாம். தெய்வீகமான நிகழ்ச்சி என்றால் மதவேறுபாடு கருதாமல் அந்த இடத்தை இலவசமாக அளிக்கிறார்கள். அந்த ஹாலின் நிர்வாகி என்னுடைய நிகழ்ச்சியின் போது உட்கார்ந்து கேட்க ஆரம்பித்தவர் சுமார் மூன்று மணி நேரம் முழுவதும் கேட்டுவிட்டு என்னிடம் நேராக வந்து, ''நான் என்னை மறந்து உங்கள் நிகழ்ச்சியைக் கேட்டுக் கொண்டிருந்தேன். உங்கள் நிகழ்ச்சி இதயத்திலிருந்து பொங்கிய உணர்ச்சிப் பிரவாகம்'' என்று கூறினார். மற்றொரு சமயம் ரூபன் என்ற பேராசிரியர் எனது நிகழ்ச்சி ஒன்றைக் கேட்டதோடு மட்டுமில்லாமல் அதை டேப்பில் பதிவு செய்து வைத்துக் கொண்டு நான் வேறொரு இடத்தில் இருக்கும்பொழுது என்னைத் தொலைபேசியில் அழைத்தார். 'உங்களது நிகழ்ச்சியை நான் பலமுறை டேப்பில் கேட்டுவிட்டேன். ஒவ்வொரு முறை கேட்கும்பொழுதும் புதுப் புதுச் சிந்தனைகளும், கருத்துக்களும் எனக்குக் கிடைக்கின்றன' என்று கூறினார்.

அங்கு குளிர் அதிகம். ஆனாலும் எப்பொழுதும் அணியும் பஞ்சகச்ச வேஷ்டியுடனேயே மேடை ஏறினேன். அதிகப்படியாக மேலே அணிந்து கொண்டது ஒரு ஸ்வெட்டர்தான். என்னை யாரும் கேலியோ, கிண்டலோ செய்யவில்லை. மதிப்புத்தான் மிகுந்தது. அமெரிக்காவிலிருந்து நான் கனடாவுக்குச் செல்ல வேண்டும். நியூயார்க்கில் அதற்கு விசா வாங்கிக் கொள்ள வேண்டும். கனடா நாட்டுத் தூதரகத்திற்குச் சென்றேன். அங்கிருந்த தலைமை அதிகாரி என்னைப் பார்த்ததுமே ''A learned religious man from India'' என்று கூறி மறுநிமிடமே எனக்கு விசா கொடுத்துவிட்டார்!''

பேட்டி: சலன்



ரீகன் ஆட்சியில் ராமகதை

போட்டிக்கதை : 15

அறிமுக எழுத்தாளர்

நேர்மையின் அவதி

திருவள்ளூர் பார்த்தசாரதி

"ஏம்பா எம். சி.'. அந்த சி. சிலே ஒரு அக்யூஸ்ட்டுக்கு பெயில் ஆர்டராயிருக்கு —பாண்டைக் கொஞ்சம் சீக்கிரமா எழுதி யனுப்பச் சொல்லப்பா!

"யோவ்! இராமசாமி! இங்கே வா! அந்த எம். சி. கிட்ட பத்து ரூபா கொடு. ஜாமீன் தார் எங்கே? அவங்களைக் கூப்பிட்டு பாண்ட்லே கையெழுத்து போடச் சொல் லுங்க. பாண்டுகையெழுத்து ஆகிவந்ததும் டெஸ்பாட்ச் கிளார்க் கிட்டே இரண்டு ரூபா கொடுத்துபாண்டை வாங்கிப் போய் சப்—ஜெயிலில் கொடுத்து ஆளைக் கூட்டிப் போங்க. வாய்தாவுக்கு கரெக்ட்டா வந்து விடச் சொல்லுங்க."

நகரமுமில்லாத — கிராமமுமில்லாத ஒரு இரண்டுங்கெட்டானான அந்த ஊரின் மாஜிஸ் திரேட் கோர்ட். கூட்டம் எதுவுமில்லை. கேஸ் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஏதா வது புதுசா கேஸ்—ரிமாண்ட் வருதா எனப் பார்த்துக் கொண்டு மாலை ஐந்து மணிவரை காத்துக் கிடக்கும் கறுப்புக் கோட்டுகள். ஒருவருக்கு நான்கு, ஐந்து குமாஸ்தா என்ற பேரில் நடமாடிக் கொண்டிருக்கும் வக்கீல் களை விட வசதியாகவும் சந்தோஷமாகவும் சுற்றிக் கொண்டிருக்கும் 'டவுட்'கள்.

காலையில் வீட்டில் மனைவி போட்ட, கோர்ட் உத்தரவை விடவும் செல்லுபடி யாகத் தக்க உத்தரவை மனத்தில் எண்ணிய படி — சீக்கிரமே வீட்டுக்குப் போய் —சினிமா வுக்குத் தன் மனைவியின் பின்னால் நடக்க வேண்டிய அவசரத்தில் வக்கீல் அப்பாசாமி கிடுகிடுவென உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார்:

"சார்! நீங்களே இந்த பத்து ரூபாயை அந்தக் கிளார்க்கிடம் கொடுத்துடுங்க சார்." — எங்கே வக்கீல் போய்விட்டதும் அதிகமாகக் கேட்பாரோ என்ற அச்சத்தில் எச்சரிக்கையாகக் கட்சிக்காரன் குரல் கொடுத்தான்.

"என்னய்யா இது! நீதான் கொடேன்! சரிசரி கொண்டா இப்படி" என வாங்கி அதைப் புதிதாக அன்றுதான் வந்த எம். சி. யிடம் தந்தார் அப்பாசாமி.

"ஸாரி சார்! பணம் வேண்டாம்! நான் பாண்டை எழுதி அனுப்பிச்சிடறேன். நீங்க போங்க!" திடமாக புது எம். சி. சொன்ன வார்த்தைகளைக் கேட்ட வக்கீ லுக்கு ஆச்சரியமான ஆச்சரியம்!

"என்ன பத்து ரூபா போதாதுன்னு வேண்டாங்கிறயா? அல்லது உண்மையிலேயே பணம் வாங்க மாட்டியா?"

"பணம் வாங்கற பழக்கம் இல்லே சார்! சம்பளம் வரதே! அது போதும் சார்."

சரியான பயித்தியக்காரனாக இருப்பான் போலிருக்கிறதே என்று நினைத்துக்கொண்டே வக்கீல் போய்விட்டார்.

மாலை சுமார் ஐந்தரை மணிக்கு டெட் கிளார்க் அன்றைய வசூலைத் தனக்கு இரண்டு பாகமாகவும், மற்ற கிளார்க்கு களுக்கு ஒரு பாகமாகவும், பியூன்களுக்கு அரை பாகமாகவும் போட்டார்.

"ஏனப்பா எம். சி. லோகநாதா! இந்தா உன் பாகம்!"

"பாகமா? எனக்கென்ன பாகம் சார்?" எனக் கேட்ட எம். சி. லோகநாதன் அன்றைய 'வசூலில்' தன் பாகத்தை வாங்க மறுத்த போது ஆச்சர்யமாகப் பார்த்த டெட்கிளார்க்குக்கும் மற்ற கிளார்க்கு களுக்கும் உள்ளூர ஓர் அதிர்ச்சியான சந்தோஷம்! இந்த எம். சி. இருக்கும் வரை ஒரு பங்கை மற்றவர்கள் மீண்டும் தமக் குள்ளே பங்கு போட்டுக் கொள்ளலாம் என்பதே அது.



யார் எதைச் சொன்னாலும் தன்பாட்டுக்கு வேலையை ஒழுங்காகச் செய்து கொண்டு யாரிடமும் பணம் வாங்காமல் ஒருசில மாதங்களைக் கடத்திய லோகநாதனுக்குத் திடீரென்று அன்று ஒரு சோதனை வந்தது!

''எம். சி! உங்களை அய்யா கூப்பிட்டார்'' பியூன் சொல்லிவிட்டு யாரிடமோ அவசரமாக – ஒரு ரூபாய் கேட்கப் போய் விட்டான். 'அய்யாவைப் பார்க்க எம். சி. அவர் அறைக்குப் போனார்.


''ஒன்றுமில்லே எம். சி. நாளைக்கு – ஜட்ஜ் வர்றாராம் – குடும்பத்தோடு கோவிலுக்குப் போகப் போறாராம். அவருக்குத் தங்க ஏற்பாடும் பத்துப் பேருக்கு நல்ல டிபனும் ஏற்பாடு பண்ணிடுங்க.''

மாஜிஸ்திரேட் ஏதோ தன்னை முன்னின்று செய்யச் சொல்வதாகவும் செலவுக்குப் பணம் தந்து விடுவார் என்றும் எண்ணிய எம். சி. தலையாட்டிவிட்டு வந்தார். நல்ல ஓட்டலில் டிபன் ஏற்பாடும் செய்து விட்டார். மாஜிஸ்திரேட்டை எப்படிப் பணம் கேட்பது எனத் தயங்கியபடி தன் பாக்கெட்டிலிருந்தே செலவு செய்தார். பின்னால் கணக்குப் போட்டு வாங்கிக் கொள்ளலாம் என்ற தைரியம் அவருக்கு. ஜட்ஜ் வந்து போய் விட்டார். எம். சிக்கு நல்ல பாராட்டு. ''டிபன் அருமையா ஏற்பாடு செஞ்சீங்க. பரவாயில்லே''. செலவான பணத்தைப் பற்றி மூச்சு விடாத மாஜிஸ்திரேட் டிபனின் அருமையையும் ருசியையும் புகழ்ந்து விட்டு எம்.சி.க்கு விடை கொடுத்துவிட்டார்.

சுமார் ஒரு மாதம் கழிந்திருக்கும். அய்யா கூப்பிடுவதாக பியூன் வந்து கூப்பிட்டான்.

''ஒன்றுமில்லே! இன்றைக்கு பாமாயில் அந்த ரேஷனில் தர்றாங்களாம். ஒரு பியூனை அனுப்பி இரண்டு கிலோவா கேட்டு வாங்கி விடச் சொல்லுங்க.''

எம். சி ஒன்றும் புரியாமல் தலையாட்டி விட்டுச் சீட்டில்வந்து உட்கார்ந்து தலையை பிய்த்துக்கொண்டார். 'ஏன் தம்மைப்



போய் பியூனை அனுப்பச் சொல்கிறார். இவரே கூப்பிட்டு அனுப்ப வேண்டியது தானே' என எம். ஸி. குழம்பிக் கொண்டிருந்தார். அந்தப் பியூன் கையில் டின்னுடன் எம். ஸி. அருகில் வந்து நின்றான். ''சார் அய்யாவுக்கு ரெண்டுகிலோ பாமாயில் வாங்கணுமாம்.''

ஒரு விஸ்தாரமான ரோஜா தோட்டத்துக்கு,டைகரின் பாணியை ஒப்பிடலாம்; ரோஜாவின் சாரம் நிறைந்த அத்தருக்கு வீணை தனம்மாளின் பாணியைக் கூறலாம். பதம், ஜாவளி பாடுவதில் இருவருக்கும் பிரியம் உண்டு. ஆனால் பாடுகிற விதம் வேறானது.

ஒரு தரம், டைகர் க்ஷேத்ரக்ஞர் பதம் பாடினார். கூட்டத்தில் ஒருத்தர் ''அம்மா பாடுவது வேறு விதமாயிருக்கும்'' (அம்மா என்பவர் வீணை தனம்) என்றார். டைகர் குறும்பாகச் சிரித்துக் கூறினார்: ''அய்யா பாடுவது இதுபோல என்று தனத்துக்குத் தெரிவியுங்கள்!''

மூட் வராவிட்டால், டைகர் பாட மாட்டார். ஒரு மாலைப் பொழுதில் நண்பர் ஒருத்தர் சங்கராபரணம் பாடுமாறு வேண்டிக் கொண்டார். சில நிமிடங்கள் முயன்ற பின், கைவிட்டார். ''நன்றாக வரவில்லை. விட்டுவிடலாம்'' என்றார்.

இறக்கும் வரை ஹாஸ்ய உணர்வு கூடவே இருந்தது. மரணத் தறுவாயிலிருக்கையில் டைகர் கூறினார்: ''ரிசர்வ் செய்தாகிவிட்டது. டிக்கெட் வாங்க வேண்டியதுதான் பாக்கி!''

[இந்த இதழில் வெளியாகியுள்ள சங்கீத மேதைகளைப் பற்றிய துணுக்குகளுக்கு ஆதாரம், திரு எஸ். ஒய். கிருஷ்ணசாமி எழுதிய நூல்: Memoirs of a Mediocre man]



''சரி, போய் வாங்கி வா.''

''துட்டு சார்?''

''என்னைக் கேட்டா? அய்யாவைக் கேள். இந்தோ பாருப்பா! என்னாலே இதெல்லாம் முடியாது. என்கிட்டே பணம் இல்லே. அன்னைக்கு டிபனுக்கு ஏற்பாடு செய்ய 60, 70 ரூபா ஆயிடுச்சு. நீ போய் அய்யாகிட்டேச் சொல்லு. என்னாலே முடியாது.''

பியூன் உள்ளே போய் என்ன சொன்னானோ தெரியவில்லை. பின்னர் எம். ஸி.யைக் கூப்பிடவில்லை.

அடுத்த நாள் முதற்கொண்டு சண்டைதற்கெல்லாம் தப்பு கண்டுபிடித்து ஓப்பன் கோர்ட்டிலேயே எம். ஸி.யை நாலு பேருக்குக் கேட்கும்படி திட்ட ஆரம்பித்தார் மாஜிஸ்திரேட்.

''மெக்கானிக்கலா வேலை செய்தா போதாது எம். ஸி.! இந்தக் கேசில் இரண்டு அக்யூஸ்ட் பல மாதமா வர்றாங்க. ஒருத்தன் அப்ஸ்காண்டிங்! வர்றதில்லே! இதைப் பார்க்க வேணாம்? இந்த கேசை ஸ்பிலிட் அப் செய்ய எழுத வேணாம்? சும்மா ஏதோ டாகெட் எழுதறியே! உனக்கென்ன நஷ்டம். அலையறவன் அலையட்டும்னு உட்டுர்றே?''

''சரி சார் இன்னைக்கு ஸ்பிலிட் அப் பண்ணி டாகெட் எழுதி வெச்சுடறேன்.''

அடுத்த நாள் நிறைய அக்யூஸ்ட் வர்ர வேறு ஒரு கேஸ். அதில் இரண்டு பேர் பல மாதமா வர்ரதில்லே. நேற்று மாஜிஸ்ட்ரேட்டிடம் திட்டு வாங்கியதால் முன்னதாக அந்தக் கேஸை எடுத்து ஸ்பிலிட் அப் செய்து டாக்கெட் தயார் செய்து வைத்தார் எம். ஸி.

வந்து உட்கார்ந்த உடனே இந்தக் கட்டு மேலே இருக்க அதை எடுக்க மாஜிஸ்திரேட் பிடித்துக் கொண்டார். ''என்ன நீயே மாஜிஸ்ட்ரேட்டா? என்னை ஒரு வார்த்தை கேட்காம உன்னை யார் இந்தக் கேசை ஸ்பிலிட் அப் செய்யச் சொன்னாங்க? அக்யூஸ்ட் ஏதாவது சவுண்ட்சாங்களா? அப்படி யானா ஜட்ஜ்மெண்ட் கூட நீயே எழுதிடேன்! நான் எதற்கு?'' குனிந்த தலை நிமிராமல் தன் தலையெழுத்தை எண்ணியபடி வாய் மூடி நின்ற எம். ஸி.யைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இப்படி எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடித்துத் திட்டி மானத்தை வாங்கித் தொல்லை தந்து கொண்டிருந்த மாஜிஸ்திரேட்டை விட்டு வேறு கோர்ட்டுக்கு மாற்றல் வாங்கிப் போய்விட எம். ஸி. ‹ருதினார். இன்னும் கொஞ்சநாள் இருந்தால் பைத்தியமே பிடித்து விடும்போலிருந்தது அவருக்கு.

அடுத்தநாளே லீவு போட்டு விட்டுத் தனக்குப் பழக்கமில்லா விட்டாலும் யாரைப் பிடித்தால் வேலையாகும் எனக் கேட்டுத் தெரிந்து அவரைப் போய்ப் பார்த்தார்.

அவர் ''சும்மா டிரான்ஸ்பர் கிடைக்காது. ரூ. 500 செலவாகும் சரியா?'' எனக் கறாராகக் கேட்டார்.

''இந்த மாதம் வாங்கிய சம்பளம் போனால் கூடப் பரவாயில்லை. அந்த

இடத்தை விட்டு வேறு இடம் மாறினால் தான் பயித்தியமாகாமல் தப்ப முடியும்.''

''சரி, பணத்தைக் கொடு.''

போகட்டும் என பணத்தை ஒழித்த லோகநாதனுக்கு அவர் இன்னொரு யோசனையும் சொன்னார்.

''பணம் குடுத்தாக்கூட உடனே டிரான்ஸ்பர் கஷ்டம். சும்மா இன்னாலும் நீ வேலை செய்யற இடத்திலிருந்து இரண்டு மூனு பெட்டிஷன் போடச் சொல்லு. 'நீ பணம் வாங்கர. அக்யூஸ்டுகளைத் தொல்லை பண்ற' அப்படின்ற மாதிரி பெட்டிஷன் போடச் சொல்லு. அதை பேஸ் பண்ணி உன்னை வேறெ இடத்துக்கு மாத்தற மாதிரி மாத்திடச் சொல்லுவேன்.''

வீட்டுக்கு வந்த எம். சி. நேராக முதல் நாள் தனக்குப் பணம் கொடுக்க வந்த வக்கீல் வீட்டிற்கே போய்த் தன் மீது ஏதாவது இரண்டு கட்சிக்காரர்களை விட்டு மொட்டைப் பெட்டிசன் போடச் சொல்லிக் கெஞ்சினார்.

''நான் மாட்டம்பா! சும்மாவே நான் மொட்டை பெட்டிஷன் போடறவன்னு பேராயிடுச்சு'' என்றார் வக்கீல்.

''சார்! உங்க கால்லே உழறேன் சார். இந்த உதவி செய்யுங்க. சார். இந்த கோர்ட்டிலே இருந்தா எனக்குப் பயித்தியமே பிடிச்சிடும் சார்.'' அழுதான் லோகநாதன்.

ஒருவாறாக, மொட்டை பெட்டிஷன் போட அந்த வக்கீலும் ஒப்புக் கொண்டார்.

வீட்டுக்குப் போன எம். சி.க்கு அன்று இரவுதான் நிம்மதியாகத் தூக்கம் வந்தது. சீக்கிரமே டிரான்ஸ்பர் வந்து விடும் என்ற கற்பனையே இதமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

ஆனால் பலநாளாகியும் டிரான்ஸ்பர் வராமல் போகவே டிரான்ஸ்பர்க்கு வழி செய்வதாய்ச் சொன்னவரைப் போய் எம்.சி. மறுபடியும் பார்த்தார்.

இருவரும் நேராக டிரான்ஸ்பர் போடும் அதிகாரியைப் போய்ப் பார்த்தார்கள்.

''என்ன லோகநாதன் உன்னை அந்த ஊருக்குப் போட்டு நாலு மாதம் தான் ஆகிறது. இப்பவே அந்த ஊர் வேண்டாங்கற! உன் மேலே நிறைய பெட்டிஷன் வருது. உங்க மாஜிஸ்ட்ரேட்டும் உன்மேலே நிறைய ரிப்போர்ட் எழுதியிருக்கார். ஆக உனக்குத் தற்போது தண்டனையாக டிரான்ஸ்பர் கிடையாது. நீ அதே இடத்திலே வேலை செய்து, யாரிடமும் பணம் வாங்காமல் நல்லவனாகப் பேர் எடு. அப்புறம் தான் உன் டிரான்ஸ்பர் பற்றி யோசிக்க முடியும். புரிந்ததா! உன் மேலே பெட்டிஷன் இல்லாமல் பார்த்துக்கோ! சரியா? உம் போய் வா!''

விடை கொடுத்து விட்டார் பெரிய அதிகாரி.

''அப்போ இதுவரை ஒழுங்காகப் பணம் வாங்காமல் வேலை செய்தது...?'' யோசித்தார் எம். சி.


வெளியே வந்த லோகநாதனுக்கு உலகமே கொஞ்சம் கொஞ்சமாக இப்பத்தான் புரிய ஆரம்பித்தது.

மறுநாள் கோர்ட்டுக்கு வந்த லோகநாதன் வாய்தாக் கட்டுக்களை எடுத்து வைத்து, அவற்றில் வந்திருந்தவர்களைக் கூப்பிட்டார் ''ஆளுக்கு ஒரு ரூபா கொடுங்க உங்க கட்டுக்களை முதல்ல வெச்ச சீக்கிரமே கூப்பிட்டு வாய்தா போட்டு அனுப்பிச்சுடறேன்.'' கடகடவென வசூல் ஆரம்பம்.

எட்டினார்க்கிடம் போய் ''சார், அவசரமா ஒரு பத்து ரூபா கொடுங்க சார்! சாயங்காலம் என் பங்கு துட்டுலே எடுத்துக்குங்கோ சார்!'' என்று கூறி விட்டு அதிசயமாக இப்போதும் பார்க்கும் எட்டினாரக்கிடம் பணத்தை வாங்கிக் கொண்டார். நேரே மாஜிஸ்திரேட் அறைக்குள் போனார்.

''அய்யா! இன்னைக்கு சர்க்கரை கொடுக்கறாங்க! நாலு கிலோ வாங்கி ப்யூன் கையிலே கொடுத்தனுப்பிச்சுடறேன்'' என்று கூறிவிட்டு, பதிலுக்குக் கூடக் காத்திராமல் தன் சீட்டிலே வந்து உட்கார்ந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார்.

லோகநாதன் எம்.சி., இப்போதுதான் அரசாங்க உத்யோகஸ்தராக மதிக்கப்படுகிறார். அவருக்கு மரியாதையும் புகழும் செல்வாக்கும் தேடி வருகின்றன. அவரை மாஜிஸ்ட்ரேட் குறை சொல்வதில்லை. வக்கீல்கள் குறை சொல்வதில்லை. பட்டுப்பட்டென்று வேலைகள் முடிகின்றன. அவர் ஒரு முழுமையான அரசு உத்யோகஸ்தராகி விட்டார்!




விழாக்காலச்
சிறப்புத்
தள்ளுபடி!
20%
டிசம்பர் 19 முதல்
பொங்கல் வரை
அனைத்து ரகங்களுக்கும் உண்டு.
வருக:
ஹேண்ட்லூம் ஹவுஸ்
7, ரத்தன் பஜார், சென்னை-3.
• ஞாயிறும் திறந்திருக்கும்.
மற்றும் கோயம்புத்தூர் 27/28, திவான்பகதூர்ரோடு.
ஆர்.எஸ். புரத்தில் எமது ஷோரூமிலும் இச்சலுகை உண்டு.

ஸ்ரீ கரிவரதராஜப் பெருமான்கோவில். சந்துக்களையும் இட நெருக்கடியால் இருப்பிடம் தவறிய சாக்கடையையும் பொறுமையுடன் தாண்டினுல் தான் என்று தலை நிமிர்ந்து நிற்கும் கோபுரம். எல்லோருக்கும் புன்னகையை மட்டுமே பொதுவாகக் கொண்ட பெருமான். ஆங்காங்கே நெறித்தனக்குள் பேசி நடக்கும் சில பாட்டிமார்கள்! சுழலும் கண்களுடன் சில மாணவ, மாணவியர்கள்.

இவைதாம் ஸ்ரீகரிவரதராஜப் பெருமாள் கோவில்.

அது ஒரு புரட்டாசி சனிக்கிழமையின் காலை வேளை. வெண்கலக் குரலில் சுலோகம் சொல்லியவாறு அலைந்துகொண்டிருந்தார் குருக்கள். மாலையில் நடக்கப் போகும் புறப்பாடு உற்சவத்துக்குக் காலையே ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தது.



புரிந்து கொள்ள முடியாதவர்கள்

து. முத்துகுமார்
பி. எஸ். ஜி. பொறியியற் கல்லூரி.
இரண்டாம் ஆண்டு
உலோகவியல்
கோவை-4.

''டேய் இச்சா! அந்தக் கற்பூரத் தட்டை ஒழுங்காத் துடைத்து வையடா!• கருடன் பொம்மையின் கால் நகம் உடைந்திருக்கு! அதையும் சரிபார்!''

ஆயத்தங்களுக்கான ஆலோசனைகளை அதிகாரங்களாக அளித்தபடி விரைந்துகொண்டிருந்தார் குருக்கள்.

மனைவி தன்மேல் செய்யும் அர்ச்சனைகளுக்கு இடையே சுலோகங்களைச் சொல்லியவாறு கறுகறுப்பாய்க் கோவிலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார் சேஷய்யங்கார்.

''என்ன! அந்தத் திருவாரூர் வரன் என்ன சொன்ன?'' என்று சுகத்தைக் கனவில் மட்டுமே கண்ட அவரது மனைவி கேட்டாள்.

''அது கைவிட்டுப் போச்சுடி. நிறைய எதிர்பார்ப்பா போலிருக்கு!''

''இப்படியே எல்லா வரனும் போயிண்டிருக்கு! எப்பத்தான் நம்ம பொண்ணுக்குக் கல்யாணம்?''

''ஏண்டி! காலையிலே கோவிலுக்குப் போகும் போது தொணதொணக்கிறே! கொஞ்ச நேரம் பேசாம இரேன்.''

''ஆமா! தினமும் தான் கோவில் போறேன். அந்தப் பெருமாள் ஒரு வழியையும் காட்ட மாட்டேங்கிறாரே?''

மனைவியின் கோபம் பெருமாளின் மீது திரும்பிய போது சேஷய்யங்கார் கோவிலில் இருந்தார்.

''பெருமாளே! என் பெண் கல்யாணத்தை எப்படியாவது நடத்திவைப்பா.'' விடாமல் விரட்டி வரும் வீட்டு நினைவுகளை அவன் சன்னதியில் கூட அவரால் விலக்க முடியவில்லை. பெருமாளைத் தவிர திருவாரூர் வரனிலிருந்து மளிகைக்கடை செட்டியார் வரை எல்லோரும் அவருடைய நினைவுக்கு வந்தார்கள்.

''என்ன சேஷய்யங்கார்! இன்னைக்கு சாயந்தரம் பொங்கலும், புளியோதரையும் இருக்கு வந்துடுங்கோ!'' என்றார் குருக்கள் அவசரத்தில்.

ஏதோ புளியோதரைக்கும் பொங்கலுக்கும் கோவிலுக்கு வருகிற மாதிரி குருக்கள் சொன்ன வார்த்தைகள் நெஞ்சில் சுருக்கிட்டது. அவரும் பெருமாளும் வெகுதூரம் விலகிச் சென்ற மாதிரி பட்டது. கனத்த இதயத்துடன் வீடு திரும்பினார்.

சேஷய்யங்காரை நினைத்த போது எனக்கு ஆத்திரமாக இருந்தது. காரியத்திற்காக மட்டுமே கடவுளை வணங்கும் இவர்களைப் படைத்த இறைவன் மீதும் கோபம் வந்தது. என்னைப் பற்றி ஒரு சிறு அறிமுகம். சேஷய்யங்காரின் அடுத்த வீட்டுக்காரன். வாரம் தவறாமல் கோவிலுக்குச்



செல்பவன். 'ஆண்டவனிடம் கூடப் பொது நலத்திற்காக மட்டுமே வேண்ட வேண்டும்' என்று சொல்லித் திரிபவன். இளம் பெண்களைத் திரும்பிப் பார்க்கும் வயது.

மணி மாலை ஆறு. கோவிலுக்குப் புறப்பட்ட போது பார்த்திபன் எதிர்ப்பட்டான்.

''என்ன மச்சான்! எங்கே கிளம்பிட்ட?''

''கோவிலுக்குடா. கோவிலுக்குப் போனா ஒரு மன நிம்மதி கிடைக்குதுடா!''

''அப்படி என்னடா உன் வீட்டிலே உனக்கு மன நிம்மதி இல்லே?''

''டேய் பார்த்திப்! அதையெல்லாம் உணர்ந்து பார்த்தாப் புரியும்டா.'' விளக்கம் கொடுக்க முடியாமல் விலகிச் செல்கிறேன்.

கந்தசாமி அவர்கள் வீடு.

''சார்! ஏழரை மணிக்குப் பெருமாள் கோவிலில் நம்ம உற்சவம். கிளம்பணும்.''

''எந்தப் பெருமாள் கோவில்?'' என்றார் அலட்சியத்துடன் கந்தசாமி.

'அதாங்க அந்த ஐயர் வந்த போது ஒத்துக்கிட்டீங்களே!'

''சரி, சரி! போகலாம்.''

வியர்த்திருந்த முகத்தைப் புடவையில் துடைத்தவாறு ''என்னா! எங்கே கிளம்பிட்டேன்? எட்டு மணிக்கு அந்தத் தரகர் வரச் சொன்னார்'' என்றாள் மனைவி.

''சாமி புறப்பாட்டைப் பார்த்துட்டு, உடனே வரேன்'' என்றார் சேஷய்யங்கார்.

''சார்! போகலாம்!''

''இருய்யா! டிபன் சாப்பிட்டு வரேன்!''

அணிந்த வேட்டியின் கரைக்கேற்ப அங்கவஸ்திரத்தைத் தேடி, அவர் காரில் அமர்ந்த போது மணி எட்டு.

''என்னய்யா ரோடு இது. சந்தும் பொந்துமா இருக்கு. இந்த இடத்திலே கோயில் கட்டியிருக்கான்? கோபுரமும் இவ்வளவு சின்னதா இருக்கு?''

நான்கோவிலில் நுழைந்து பிராகாரம் சுற்றிய போது ஒரு பெரியவர் தம் நண்பரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

''இந்தக் காலத்துப் பசங்க கோவிலையும் விடறதில்லே. சடை மாதிரி முடியையும், பெருக்குகிற மாதிரி பேண்ட்டையும் வைச்சுக் கிட்டு அலையுறான். இங்க கூட நம்ம பெண்களைக் கூட்டிக்கிட்டு வர முடியலே. இதுகளுக்கெல்லாம் எப்ப புத்தி வரப் போகுதோ?''

யாரோ எப்போதோ செய்ததற்காக, எல்லோரையும் ஒன்று போல் பார்க்கும் இவர்களின் பைத்தியக்காரத்தனத்தை எண்ணியவாறு நகர்ந்தேன்.

மணி 8.30 சுவாமி புறப்பாட்டிற்காக எல்லோரும் காத்திருந்தார்கள். கந்தசாமி வருகைக்காகப் பெருமாள் காத்திருந்தார்!

'கந்தசாமி இன்னும் பத்து நிமிஷத்திலே வந்திடுவார். வீட்டிலிருந்து புறப்பட்டாச்சு' அவர் வருகையைப் பற்றி அவ்வப்போது செய்தி கூறிக் கொண்டிருந்தார் ஒருவர்.

> மாணவர் பக்கங்களுக்கு அனுப்பப்படும் கதைகள், கட்டுரைகள், துணுக்குகளைத் திருப்பி அனுப்ப இயலாது. அவை தொடர்பான கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை. —ஆசிரியர்

திடீரென்று பரபரப்புத் தோன்றப் போலிச் சிரிப்புடன் கந்தசாமி வந்து கொண்டிருந்தார். என் கண் அவர் அருகில் வந்த பெண்ணை எடை போட்டது. 'என்ன குருக்களே! லேட்டாய் வந்துட்டேனா?'

'யார் சொன்னா? கரெக்டாதான் வந்திருக்கிறேன்' என்று குருக்கள் சொன்ன போது கடிகாரம் 8.45-ஐ தாண்டியிருந்தது.

''குருக்களே! கொஞ்சம் சாமி பாதத்திலிருந்து பூ எடுத்துக் கொடுங்களேன்!''

''கொஞ்சம் ஒதுங்கி நில்லுங்க! சார்! கொஞ்சம் தலையைக் காட்டுங்களேன்'' பெருமாளின் உடம்பிலிருந்த பெரும் மலர் மாலை கந்தசாமி கூச்சத்துடன் தடுத்த போதும் அவர் கழுத்தைச் சரணடைந்தது.

'டிரைவர்! இதைக் காரின் பின்புறம் போடு!'

டிரைவர் வாங்கிய போது கட்டியிருந்த மலர்கள் சில சிதறின. பின்னர் அவை காலால் மிதிபட்டன.

''குருக்களே! இன்றைய அலங்காரம் பிரமாதம்!'' என்று பெருமாளைப் பார்த்த பரவசத்தில் தரகரை மறந்த சேஷய்யங்கார் கூறினார்.

அதைக் காதில் வாங்காத குருக்கள், கந்தசாமியிடம் ''இன்றைய அலங்காரம் ஒப்பிலியப்பனுக்குப் பண்ணினது. அதன் போட்டோ ஒன்று இருந்தது. அதை வைச்சி அலங்காரம் பண்ணினேன். எப்படி இருக்குன்னு நீங்க சொல்லவே இல்லியே!'' என்றார்.

தன் நினைவுகளிலிருந்து விடுபட்டுத் திடுக்கிட்ட கந்தசாமி ''நல்லா இருக்கு''. என்றார். கற்பூர ஆரத்திக்காகக் கெட்டி மேளம் அடித்த போது கையைக் கூப்பிக் கண் மூடிய கந்தசாமி, ''பெருமாளே! கோர்ட்லே என் கேஸ் ஜெயிக்கணும்'' என்று வேண்டினார். பின் யோசித்து, ''ஆமா பெருமாளுக்கு நகை கூட இல்லே. இவர் எங்க நம்ம கேஸை ஜெயிக்க வைக்கப் போறார். அடுத்த வாரமாவது திருப்பதி போகணும்'' என்று முணுமுணுத்தார்.

எல்லாவற்றையும் கடந்து பெருமாள் புறப்பட்ட போது மணி 9.15.

சுவாமி புறப்பட்டதுமே தன் கடமை முடிந்தது மாதிரி கந்தசாமி புறப்பட்டுச் சென்று விட்டார்.

''நல்ல பணக்கார இடம். நான் போய்க் கேட்ட போது உடனே ஒத்துண்டார். நல்ல மனுஷன். இவர் வீட்டைப் போய்ப் பார்க்கணுமே! பெரிய அரண்மனை மாதிரி இருக்கு. எவ்வளவோ வேலையிருந்தாலும் உடனே வந்து நடத்திக் கொடுத்துட்டார்'' என்று கந்தசாமி கொடுத்த பெரும் காணிக்கையைத் தடவியவாறு குருக்கள் வாயெல்லாம் பல்லாகப் பக்கத்திலுள்ளவரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

'அவர் கொடுத்த பணத்தை மட்டுமே வைத்து அவருக்கு 'நல்லவர்' என்ற பட்டம் கொடுத்த குருக்களை நினைத்த போது எனக்குக் கோபம் வந்தது. அவருடைய கால தாமதத்தை அந்தப் பணம் மறைத்து விட்டது. பணம் கொடுத்தவன் வந்தபின்தான் சுவாமிக்கே புறப்பாடு. கடவுள் கூடப் பணத்திற்குத் தலை வணங்க வேண்டியதாயிற்று.

'ஏன்! இந்த சேஷய்யங்கார் மட்டும் என்ன வாழ்ந்தார்? மகளுக்குக் கல்யாணம் பண்ண வேண்டும் என்ற எண்ணத்தில் மட்டுமே இருவேளையும் கோவிலுக்கு வருகிறார்.

நான் மட்டும் உருப்படியா? பொது நலத்தைப் பற்றி முரசடித்து வந்தவன், நண்பன் கேட்டபோது 'கோவிலுக்குப்போனா ஒருமன நிம்மதி கிடைக்குதுடா' என்று கூறவில்லையா? அதுவும் ஒரு வித சுயநலம் தானே? அப்புறம் கந்தசாமி பின்னாடிவந்த பெண்ணை இந்தக் கண்கள் எடைபோட வில்லையா?


என்னைப் பற்றி நினைக்கும் போது என் மீதே எனக்கு வெறுப்பாய் வந்தது.

எனக்கு நானே பகையான போது, ஒன்றும் புரியாமல் பெருமாளைப் பார்த்தேன். அவர் எல்லாம் புரிந்த மாதிரி எப்பொழுதும் போல் சிரித்துக் கொண்டிருந்தார்.

ஐயோ, புலி!

'பாயும் புலி' படத்தின் பாடல்களை ஒலிபரப்பும் போது இலங்கைவானொலியில் படத்தின் பெயரை 'இரும்புக்கை' என்றுதான் கூறுகிறார்கள். புலி என்றாலே ஈழ அரசுக்கு அலர்ஜி! நான் இலங்கையிலிருந்தால் என் புலி பெயரை மாற்றிக் கொள்ள நேர்ந்திருக்குமோ?

—புலியூர் பிரபா.
(எம்.ரமேஷ்)
இறுதியாண்டு பி.டெக்(புரொடக்ஷன்),
எம்.ஐ.டி., சென்னை—44.



திருமதி மோகனா வீரமணி கூறுகிறார்:



அந்தக் காலத்தில் இருந்து வந்த உடன் கட்டை ஏறும் பழக்கத்தைச் சட்டம் போட்டுத் தடுத்ததும் பெண்கள் தாலியை அறுத்து விட்டு விதவைக் கோலத்துடனே இருக்கலாம் என்றார்கள். இப்போது காலம் மாறி இளம் வயதிலேயே விதவையாகி விட்டால் மறு மணம் புரிந்து கொள்வது நியாயம்தான் என்று ஒத்துக் கொள்கிறோம். சமுதாயம் இப்படி மாறி வரும்போது அடிமைச் சின்னமான தாலி கட்டும் வழக்கத்தை மட்டும் இன்னும் ஏன் விடாமல் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்?

தாலி கட்டும் முறை புகுத்தப்பட்ட காலத்தில் இருந்த பெண்கள் சமுதாயம் இப்போது

தாலி அணிவது தேவைதானா?



இல்லை. எவ்வளவோ மாற்றங்கள், வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன. இத்தனையையும் ஏற்றுக்கொண்டிருக்கிற நாம் அந்த அடிமைச் சின்னத்தை மட்டும் ஏன் கைவிடக் கூடாது?

கணவனும் மனைவியும் நல்ல நண்பர்களாக ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு வாழ்வதுதான் நல்ல வாழ்க்கை. கழுத்தில் கட்டப்படும் ஒரு சாதாரணக் கயிறு இந்த நல்ல வாழ்க்கையைத் தந்துவிடுமா? தாலி கட்டாத தம்பதிகள் எவ்வளவோ பேர் நன்றாகவே வாழ்கிறார்கள். திருமணமானவர்களைக் கண்டுபிடிக்கும் அடையாளம்தான் தாலி என்றால் திருமணமான ஆண்களுக்கு மட்டும் அது வேண்டாமா? தாலி பெண்களுக்குக் காப்பு என்று சொல்வது அர்த்தமில்லாதது. காரணம், இப்போது தாலி அணியும் பெண்களுக்கு எதிரான கொடுமைகள் குறைந்து விட்டனவா? இல்லையே?

பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பது ஒரு சமுதாயப் பிரச்னை. இதைத் தாலிக் கயிற்றால் நீக்கிவிட முடியாது. கழுத்தில் கயிறு வந்து விட்டது என்பதற்காக எந்தக் கொடுமையையும் ஒரு பெண் சகித்துக்கொள்ள வேண்டும் என்ற கருத்தை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? இது ஒரு புனிதப் பொருள் என்று சொல்லிப் பயமுறுத்தியும் வைத்து விட்டார்கள். பெண்களிடம் புகுத்தப்பட்ட இந்தப் பயத்தையே ஆண்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு கொடுமைப்படுத்துவதும், ஆதிக்கம் செலுத்துவதும் நியாயமில்லாததாகும்.

பெண்களுக்குத் தாலி கட்டுவதன் மூலம் அவளை ஒரு ஜடப் பொருளாக ஆக்கி, கணவருக்கு தானமாகக் கொடுக்கிறது என்று இந்து மதம் கூறுகிறது.

திரு. கி. வா. ஜ. கூறுகிறார்:

மாங்கல்யம் தந்துநாநேந மம ஜீவந ஹேதுநா'....இது மங்கள சத்ரம். நான் ஜீவித்திருப்பதற்கு ஏதுவானது. இதை உன் கழுத்தில் கட்டுகிறேன்' என்று கூறிக் கணவன் தன் மனைவியின் கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டுகிறான். இந்தத் திருமாங்கல்யம் அவனுடைய ஜீவநாடி. அவனுடைய உயிருக்கு இது ரக்ஷை.

தாலி என்பது ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு மதத்துக்கும் வேறுபடுமே தவிர, அது எல்லோருக்கும் இருக்கும் ஒரு பழக்கம் தான். தமிழ் நாட்டில் மஞ்சள் கயிற்றில் சேர்த்துக் கட்டிக் கொள்கிறார்கள். சிலர் பொட்டுக் கட்டி, மற்றும் ஆமைத் தாலி கட்டிக் கொள்கிறார்கள். சிலர் மோதிரம் போட்டுக் கொள்கிறார்கள். பழங் காலத்தில் ஒரு வீரன் புலியைக் கொன்று அதன் நகத்தைத் தன் காதலியின் கழுத்தில் தன் வீரத்துக்கு அடையாளமாகக் கட்டி வந்தான். அதுவே அவர்களுடைய தாலியாக இருந்து வந்தது. கண்ணகியும் தாலி கட்டிக்கொண்டதாக வரலாறு கூறுகிறது. சிலப்பதிகாரத்தில் கண்ணகியைக் கோவலன் விட்டுப் பிரிந்த பின் கண்ணகி, மங்கல அணியிற் பிற அணி அணியாள்' என்று கூறப்பட்டிருக்கிறது.

ஒரு தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழலாம். ஆனால் அவர்கள் காதலர்களாக இருக்கலாமே தவிர கணவன் — மனைவியாக இருக்க முடியாது. அவர்கள் கணவன்—மனைவி என்பதன் அடையாளச் சின்னம்தான் தாலி.

ஒரு கணவன் மனைவியைக் கொடுமைப் படுத்துகிறான் என்றால் அது அவனுடைய கெட்ட குணம். தாலி கட்டினாலும் கட்டா

விட்டாலும் அவன் அப்படித்தான் இருக்கப் போகிறான். அந்தத் தீயவர்களைப் பற்றி நமக்குக் கவலை இல்லை.


கழுத்தில் தாலி இருந்தால் அவள் மாற்றான் மனைவி என்ற காரணத்தால் மற்ற ஆடவர் அவளைத் தீய எண்ணத்தோடு பார்க்க மாட்டார்கள். மாற்றான் மனைவி என்று தெரிந்தும் அவளை அப்படிப்பட்ட தீய எண்ணத்தோடு பார்க்கும் அயோக்கியனை நாம என்ன செய்ய முடியும்?

தொன்றுதொட்டு இருந்து வரும் இந்தப் பழக்கத்தை நம் பாரதப் பெண்கள் புனிதமாகக் கருதுகிறார்களே தவிர அதை அடிமைத்தனமாகக் கருதுவதில்லை.

நாம் உட்கார்ந்திருக்கும்போது ஒரு பெரியவர் வந்தால் நாம் எழுந்து நின்று வரவேற்கிறோம். நாம் எழுந்து நிற்காவிட்டாலும் அவர் நம்மை வற்புறுத்தப் போவதில்லை. ஒரு மரியாதைக்காகத்தான் நாம் இப்படிச் செய்கிறோம். அது போல் மனைவி கணவனிடம் மரியாதை செலுத்துவதை நாம் அடிமைத்தனம் என்று எப்படிக் கூற முடியும்?

பேட்டி: கலாமூர்த்தி

வாரம் ஒரு புத்தகம்



வேலுச்சாமியின் வெற்றி

கவிதை என்றதுமே பக்கத்தைப் புரட்டிய காலம் போய் இன்று பத்திரிகைகளில் கவிதையை ஆர்வமுடன் எதிர்பார்க்கிற காலம் வந்ததற்குப் புதுக்கவிதையே காரணம். படிப்பவர்கள் மட்டுமல்ல, கவிதை எழுதுவோரும் அளவின்றிப் பெருகி விட்டனர். ஒவ்வொரு பத்திரிகைக் காரியாலயத்திலும் அன்றாடம் வந்து குவிகிற புதுக் கவிதைகளுக்குக் கணக்கு வழக்கு இல்லை. மரபுக் கவிதை என்றால் இலக்கணம் தெரிய வேண்டும். புதுக்கவிதைக்கு அதொன்றும் தேவையில்லை என்பதாக எண்ணிக்கொண்டு எழுதித் தள்ளுகிறார்கள்.

புதுக் கவிதைக்கு இலக்கணம் நிச்சயம் உண்டு. ஆழ்ந்த கருத்து ஒன்று இலக்கிய நயமுடன் கூறப்பட வேண்டும் என்பது மறக்கக் கூடாத இலக்கணம். அதைப் படிக்கும் போது ஓசை நயம் இருப்பது கூடுதல் சிறப்பு.

காதலிக்குக் கடிதம் எழுதும் ஒருவன், 'கண்ணீர் சிந்தாதே; இந்த உலகம் தாங்காது, நானும் தாங்க மாட்டேன்' என்று எழுதலாம். அல்லது இரா. வேலுச்சாமி எழுதுவது போல்,

உன்
கண்ணீர்த் துளிகள்
பெருகினால்
உலகம்
வெந்நீர்க்
குளமாகிவிடலாம்....

என்றும் எழுதலாம்.

புதுக்கவிதை நூலின் எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும், கவிதையை முழுதும் படிக்காமல் ஒரு பாராவைப் படித்தாலும் அதில் ஒரு புதிய சிந்தனை இருந்து நம்மைக் கவர வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினையில் வேலுச்சாமியின் கொள்கை நமக்கு உடன்பாடு இல்லை என்றாலும்

எங்கள்
அரசியல் வாதிகளின்
ஆர்ப்பாட்டக் கொடிகள்
அடுத்த தேர்தலின்
ஆதாயம் கருதியே
அசைக்கப்படுகின்றன

என்ற வரிகள் ரசிக்கும்படியுள்ளனவே!

கண்ணதாசன் என்ற பெயரையே குறிப்பிடாமல் 'திரை விழுந்தது' என்று தலைப்பிட்டு இவர் எழுதியுள்ள கவிதை இத்தனை காலம் சென்றும் இன்னும் மனத்தை நெகிழ்விக்கிறது என்பது கண்ணதாசனுக்கு மட்டுமல்ல, இவருக்கும் சிறப்பு.

ஆண்டியின் மனதோடு
வாழ்ந்து முடிந்த
அரசன் இவன்...
அதனால்தான்
சறுக்கல்களைக் கூட
இவனால்
சாதனைகளாய்
ஆக்க முடிந்தது.

''கவிதையும் எழுத்தும் எ[illegible] சிந்தனை'' என்று வேலுச்சாமி [illegible]ரையில் கூறுவதை நம்ப முடிகிறது, நன்றிக்குரியவர் பட்டியலைக் கூட புதுக்கவிதை வடிவில் தருவதால். அதன் இறுதியில், ''தொந்தரவு செய்யாத என் துணைவி சுசீலா'' என்று முடிப்பதானது மென்னகையைத் தோற்றுவித்தாலும் நூலில் பெரும்பாலும் அவலச் சுவையே அதிகம். அதற்குக் கவிஞன் என்ன செய்வான்? இன்று இந்தியன் வாழ்க்கை அப்படித்தானே இருக்கிறது!

—குட்டி கிருஷ்ணன்

அன்புடன்... இரா. வேலுச்சாமி, பிரசுரம்: வானதி பதிப்பகம், சென்னை—600 017, விலை: ரூ. 7.50.

போராட வேண்டிய நிலையில் பெண்கள்

மருமகளை மண்ணெண்ணெய் ஊற்றி எரித்த கொடுமைக்காகக் குற்றவாளிகள் என்று தீர்மானம் செய்து மூன்று பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. ஆனால், அவர்களை சுப்ரீம் கோர்ட் விடுதலை செய்து விட்டது.

—நாடெங்கிலும் உள்ள பெண் குலத்துக்கு அடுத்தடுத்து ஆறுதலையும் அதிர்ச்சியையும் அளித்த செய்திகள் இவை. போதிய சாட்சியம் இல்லை என்பதால் சுப்ரீம் கோர்ட் விடுதலை தந்ததை விமர்சிக்க வேண்டியதில்லை என்றாலும் மரண தண்டனை பெற வாய்ப்புண்டு என்ற எண்ணமே இத்தகைய குற்றங்களைக் குறைக்கும்.

இதுபோல் பெண்ணினத்துக்கு இழைக்கப் படும் பல அநீதிகளைக் கண்டிக்கும் முகமாக சென்னையில் ஒரு கருத்தரங்கு நடந்தது. முதன் முறையாகப் பல்வேறு மகளிர் அமைப்புக்களின் ஒருங்கிணைந்த முயற்சியாக இது அமைந்தது. இதன் தொடக்கமாகப் பெண்களின் மௌன ஊர்வலம் ஒன்றையும் பார்த்தோம்.

பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஆண்களும் கருத்தரங்கில் பங்கு கொண்டனர். பெரும்பாலும் உயர்மட்டக் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் வந்திருந்த இந்தக் கூட்டத்தில் அநேகமாய் எல்லோரும் ஆங்கிலத்திலேயே பேசினார்கள். கிராமப்புறங்களில் அவதிப்படும் பெண்களின் அவலங்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று ஒருவர் குறிப்பிட்டது நியாயமானதே. அடக்குமுறைக்குப் பெரும்பாலும் ஆளாகிறவர்கள் படிப்பறியாத பாமரர் வீட்டுப் பெண்கள்தானே தவிரப் படித்த வர்க்கம் அல்ல.

பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துக் கோஷம் போட்டுக் கண்டித்து ஊர்வலம் வருவதை விட்டுவிட்டு மௌன ஊர்வலம் போவது சரியில்லை என்று முழங்கினார் ஒருவர்.

''பெண்களை வாணிபப் பொருளாக்குதல்'' என்கிற கருத்தரங்கத் தலைப்பே பெண்களை அவமதிப்பதாக இருக்கிறது என்று குமுறினார் விளம்பரத் துறைப் பிரதிநிதி ஆர். கே. சுவாமி. சிவசங்கரியின் பேச்சுக்குக் கருத்தரங்குத் தலைவர் சோ தந்த மறுப்பும் விளக்கமும் சலசலப்பை உண்டாக்கிவிட்டன. முக்கியமாகப் பெண்கள் தரப்பிலிருந்து சோவுக்கு எதிர்ப்பு... ஆனால் எழுத்தில் ஆபாசம் என்பதைப் பற்றித்தான் வகுத்துக் கொண்டுள்ள கொள்கையை ஊர்ஜிதம் செய்து விட்டுத்தான் சோ அமர்ந்தார். ''முன்பு தெருவெல்லாம் அசிங்கமாக இருக்கும். இப்போது கண்ட கண்ட பத்திரிகைகள் அடுப்பங்கரை வரை நுழைந்து வீடுகளை அசிங்கப்படுத்திவிட்டபடியால் தெரு சுத்தமாக இருக்கிறது'' என்று கிண்டலாகக் குறிப்பிட்டார்.

திரு. சௌதேகர், ஆபாச சினிமாவுக்கும், விளம்பரங்களுக்கும் போஸ் கொடுத்து, தங்களை விளம்பரப் பொருளாக்க அனுமதிக்கிற பெண்கள் மீது நீங்கள் ஏன் போர் தொடுக்கவில்லை என்று கேட்டார். குழந்தை பிறப்பதற்கு முன்பே ஆணாக இருந்தால் பிறக்கட்டும் என்று விட்டு, பெண் குழந்தையானால் கருச்சிதைவு செய்து கொள்கிற மன நிலையை நீங்கள் ஏன் அனுமதிக்கிறீர்கள் என்கிற அவருடைய கேள்வி மனைவிமார்களை நோக்கி மட்டும் வீசப்படவேண்டியதல்ல. இதற்குக் கணவன்மார்களும் தான் காரணம்.

'ரசிகர்கள் விரும்புகிறவரை நாங்கள் அப்படித்தான் படம் எடுப்போம். செக்ஸ் நடனங்களை வைப்போம். நீங்கள் வெறுத்து ஒதுக்கினால் தானே நாங்கள் இரட்டை அர்த்த வசனங்களை விட்டுவிட்டுத் தரமாகப் படம் எடுப்போம்?' என்கிற மாதிரி முக்தா சீனிவாசன் பேசியது சரியான வாதம் ஆகாது. விஷயத்தைத் தருகிறவர்களுக்கும் பொறுப்பு இருக்க வேண்டாமா? மக்களுடைய பலங்களை வளர்க்கக் கலையைப் பயன்படுத்தாமல் பலவீனங்களைப் பயன்படுத்தி வியாபாரம் செய்வது நியாயமோ, தர்மமோ அல்ல.

உடன்கட்டைக் கொடுமையை எதிர்த்துப் போராடிய ராஜாராம் மோகன்ராய் பற்றியும், பால்யத் திருமணத்துக்குத் தடை விதிக்கும் சாரதாச் சட்டம் நிறைவேறக் காரணமாக இருந்த சாரதா பற்றியும் சௌதேகர் கூறினார். சாரதா என்பது ஓர் ஆணின் பெயர் என்பது கூடப் பலருக்குத் தெரிந்திராது.

போராடினால்தான் சில நியாயங்களாவது கிடைக்கும் என்கிற நிலையில்தான் இன்றும் குடும்பப் பெண்கள் இருக்கிறார்கள்.

இந்தக் கருத்தரங்குக் குழுவின் தலைவரும் அகில இந்திய மகளிர் மாநாட்டுத் தலைவரும் திரு. பக்தவத்சலம் அவர்களின் திருமகளுமான திருமதி சரோஜினி வரதப்பன், இந்த ஆண்டு சென்னை நகர ஷெரீஃபாக நியமனம் ஆகியுள்ளார், என்பது இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் இனிப்பான செய்தி.

—யெஸ்பால்

○ சரோஜினி வரதப்பன்



ஜன்னல் வழியாக

சென்னைத் திரைகளில் சில பிற மொழிப் படங்கள்

இனியெங்கிலும்

'ஈநாடு' பற்றியும், அதன் அவலங்கள் பற்றியும் மட்டும் எடுத்துச் சொன்னால் போதாது: இன்னொரு சின்னநாடு எப்படி அநாயாசமாய்ப் போர் அழிவுகளுக்குப் பின் முன்னேறி வந்தது என்பது பற்றியும் நம் மக்கள் அறிய வேண்டும் என்பதால் ஐ. வி. சசியின் 'இனியெங்கிலும்'.

சின்ன நாடாய் ஜப்பான். ஒரு பாலே(?!) நடன நிகழ்ச்சிக்காக அங்கே குழுவினரை அழைத்துச் செல்கிற சாக்கில் வைரக் கடத்தல்களில் ஈடுபடுகிற ஒரு பெரிய மனிதர் அங்கே சிக்கலில் மாட்டிக் கொண்டு அவர் கலை அம்பேல் எனக் கைகழுவி விட, ஜப்பானில் குடியேறிவிட்ட இந்தியன் நம்பியாரின் உதவி அவர்களுக்குக் கிட்டுகிறது. அப்புறம் ஜப்பான் மக்களின் அயராத உழைப்பு பற்றியும், தேசபக்தி பற்றியும் சின்னச் சின்ன நீதிக் கதைகள்.

இந்தச் சாக்கில் ஹாங்காங், டோக்யோ என்று வெளிநாட்டில் படப்பிடிப்பு, ஒரு கோரஸ் பாடல் (இது இல்லாமலா?) எல்லாம் உண்டு. பின் குழுவினர் இந்தியா திரும்புவதும், நம் அரசியல் சாக்கடையைத் தூரெடுக்கச் செய்கிற முயற்சிகள் பற்றி பின் கதை. இது நம் தேச அரசியல் நிலைமை பற்றி அறிவிக்கும் கதைதான்.

பகேஷ், மண்ணின் மைந்தர்கள் வீதி யோரத்தில் மலஜலம் கழிவதையும், ஜப்பான் லீடர் ஒருவர் அந்தப் பையனைக் கண்டிப்பதையும், உடனே அவன் தாய் விரைந்து கட்டிக் கொண்டு வந்து தன் பையனைக் 'கொஞ்சம் தள்ளி' உட்கார வைப்பதையும்— மலையாளத்தில் தான் பார்க்க முடியும். ம். பரவாயில்லை!

ஜப்பான் காட்சிகளின் அநாவசிய நீளம், டாகுமெண்டரி பாணி ஒப்பிடுதல்கள், நேரடியாய் நீதி போதித்தல் போன்ற ஜவா முட்கள் குத்தினாலும், நம் அரசியலின் அடிப்படை அருவெறுப்புகளை மெனு போட்டுப் பரிமாறியிருப்பதற்காக சசியைப் பாராட்டலாம்.



○ இனியெங்கிலும்

அவதார்

கார் மருத்துவம் கைத்திறமை எனில்
குழந்தைகளே தன் பெருமை என
மார்தட்டும் ஏழைத் தந்தை
கை இழந்து முடங்கி விட,
இளைய பிள்ளை விலகிச் செல்ல,
முதியவளோ முகம் திருப்ப,
ஒற்றைக் கையும், ஒட்டிய இரு உறவுமே
பெற்றுத் தருமடா பெரும் செல்வமென
நிமிர்ந்து நிற்கிற ராஜேஷ்கன்னா,
கணவனின் கண்ணசைவைக்
கட்டளையாய் ஏற்றுத் தொழும் ஷபனாஆஸ்மி,
உதிரத்தை விலைபேசி எஜமானனின்
உத்தியோகக் கருவிகளை வாங்கி வரும் உத்தம
சச்சின்

என்று சில சொக்கத்தங்கப் பாத்திரங்கள்
'அவதாரின்' அஸ்திவாரங்கள்.
கற்பழிப்பும், சண்டைகளும், காதுகிழி
டிஸ்கோவுமாய்க்
களைத்துப் போன 'இந்தி' ரசிகர்களுக்கு
மாறுதலான விருந்து.
தமிழ் மக்களுக்கோ வாடிக்கையான
கண்ணீர்க் கதை.
என்றாலும் கொடுத்த காசுக்கு வஞ்சமில்லை.

முஜே இன்ஸாஃப் சாஹியே

ஒரு பெண்ணை விடாமல் துரத்தி, காதலை யாசித்து, அவசரமாய்க் கட்டிலுக்கு அழைத்துச் சென்று, அப்புறம் கைகழுவி விடுகிற பணக்கார இளைஞனை, சந்திக்கு இழுத்து, கோர்ட்டில் நிறுத்துகிற ஒரு துணிச்சல் திலகமாக ரத்தி. அவசர ஆசைகளின் தண்டனை பூராவும் பெண்ணுக்கு



○ முஜே இன்ஸாஃப் சாஹியே

மட்டுமா? ஆண்களை அலுங்காமல் விட்டு விடுவதா என்று வெகுண்டு எழுகிற பெண் வக்கீலாய் ரேகா. தவறு செய்வது தன் உரிமை என்கிற இளைஞனாய் மிதுன் சக்ரவர்த்தி. அவரின் பணக்கார வக்கீல் அப்பாவாய் டானி.

ரேகா— படத்தின் உயிரெலும்பு. நீதிமன்றக் காட்சிகளில் பார்க்கிற வக்கீல் ரேகாவிடம் தான் என்ன முதிர்ச்சி! அவர் வசனம் பேசுகிற சிறப்பில் தான் என்ன நளினம்! சொந்தக் கதையின் சோகம் — அதை வெளிக் கொணர்கையில் அவர் முகத்து உணர்ச்சிகளில் தான் எத்தனை உயிர்ப்பு!

தியேட்டரை விட்டு வெளியே வருகிற போது திருப்தியான நிறைவு படர்வதற்கு நல்ல கதையம்சமும், வித்தியாசமான ரேகாவும் தான் காரணம்.

MAD MAX 2

அதிர்ஷ்டமான எண்ணெய்க்கிணறைப் பாதுகாக்கிற குழு. அடாவடித் தனம், வன்முறை ஆகியவை பிறப்புரிமையாகக் கொண்ட இன்னொரு குழு. இடையில் ஆதிக்கப் போராட்டம். கதாநாயகன் மாக்ஸ் முதல் படத்தில் சண்டையிட்ட களைப்பு தீர்வதற்குள் இந்தப் போராட்டத்தின் இடையில் தன் நாய், தன் கார், ஓர் ஓட்டை ஹெலிகாப்டர் நண்பன் சகிதம் மூக்கை நீட்ட—

கார்களும், மோட்டார் சைக்கிள்களும் மோதுகின்றன. துப்பாக்கிகளும், வில்லம்புகளும் கோபமாய்ப் பேசுகின்றன. கத்திகளும் எரி சட்டிகளும் காற்றைக் கிழிக்கின்றன. ஒரு சொட்டு எண்ணெயைக் கண்ணில் காட்டாமல் குடம் குடமாய் ரத்தம் சிந்துகிற வன்முறைக் காட்சிகள்.

அதுவும் கடைசி பதினைந்து நிமிடங்கள்! ஹம்மா, எத்தனை பலிகள்!

ஆனால் அத்தனை கார் கவிழ்ப்புகளிலும், லாரி உருட்டல்களிலும் தமிழ் நாயகன் போல மாக்ஸ் காயங்களுடன் தப்பிப்பது வெளிநாட்டிலும் 'தேவர்கள்' இருப்பதைக் காட்டுகிறது.

அட்டகாசமான மேக்கப்—
அற்புதமான ஒளிப்பதிவு—
அயராத வன்முறைக்காட்சிகள்-
பார்க்கிற நமக்கோ பிரமிப்பு!

—ஜெயமன்மதன்

ஏன்?



டாக்டர் எஸ். சீதா



எஸ். வி. எஸ்.

கர்நாடக இசைக் கச்சேரிகளுக்குக் கூட்டம் ஏன் அதிகமாக வருவதில்லை? ஏன் இளைஞர்கள் அதை ஒதுக்கு கிறார்கள்? என்ன பயம் அவர்களைத் தடுக்கிறது?

''முன்னவ்வளவு வித்துவான்கள் நன்முகப் பாடுவதில்லை என்று சிலர் இதற்குக் காரணம் சொல்கிறார்கள். ஆனால் இது மிக மிகத் தவறு. வித்வான்களுக்குப் பொறுப்பு இல்லையா? முன்னேறும் ஆர்வமில்லையா? எனவே இந்த வாதம் ஒப்புக் கொள்ளும்படி இல்லை'' என்கிறார் சென்னைப் பல்கலைக் கழக இசைத்துறைத் தலைவி: பேராசிரியை டாக்டர் எஸ். சீதா.

நிறைய கூட்டம் இருந்து, ரசிகர்கள் ரசித்தால் தான் கர்நாடக இசை வளரும் என்பதில் டாக்டர் சீதாவுக்கு நம்பிக்கையே இல்லை. ஆர்வத்துடன் வரும், எண்ணிக்கையில் குறைந்த உண்மையான ரசிகர்கள் போதும். கர்நாடக இசைதான் ரேடியோ, டீவி மூலம் வீடுதேடி வருகிறதே! என்கிறார்.

டாக்டர் சீதா, சினிமா இசைத்துறையில் உள்ள பல இளைஞர்கள், சென்னைப் பல்கலைக் கழகம் நடத்தும் இசைப் பிரிவில் சேர்ந்து ஆதாரமாகக் கர்நாடக இசை பயிலக் காண்பிக்கும் ஆர்வத்தையும் சுட்டிக் காட்டினார்.

ஆனாலும் பல இளைஞர்களைக் கேட்ட போது கர்நாடக இசை என்பது ஏதோ தங்களுக்குப் புரியாத சம்பந்தமில்லாத விஷயம் என்று அவர்கள் நினைப்பதாகப் பட்டது. ராகம் தானம் புரியாததாலும் சாஹித்யம் அர்த்தமாகாததாலும் இவர்கள் விலகிச் செல்கிறார்கள். சங்கீதத்தை அனுபவிப்பதற்கு அதில் ஞானம் இருக்க வேண்டியது அவசியமில்லை. ரசிக்கக் காதுகளைப் பழக்கிக் கொண்டால் போதும், ஆனந்த சாகரத்தில் ஆழ்ந்து போகலாம் என்று இவர்களுக்கு எடுத்துக் கூறுவார் இல்லை. ''முன்பெல்லாம் எம். கே. டி., சின்னப்பா போன்றவர்கள் கர்நாடக ராகங்களில் அமைந்த சினிமாப் பாட்டுக்களைப் பாடினார்கள். அதைப் பாமரரும் ரசித்துத் திரும்பப் பாடினார்கள். ராகம், தாளம் தெரிந்தா பாடினார்கள்? அதேமாதிரி இன்றையக் கச்சேரிகளையும் ரசிக்க முடியும், அஞ்சி ஒதுங்க வேண்டியதில்லை என்று இன்றைய இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்'' என்றார் ஒருவர்.

'கச்சேரிகளில் இன்ன ராகம் பாடப்படுகிறது என்பதை, பாட்டுக்கு முன்னால் அறிவித்தால் நல்லது. அதில் தப்பேயில்லை. ராகத்தைப் புரிந்து கொண்டு, பாட்டை ரசிக்கும் பழக்கம் வந்து, மெல்ல மெல்லப் பாட்டுக்கள் பலவற்றை ராகத்தோடு தெரிந்து கொண்டு, இன்னும் ஈடுபாட்டுடன் ரசிக்கலாம்'' என்று ஒரு நடனக் கலைஞர் சொன்னார். இதே கருத்தை இவ்வாண்டு விருது பெறும் கலைஞர் ஒருவரும் தெரிவித்தார். ''நடன நிகழ்ச்சிகளைப் பாருங்கள்: இன்ன பாட்டு, இன்ன ராகம், இதற்கு இன்ன பொருள் என்று முன்கூட்டியே அறிவிக்கத் தொடங்கிய பிறகு, நடன நிகழ்ச்சிகளுக்கு வருபவர்களும், ரசிப்பவர்களும் எத்தனை அதிகமாகி விட்டார்கள்'' என்கிறார் இவர்.

''இளைஞர்களுக்கு என்றில்லை; புரியாததை யாருமே பொறுமையுடன், அமர்ந்து கேட்பார்களா? நீங்கள் நினைக்கிறபடி பயம் ஏதுவும் அவர்களைத் தடுக்கவில்லை. எளிமையாகப் புரிந்து கொள்ளும் அல்லது மனசைச் சட்டென்று தொடும் இசையும் மெல்லிசையும் கேட்க வசதியாக இருக்கும்பொழுது கஷ்டமானது என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிற ஒரு துறையில், அவர்கள் அநாவசியமாகத் தலையை நுழைத்துக் கொண்டு சங்கடப்படுவானேன்?'' என்றார் வேறு ஒருவர்.

''இசை நுணுக்கங்களை உணர்த்த முடியாவிட்டாலும் குறைந்தபட்சம் சாஹித்தியத்தைப் புரிந்து கொள்ளவாவது சபாக்கள் உதவலாம்'' என்கிறார் எஸ். வி. எஸ்., கல்கி ஆசிரியருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில். ''வியென்னாவில் வாஸந்தி 'ஆபரா' சென்றால் அங்கே பாட்டை அச்சடித்துத் தருகிறார்கள் என்னும்போது நாம் இங்கே அதை ஏன் செய்யக் கூடாது? ரொம்ப செலவாகி விடப் போவதில்லை. கச்சேரியில் பாடப்படவிருக்கிற தெலுங்கு, சமஸ்கிருத, கன்னடப் பாடல்களின் கருத்தைத் தமிழில் அச்சிட்டுத் தரலாமே! இளைஞர்களுக்கு மட்டுமின்றி எல்லோருக்குமே வசதியாக இருக்குமே?'' என்கிறார்.

—எஸ். வி.

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran



REGISTERED No. M. 4
Registered as a Newspaper in Sri Lan

